
ஓகஸ்ட் 12, 2001 ரூபா 14.00 அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்







# இலங்கை — அமெரிக்க ஒட்டு! இந்தியா போடுகிறது வெட்டு!!

# களம் செல்லக் காத்திருக்கும் புலிகள்



# நான்காம் கட்ட ஈழப்போர் புலிகள் தயாராகி விட்டனரா?

## சமீபத்திய தாக்குதலை அடுத்து வெளியாகும் ஊகங்கள்

கட்டுநாயக்க தாக்குதலை அடுத்து யுத்தம் மேலும் தீவிரமடைவதற்கான அறிகுறிகள் தென்படும் நிலையில் 'ஈழப் போர் – 4' தொடங்கிவிட்டதா என்ற கேள்வியைப் பலரும் எழுப்புகின்றனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இன பத்தி எழுத்தாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஈழப்போர்' ('EELAM WAR') என்ற பதம், ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த பின்னரான கடந்த இரு தசாப்த காலத்தை வகுத்துக் காட்ட இப்போதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிரான ஆயுதப் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டைத் தொடக்கமாகக் கொண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட 1987 வரையான காலப்பகுதியே ஈழப் போர்–I என்று அழைக்கப்படுகிறது.

இந்தியப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் மூண்டு அதன் பின் இந்தியப் படைகள் வடக்கு–கிழக்கில் இருந்து வெளியேறியது வரையான காலப்பகுதி இதற்குள் சேர்க்கப்படவில்லை.

அதன்பின் பிரேமதாச அரசுடன் புலிகள் நடத்திய பேச்சுக்கள் இடைநடுவில் முறிந்ததை அடுத்து 1990 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற யுத்த காலம் 'ஈழப்போர்– II' எனக் குறிப்பிடப்படுகிறது.

தொடர்ந்து சந்திரிகா அரசுடன் புலிகள் சமாதானப் பேச்சில் ஈடுபட்டு அந்தப் பேச்சுக்களும் இடை நடுவில் முறிந்தன. 1995 இல் மீண்டும் யுத்தம் மூண்ட போது அது 'ஈழப்போர் III' என அழைக்கப்படலாயிற்று.

கடந்த ஆண்டு நவம்பரில் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் விடுத்த சமாதான அழைப்பு, அதனைத் தொடர்ந்து புலிகள் மேற்கொண்ட ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம், அதன் விளைவாய் வடக்கு – கிழக்கு உட்பட நாட்டில் நீடித்து அச்சமற்ற நிலை மற்றும் நோர்வேயின் விசேட தூதர் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் என்பவற்றால் 'ஈழப்போர் III' – முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்பட்டது; நம்பப்பட்டது.

ஆனால் சமாதான முயற்சிகளில் தொய்வுநிலை ஏற்பட்டதை அடுத்து கடந்த ஏப்ரல் மாதம் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

அதன் பின்பு வடக்கு–கிழக்கில் சிறுசிறு தாக்குதல்களை மட்டுமே புலிகள் நடத்தி வந்தனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் புலிகள் தாக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுத்திய அச்சமற்றநிலை தொடர்ந்தது.

ஆயினும் கடந்த 22ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் அதனோடு இணைந்த சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மீது புலிகள் தொடுத்த வியத்தகு அதிரடி நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பின் ஆணி வேரையே ஆட்டங்காண வைத்து விட்டது. நாட்டின் பொருளாதாரத்தின் அத்திவாரத்தையும் உலுப்பிவிட்டது.

தங்கள் இலட்சியப் போரில் புலிகள் மீண்டும் தீவிரத்துடன் இறங்கிவிட்டார்கள் என்பதை இந்தத் தாக்குதல் முழு உலகுக்குமே பறைசாற்றிவிட்டதால் இது 'ஈழப்போர்' நான்கின் தொடக்கமே என்று வர்ணிக்கப்படுகிறது. தங்கள் சரித்திரத்தில் என்றும் இல்லாதவாறு மிக நீண்ட காலத்தை சமாதான முயற்சிகளுக்காக ஒதுக்கி வைத்த விடுதலைப் புலிகளின் தலைமை, சமாதானத்தின் மீது தமக்கிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை சர்வதேச ரீதியில் உணர வைப்பதில் வெற்றி கண்ட போதிலும் விடுதலைப் போராட்டத்தின் நகர்வில் முன்னெப்போதும் இருந்திராத வகையில் ஒரு தேக்க நிலையை எதிர்கொள்ள நேர்ந்தது.

சமாதான முயற்சிகள் என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து புலிகள் இயக்கத்தின் போரிடும் வலுவில் ஒரு தேக்கநிலையை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு முயன்றது.

ராஜதந்திர ரீதியில் அதனைச் செயற்படுத்துவதில் அரசு ஓரளவு வெற்றியீட்டியது என்றும் கூறலாம்.

ஸ்ரீலங்கா அரசின் இந்தப் போரியல் தந்திரத்தின் – உத்தியின் – ஆபத்தை உணர்ந்து கொண்ட புலிகளின் தலைமை தமது பக்கம் சர்வதேசத்தின் கண்டனங்கள் எழவாய்ப்பில்லாத



ஒரு சூழ்நிலையைப் பயன்படுத்தி பெரியதொரு தாக்குதல் மூலம் ஈழப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி அதற்குப் புத்துணர்ச்சி அளித்திருக்கின்றது.

கட்டுநாயக்கா தாக்குதல் உலகத் தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் உணர்வலைகள் இதனையே காட்டுவதாகக் கொள்ளலாம்.

தென்பகுதியில் தாக்குதல் எதனையும் நடத்துவதில்லை என்ற தமது நிலைப்பாட்டை விலக்கிக் கொண்டதான செய்தியை ஸ்ரீலங்கா அரசுக்கும், சர்வதேசத்துக்கும் உணர்த்தும் வகையிலும் வன்முறை வன்முறைக்கே வித்திடும் என்ற யதார்த்தத்தை அரசுக்கு இடித்துரைக்கும் நோக்குடனும் புலிகளின் வன்னித் தலைமையகம் கடந்த ஜூலை 2ஆம் திகதி அறிக்கை ஒன்றை விடுத்தது.

"புலிகளின் படைகள் மீது தற்போது நடத்தப்பட்டு வரும் ஆத்திரமூட்டும் வான் தாக்குதல்கள் சமாதான முயற்சியை சேதப்படுத்திவிடும். தமிழர் தாயகத்தில் யுத்த நிலைமையை மோசமடையச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் தவறான உத்திகளினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டி இருக்கும் என்பதை ஸ்ரீலங்கா அரசு உணர வேண்டும்" என்று தமது அறிக்கையின் இறுதி வாசகத்தில் புலிகள் எச்சரிக்கைத் தொனியில் குறிப்பிட்டிருந்தனர்.

சில உளவுத் தகவல்களைக் காரணம் காட்டி வடக்கில் புலிகளின் நிலைகள் மீது ஸ்ரீலங்கா வான்படை நடத்திய தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்களால் சீற்றமடைந்த புலிகள், அது தொடர்பாகத் தமது விசனத்தையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தி அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கை வெளியாகி 20 தினங்களுக்குப் பின்னர் புலிகளின் சீற்றத்தையும் சமாதான முயற்சிகளுக்கு மத்தியில் அரசு வன்முறை வழியை நாடியதன் விளைவையும் நாட்டு மக்கள் அனைவருமே உணர நேர்ந்துள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட சூழ்நிலையும், தாக்குதலின் பிரதான இலக்காக விமானப்படை இருந்ததும், தாக்குதலில் சிவிலியன்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாதவாறு புலிகள் கையாண்ட துல்லியமான உத்திகளும் கட்டுநாயக்க தாக்குதல் தொடர்பான சர்வதேசத்தின் கண்டனக்குரலைத் தணித்து விட்டது. இது புலிகளுக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

விமானப் படைக்குப் பாரிய சேதங்களை ஏற்படுத்தி அதன் செயற்பாட்டுத் திறனை ஓரளவு முடக்கியது மட்டுமன்றி தாமே வலிந்து யுத்தத்தில் இறங்கியதாகத் தம்மீது வழமையாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்காத வகையில் ஈழப்போராட்டத்தை தேக்க நிலைக்குள் சிக்கிவிடாமல் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதில் புலிகள் வெற்றி கண்டிருக்கின்றனர்.

1995 இல் சந்திரிகா அரசுடனான சமாதான முயற்சிகள் முறிவடைந்ததை அடுத்து திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி ஸ்ரீலங்காக் கடற்படையின் பாரிய கப்பல்கள் இரண்டை அழித்து நிர்மூலமாக்கியதோடு மூன்றாம் கட்ட ஈழப்போரினுள் புலிகள் பிரவேசித்தனர்.

இரண்டாவது ஈழப்போர் கால கட்டத்தில் (1990–1994) புலிகளின் செயற்பாடுகளுக்குப் பெரும் சவாலாய் விளங்கியது ஸ்ரீலங்கா கடற்படையே ஆகும்.

இந்தக்கால கட்டத்திலேயே பலமான கடற்புலிகள் அணியை புலிகளின் தலைவர் ஸ்தாபித்து அதனைப் பெரு வளர்ச்சி பெறச் செய்தார். இரண்டாம் கட்ட ஈழப்போர் காலத்தில் தமக்குச் சவாலாக இருந்த கடற்படையினருக்குப் பேரதிர்ச்சியைக் கொடுக்கும் வகையிலான பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியதன் மூலம் அன்று (1995 ஏப்ரல் 19) மூன்றாம் கட்ட ஈழப்போரை புலிகள் ஆரம்பித்தனர்.

ஆனால் இந்த முறை நான்காவது கட்ட ஈழப்போரின் ஆரம்பம் விமானப்படை மீதான அதிரடித் தாக்குதலுடன் தொடங்கப்பட்டிருக்கிறது எனக் கூறலாம்.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் 'ஓயாத அலைகள்' நடவடிக்கை மூலம் குடாநாட்டைக் கைப்பற்றப் புலிகள் முயன்றபோது யாழ். நகர் நோக்கி அரியாலை, நாவற்குழி ஊடாக முன்னேறி யாழ். நகராட்சி எல்லை வரை வந்த புலிகளின் அணிகள் அங்கிருந்து மேலும் முன்னேற முடியாமற் போனது. ஸ்ரீலங்கா விமானப்படை நடத்திய அகோர குண்டு வீச்சுக்களே அதற்குக் காரணமாய் அமைந்தன.

விமானக் குண்டு வீச்சுக்களால் தமது தரப்பில் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதையும், நாவற்குழி, கைதடி போன்ற பொட்டல் வெளிகளைத் தாண்டி யாழ். நகருக்குள் முன்னேற முடியாமற் போனதையும் புலிகள் பின்னர் ஒப்புக் கொண்டும் இருந்தனர்.

இதனாலோ என்னவோ புலிகள் இந்தமுறை காத்திருந்து விமானப்படையின் கோட்டை எனக் கருதத்தக்க விமானத் தளம் மீது பாய்ந்திருக்கிறார்கள்.

இனி நான்காம் கட்ட ஈழப்போர் எப்படித் தொடரப்போகின்றது என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

— ஆதர்ஷாதாஸ்

# மின்சாரம் கிடைக்காதோர் சைக்கிள் செயின் பழிவாங்கல்!

குடாநாட்டில் மின் விநியோகத்தைச் சீர் செய்ய உருப்படியான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. நாளாந்தம் மக்கள் அலுத்துக் கொள்கின்ற விடயங்களில் இந்த மின்சார விவகாரமே முக்கியமானதாக உள்ளது.

யாழ். நகரப் பகுதிக்கும் நகரை அண்டிய பிரதேசங்களுக்கும் மற்றும் வலிகாமத்தின் சில பகுதிகள், வடமராட்சி ஆகிய இடங்களுக்கும் இலங்கை மின்சாரசபை மின்சாரம் வழங்கி வருகிறது.

காங்கேசன்துறையில் இயங்கும் 'கூல் எயர்' நிறுவனம் மின்சார சபைக்குத் தேவையான மின்சாரத்தை ஒப்பந்தத்தின் படி உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. ஆனால் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக காலமாக இந்த மின் விநியோகம் சீர்குலைந்து போயுள்ளது.

'கூல்எயர்' நிறுவனத்தின் பாரிய ஜெனரேட்டர்கள் சில பழுதடைந்ததை அடுத்து பாவனையாளர்களுக்கு 24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்க முடியாத நிலை மின்சார சபைக்கு ஏற்பட்டிருக்கிறது.

குறைந்தது 18 மெகாவாட்ஸ் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் 10 மெகாவாட்ஸ் வரையான மின் வலுவையே 'கூல் எயர்' மூலம் பெற்றுக்கொள்ள முடிவதால் பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு மின்சாரத்தைச் சீராக விநியோகிக்க முடியாது திண்டாடுகிறது மின்சார சபை.

இதனால் அதி உச்சப் பாவனைக் காலமான மாலை 6 மணிமுதல் 10 மணி வரையான நேரத்தில் சுழற்சி முறையில் மின் வெட்டு அமுல் செய்யப்பட்டு வருகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் மழை வீழ்ச்சி குன்றியதால் நீர்மின் சாரத்தைச் சேமிக்கும் நோக்கில் மின் வெட்டு அமுல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெறும் தமக்கு ஏன் இந்த மின் வெட்டு வருடக் கணக்கில் தொடர்கிறது என்பது தெரியாமல் யாழ். மின்பாவனையாளர்கள் குழப்பமடைகின்றனர்.

அதி உச்சப் பாவனைக் காலமான முன்னிரவு வேளை ஒன்று விட்டு ஒருநாள் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. இதனால் மாதத்தில் சுமார் 15 நாட்கள் மட்டுமே இரவு நேரப் பயன்பாட்டுக்கு மின்சாரம் கிடைக்கிறது. எஞ்சிய 15 தினங்களும் மண்ணெண்ணெய் விளக்குகளையே நம்பியிருப்பதால் மின்சாரச் செலவு, மண்ணெண்ணெய்ச் செலவு என செலவு இருமடங்கு உயர்ந்து விட்டதாகப் பாவனை யாளர்கள் அலுத்துக் கொள்கின்றனர்.

மின்வெட்டு நேரம் போக ஏனைய சமயங்களிலும் அடிக்கடி மின்சாரம் துண்டித்துப் போகிறது. சட்டவிரோத மின் பாவனை, அதி உச்ச பாவனை என்று அதற்குக் காரணங்கள் பல கூறப்பட்டாலும் மொத்தத்தில் மின் விநியோகம் மிக மோசமாகச் சீர்குலைந்து போய் விட்டது.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி விட்டதால் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களின் நன்மை கருதி இரவில் மின்வெட்டு நேரத்தைக் குறைப்பதற்கு மின்சாரசபை உத்தேசித்திருக்கிறது. ஆயினும் இந்த முயற்சி சாத்தியப்படுமா என்பது சந்தேகமே.




மின் விநியோகம் சீர்குலைந்து போய் இருப்பதால் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு மின் இணைப்புகளைப் புதிதாக வழங்கும் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அருகில் உள்ள கிராமங்களில் மின்சாரம் ஒளிர்கின்ற போதும் தமது பகுதிக்கு மட்டும் மின்சாரம் வழங்காது பாரபட்சம் காட்டப்படுவதாகப் பொது மக்கள் மின்சாரசபை மீது கண்டனக் கணைகளைத் தொடுத்து வருகின்றனர். மின்சாரம் விநியோகிக்கப் படாத பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறும் முயற்சிகளும் பெருகி உள்ளன. தமக்கு மின்சாரம் தரப்படாததால் ஆத்திரமுற்றவர்கள் வேறுவிதமான நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர்.

நீர்வேலிப் பகுதியில் கரந்தன் என்னும் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆனால் ஏனைய பல பகுதிகளுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் உயர் அழுத்த மின் கம்பிகள் கரந்தன் பகுதி ஊடாகச் செல்கின்றன. அண்மையில் இந்தப் பகுதியில் உயர் அழுத்த மின் கம்பிகள் மீது சைக்கிள் செயின் எறியப்பட்டதால் சுன்னாகத்தில் இருந்து மின்சாரம் பெறும் பெரும் பிரதேசத்தில் இரவு நேரம் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுப் போனது.

இனம் தெரியாத நபர்கள் மின்கம்பியில் சைக்கிள் செயினை வீசியிருந்ததை மறுநாள் காலையிலேயே மின்சார சபைப் பணியாளர்கள் கண்டுபிடித்தனர். அப்போது அங்கு வாசகங்கள் எழுதப்பட்ட அட்டை ஒன்றை மின் கம்பத்தில் எவரோ கட்டிவிட்டிருந்தார்.

"எமது ஊருக்கு மின்சாரம் வழங்கப்படாவிட்டால் இந்த நிலைமை அடிக்கடி ஏற்படும்" என்று அதில் எழுதப்பட்டிருந்ததாம்.

சீரற்ற மின் விநியோகத்தினால் ஏற்படும் சமூக விளைவுகளில் இதுவும் ஒன்று. இப்படிப் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

குடாநாட்டில் சீரான மின்விநியோகத்தை மேற்கொள்ளத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அல்லது அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முடியாமைக்கான காரணங்களை மின் பாவனையாளர்களுக்குச் சம்பந்தப்பட்டோர் (மின்சாரசபை கூல் எயார் நிறுவனம்) பகிரங்கமாகத் தெளிவுபடுத்த வேண்டும். இதனை விரைந்து செய்யாவிட்டால் மின்சாரசபை மீது பாவ னையாளர்களின் வெறுப்பு அதிகரித்துச் செல்வதைத் தடுக்க முடியாது போகும்.

—வலிகாமத்தான்

# தகவல்கள் குவிகின்றன; ஆனால் புலனாய்வுகள் புஸ்வாணம்!

## தெற்குக்கு புலிகள் ஊடுருவிய பாதை கூட இன்னும் மர்மம்



மோப்பநாய் உதவியுடன் தடயங்கள் தேடுதல்

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவை மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பான முழு புலன் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை விசாரணைகளில் எந்தவித திருப்பமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை நடத்திவரும் சி.ஐ.டியினருக்கு இத்தாக்குதல் தொடர்பாக ஏராளமான தகவல்கள் தினமும் கிடைத்து வருகின்றன.

ஆனால் புலனாய்வுகளில் எதுவித திருப்பமும் ஏற்படவில்லை. புலிகள் ஆயுதங்களை எங்கிருந்து எந்த வழியாகக் கொண்டு வந்தார்கள் என்ற தகவல்கள் கூட இன்னும் வெறும் ஊகங்களாகவே இருந்து வருகின்றன.

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் புலிகளுக்கு முழு அளவு வெற்றியை அளிக்க வில்லை என்று புலனாய்வுத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தாக்குதல் நடத்த உட்புகுந்த புலிகளில் இருவர் தாக்குதலை வீடியோ படம் பிடிப்பவர்கள், இன்னொருவர் விமானமோட்டிக்கான அனுமதிப் பத்திரம் உடையவர். மற்றையவர் விமானப் பொறியியலாளர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் நால்வரும் புலிகளின் தலைவர் பிரபாகரனின் விருப்பத்தின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றதாகக் கருதப்படுபவர்களில் இந்த நால்வரும் அடங்குவர். தாக்குதல்கள் இறுதிக்கட்டத்தை அடைவதற்குச் சற்று முன்னரே இவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்த நால்வரில் இருவரின் திட்டம் மட்டுமே நிறைவேறியுள்ளது. அதாவது தாக்குதலைப் படம்பிடித்தது. ஆனால் மற்றைய இருவரினதும் இலக்குகள் எட்டப்பட வில்லை என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிக் — 27 அல்லது கிபிர் விமானத்தை செலுத்திச் சென்று பலாலி கூட்டுப்படைத்தளம் மீது தாக்குதல் நடத்துவதே இந்த இருவரினதும் திட்டம்.

பிரஸ்தாப விமானத்தில் தாக்குதலுக்குத் தேவையான குண்டுகள் இல்லாவிடில் வன்னிப்பகுதிக்குச் சென்று வெடிப் பொருள்களை நிரப்பக்கூடிய வசதிகள் முன் கூட்டியே ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தன. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப் படவில்லை.

### அதிரடித் தகவல்கள்

புலிகளின் தாக்குதல்களையும், அதனால் ஏற்பட்ட நட்டங்களையும் எண்ணிக் கொண்டிருக்கும் அரசுக்கு இந்தத் திட்டங்கள் தொடர்பான அதிரடித் தகவல்கள் அடி வயிற்றில் புளி கரைத்திருக்கின்றன.

விமானமோட்டிக்கான அனுமதிப் பத்திரம் பெறுவது என்பது சுலபமான காரியமல்ல. அதை இலங்கையில் பெறக்கூடிய சொற்ப வசதியிருப் பினும் தாக்குதலுக்கு ஆயத்தமாக வந்தவர் வெளிநாடு ஒன்றிலேயே அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

அதுவும், மிக்—27 தாக்குதல் விமானங் களை ஓட்டப் பயிற்சி பெறுவது மிகவும் கடினம். மிக்—27 தாக்குதல் விமானங்களை உற்பத்தி செய்யும் ரஷ்யாவில் "Sniper Pilot" என்ற பட்டம் பெற்ற விமானிகள் மட்டுமே மிக்—27 விமானங்களைச் செலுத்துகின்றனர். நன்கு பயிற்றப்படாத விமானிகள் இந்த விமானத்தின் முழுப் பயனைப் பெற முடியாது.

இந்த வகையில் நோக்குகையில் புலிகளின் மேற்படித் தாக்குதல் ஒரு நீண்ட காலத்திட்டமாகவே காணப்படுகிறது.

இவை எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுப் புலனாய்வுப் பிரிவுகள் விசாரணைகளை நடத்தித் தலையைப் பிய்த்துக் கொண்டுள்ளன.

விசாரணைகள் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

அவர்களில் பலர் தீவிர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். தற்போது விமானப் படையினர் உட்பட 15 பேர் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

### பாண் விநியோகித்தவர் கைது

விமான நிலையத்துக்கு ஒவ்வொரு நாளும் பாண் விநியோகிக்கும் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுக் கடுமையாக விசாரிக்கப்பட்டு வருகிறார்.

புலிகள் 20 லட்சம் ரூபா கொடுத்து பிரஸ்தாப பாண் வியாபாரியிடம் விமான நிலைய வரைபடத்தைப் பெற்றுக் கொண்டனர் என முதற்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்ததாகப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு தரப்பு விசாரணைகளையும் விஸ்தரித்து தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு உடந்தையானவர்களையாவது கண்டறியும் முயற்சியில் புலனாய்வு வட்டாரங்கள் ஈடுபடுகின்றன. ஆனாலும் முடிவாக இன்னும் ஒன்றும் கண்டறியப்படவில்லை.

புலிகள் தென்பகுதிக்கு எப்படி வந்து சேர்ந்தார்கள் என்ற விடயத்தில் கூட புலனாய்வுத் துறையினர் இன்னும் குழம்பிக் கொண்டிருக்கின்றனர்.

நீர்கொழும்பு, புத்தளம் கடற்கரைப் பகுதி வரை படகுகளில் வந்து பின்னர் பஸ்ஸில் வந்திருக்கலாம் என்றும், வவுனியாவிலிருந்து ரயிலில் வந்திருக்கலாம் என்றும் ஊகங்களைத் தெரிவிக்கின்றனரே தவிர உண்மை இதுவரை அறியப்படவில்லை.

தென் பகுதிக்கு வந்த புலிகள் ஒரே குழுவாய் கட்டுநாயக்கவினுள் ஊடுருவவில்லை என்பதை மட்டும் சி.ஐ.டியினர் திடமாக நம்புகின்றனர்.

ஏனெனில், விமானத்தளத்தைச் சூழ படையினர் மேற்கொண்ட தேடுதலில் நான்கு தொலைத் தொடர்புச் சாதனங்கள் மீட்கப்பட்டன. ஆகவே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களாகப் பிரிந்து தான் விமானத் தளத்தினுள் புலிகள் ஊடுருவியுள்ளனர். குழுக்களுக்கு இடையிலான உடனடித் தகவல் பரிமாற்றத்துக்கு இந்தத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என நம்பப்படுகிறது.

தாக்குதல் தொடர்பாக பெறப்பட்ட பிரதான ஆதாரம் நீர்கொழும்புப் பகுதிப் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கை.

அந்த அறிக்கையில்— புலிகள் தாக்குதலுக்குத் தேவையான வெடிப்பொருள்களை, சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராகவும் நாடாளுமன்ற ஒத்திவைப்பைக் கண்டித்தும் எதிர்கட்சிகள் நடத்திய பேரணியின்போது வாகனம் ஒன்றில் கடத்தி வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

வாகனம் பொலிஸாராலோ, படையினராலோ சோதனை செய்யப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் ஒட்டு மொத்தமாக வாகனத்தை வெடிக்க வைக்கும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

வெடிக்க வைக்கும் ஆழி, வாகனச் சாரதிக்கு அருகிலேயே இருந்தது.

### சுத்திகரிப்பாளர் வேஷத்தில் புலிகள்

* மின்வெட்டு நேரமே, புலிகள் இலக்கினுள் ஊடுருவ வசதியாக அமைந்தது. விமான நிலைய துப்புரவாளர்கள் வேஷத்திலேயே புலிகள் விமானத் தளத்தினுள் நுழைந்தனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படியான பல தரப்பினரின் புலனாய்வு அறிக்கைகளும் சி.ஐ.டியின் மேசையில் குவிகின்றன.

விசாரணைகளைத் தூண்டிவிடும் அதேவேகத்தில் தென் பகுதியின் — பிரதான — விமான நிலையங்களான இரத்மலானை, கட்டுநாயக்க மற்றும் கொழும்புத் துறைமுகம் என்பனவற்றின் மீதான பாதுகாப்பு நடவடிக்கைகள் புயல் வேகத்தில் நடைபெறுகின்றன.

கிழக்கில் திருகோணமலைத் துறைமுகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்காக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் ஒட்டுமொத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

— ஆதித்யன்


## தேவை

உடனடி வேலை வாய்ப்புக்கள்

- அனுபவம் உள்ள பத்திரிகையாளர்கள்

தமிழ், ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தினசரிப் பத்திரிகையில் பணியாற்றுவதற்கு

- புகைப்பட பத்திரிகையாளர்கள்

பொருத்தமானவர்களுக்கு பெரு நன்மைகள்

- மொழி பெயர்ப்பாளர்கள்

ஆங்கிலத்திலிருந்தும் சிங்களத்திலிருந்தும் தமிழுக்கு மொழிபெயர்க்கக் கூடியவர்கள்

- பத்திரிகைத்துறை பயிலுநர்கள்

உடனடியாகப் பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கும், பத்திரிகைத்துறையை தொழிலாகக் கொள்ள விரும்புபவர்களுக்கும் அரிய சந்தர்ப்பம்

- *வேண்டிய தகைமைகள் :—*

க.பொ.த வில் சித்தி, தமிழ் மொழியில் தேர்ச்சி.
ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் பரிச்சயம்.
எழுத்துத்துறையில் ஆர்வம்.

பத்து நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

த.பெ.இல. — 2129
கொழும்பு.




GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018




Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax :075-370018



என்டெனா பொருத்துதல்


Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk



அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி

12 ஒகஸ்ட், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

# சர்வஜன வாக்கெடுப்பு நடக்குமா?

மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு அதாவது சர்வஜன வாக்கெடுப்பு ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டபடி இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெறுமா?

கட்சிகளின் நிலைப்பாடும் அரசியல் சூழ்நிலையும் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறி வருகின்றன.

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்.

சர்வஜன வாக்கெடுப்பு எதற்கு? புதிய அரசமைப்புச் சட்டம் தேவையா என்று அரசாங்கம் விடுக்கும் கேள்விக்கு மக்களின் பதிலைப் பெறுவதற்குத்தான்.

புதிய அரசமைப்புச் சட்டம் எதற்கு? முக்கியமாகப் புதிதாக ஒரு தேர்தல் நடைமுறையைக் கொண்டுவருவதற்குத்தான்.

இப்போதுள்ள அரசமைப்புச் சட்டப்படி மாவட்ட அடிப்படையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே பொதுத் தேர்தலில் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள். அதனால் எந்த அரசியல் கட்சியும் போதியளவு பெரும்பான்மைப் பலத்துடன் தனிக்கட்சி அரசாங்கத்தை அமைக்க வழி இல்லை. சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் கூட்டு அரசாங்கத்தையே அமைக்க வேண்டி இருக்கிறது.

அப்படிக் கூட்டு அரசாங்கம் அமைத்தும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைப்பதில்லை. அதனால் நாட்டின் முக்கிய தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் போய்விடுகிறது.

இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் ஆணையைப் பெற்று புதிய அரசமைப்பைக் கொண்டு வர இருப்பதாக ஜனாதிபதி கூறுகிறார்.

புதிய அரசமைப்பு தேவையா என்ற கேள்விக்கு மக்கள் சர்வஜன வாக்கெடுப்பிலே "ஆம்" என்று பதிலளித்தாலும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாமல் புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாது. இது சட்ட நிபுணர்களின் கருத்து.

அது ஒரு புறம் இருக்க ஜனாதிபதி ஆரம்பத்தில் நினைத்தபடி சர்வஜன வாக்கெடுப்பில் அரசு வெல்லக்கூடிய நிலைமை இன்று இல்லை.

எதிர்க்கட்சிகளின் இடைவிடாத தீவிரபிரசாரத்தால், சர்வஜன வாக்கெடுப்புக்கு மக்களிடையே எதிர்ப்புக் கிளம்பிவிட்டது. அரசியல் கட்சிகள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிற்கின்றன.

அதனால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தாமல் விடுவதற்கு என்ன வழி என்று அரசாங்கம் இப்போது ஆலோசித்து வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தேசிய நல்லிணக்க அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. ஐ.தே.க விதிக்கும் நிபந்தனைகளைக் கேட்டதும் அரசாங்கத்துக்குத் தலை சுற்றுகிறது.

ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியும் அரசாங்கம் இன்னும் ஒரு வருடத்துக்குப் பதவியில் இருக்க தொடர்ந்து ஆதரவு அளிப்பதாகக் கூறுகிறது. ஆனால் அதற்கு அரசு சர்வஜன வாக்கெடுப்பைக் கைவிட வேண்டும், நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும். ஐந்து ஆணைக் குழுக்களை நியமிக்க வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறது.

புதிய அரசமைப்பில் மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக முந்திய தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் வருமானால் மலையக மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைந்துவிடும் என்று இ.தொ.கா உட்பட மலையகக் கட்சிகள் அனைத்தும் அஞ்சுகின்றன.

மலையகத்தொகுதி ஒவ்வொன்றிலும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் தொகுதிவாரித் தேர்தலில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்காமலும் போகக்கூடும்.

வடக்கு—கிழக்கில் உள்ள தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அந்தப் பிரச்சினை அவ்வளவாக இல்லை. ஆனால் பிற இடங்களில் உள்ள தமிழர்களும் முஸ்லிம்களும் பாதிக்கப்படுவர்.

அதேவேளை புதிய அரசியலமைப்பில் ஒற்றை ஆட்சிக்குப்பதிலாக சமஷ்டியை ஒத்த கூட்டு ஆட்சிக்கு இடமளிக்கப்படுகிறது என்று நம்பப்படுவதால் தமிழ்க்கட்சிகள் சில சர்வஜன வாக்கெடுப்பை ஆதரிப்பதா விடுவதா என்று தீர்மானிக்க முடியாமல் தடுமாறுகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று இதுவரை ஏமாற்றிக் காலத்தைக் கடத்தி வந்த இந்த அரசு எப்படியாவது வீழ்த்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் சில தமிழ்க் கட்சிகள் உள்ளன. முஸ்லிம் காங்கிரஸும் அரசுக்கு எதிர்தான்.

இந்த அரசை விழுத்தியும் நடக்கப்போவது ஒன்றுமில்லை; புதிதாக ஒரு அரசு வந்தால் அப்போதும் நடக்கப் போவது எதுவுமில்லை. சர்வஜன வாக்கெடுப்பும் எந்தப் பலனையும் தரப் போவதில்லை. அதனால் எதற்காக அலட்டிக் கொள்ள வேண்டும் என்று அலுத்துச் சலித்துக் கொள்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகம்.

# தனிநாடு உருவாகுவதற்கு அரசே வழிகோலுகிறது

## போரைக் காரணம் காட்டி அமெரிக்காவுடன் இலங்கை நெருக்கம்: இந்தியாவுக்கு புழுக்கம்

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பு, சர்வஜன வாக்கெடுப்பு அறிவிப்பு. இவற்றால் நாடு குழம்பிப் போய் இருக்கிறது.

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்த பிரயாணிகள் விமானங் கள் அழிப்பு! தமிழீழ விடுதலைப் புலிகள் கொடுத்த இந்த மரண அடியிலிருந்து மீள முடியாமல் திணறல்.


சந்திரிகா

ஈழப்போர் நான்கு வடக்கு கிழக்கில் எந்த நேரத்திலும் வெடிக்கும் நிலை— அதனால் நாடு கலங்கிப் போய் இருக்கிறது.

இவை போதா என்று இன்னும் ஒன்று. அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டியின் தாக்கம் இலங்கை யைக் கிடுகிடுக்க வைக் கிறது.

தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள இந்த ஆதிக்கப் போட்டியில் அமெரிக்காவின் பக்கம் இலங்கை சாயுமானால் ஆபத்து என்ற சமிக்ஞைகளை இந்தியா காட்டத் தொடங்கிவிட்டது.

கட்டுநாயக்கவில் புலிகள் துணிகரத் தாக்குதல் மேற்கொண்டு இராணுவ ரீதியில் அரசுக்குப் பெரும் பின்னடைவையும் நாட்டுக்குப் பாரிய பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்தினார்கள் அல்லவா?

அதை அடுத்து இந்தியா வெளியிட்ட கருத்து இந்திய அரசின் நிலைப்பாட்டைப் புட்டுக் காட்டிவிட்டது.

தாக்குதல் சம்பவம் குறித்து இந்தியா கவலையும் ஏமாற்றமும் மட்டுமே தெரிவித்தது. மற்றப்படி புலிகளின் தாக்குதலைக் கண்டிக்க வில்லை.

ஆனால் அமெரிக்கா புலிகளின் தாக்குதலை வன்மையாகக் கண்டித்தது.

கடந்த ஏப்ரலில் புலிகளின் நான்கு மாதகாலத் தன்னிச்சையான யுத்த நிறுத்தம் முடிவடைந்த கையோடு இலங்கைப் படைகள் தாம் நீண்ட காலமாகத் திட்டமிட்டிருந்த அக்கினிச் சுவாலை நடவடிக்கையை ஆரம்பித்தன.


வாஜ்பாய்

படையினருக்குப் பெரும் இழப்பு களையும் படுதோல்வியையும் ஏற்படுத்தினார்கள் புலிகள். அக்கினிச் சுவாலை அணைந்து விட்டது.

படையினர் மேற்கொண்ட அந்தத் தாக்குதல் நடவடிக்கையை இந்தியா விரும்ப வில்லை. தன்னுடைய அதிருப்தியை இலங்கை அரசுக்கு இந்தியா காட்டத் தவறவில்லை.

பின்னர் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றப் புலிகள் தயாராகிறார்கள் என்று உளவுப் பிரிவுத் தகவல் கிடைத்தாகக் கூறி பூநகரிப் பகுதியிலும் மற்றும் வடக்கின் பல பகுதிகளிலும் இலங்கை விமானப்படை குண்டு மாரி பொழிந்தது. பெரும் அழிவுகள் ஏற்பட்டன.

அதையும் இந்தியா வரவேற்க வில்லை. சன்னதம் கொண்டு சண்டையில் ஈடுபடுவதற்குப் பதிலாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண் டும் என்று இந்திய அரசு இலங்கை அரசுக் குப் புத்திமதி கூறியது.

"கட்டுநாயக்கத் தாக்குதலின் பின்னரும் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு அதே யோசனையைத் தெரிவித்துள்ளது. புலிகளுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்க்கும் படி இலங்கை அரசை இந்திய அரசு முன்னரை விட இப்போது வன்மையாக வற்புறுத்தி வருகிறது.

காரணம் என்ன? புலிகள் மீது இந்திய அரசுக்குப் புதிதாகப் பாசம் ஏற்பட்டு விட்டதா?

இந்திய மண்ணில் புலிகள் இயக்கம் இன்னும் தடை செய்யப்பட்டே இருக்கிறது.

இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த போது அவர்களுடன் போர் புரிந்த புலிகள் சுமார் 2000 படை வீரர்களைக் கொன் றார்கள் என்ற ஆத்திரம் இப்போதும் இந்திய அரசுக்கு உண்டு.

எஞ்சியிருந்த இந்தியப் பாதுகாப்புப் படையினரைத் தீண்டத்தகாதவர்கள் போல் அப்போதிருந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாச திருப்பி அனுப்புவதற்குப் புலிகள் கருவியாக இருந்தார்கள் என்ற வயிற்றெரிச்சல் இந்திய அரசுக்கு இன்னும் இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் புலி கள் கொன்றார்கள் என்ற கொதிப்பிலி ருந்து இந்திய அரசு இன்னும் விடுபட வில்லை.

அப்படியிருந்தும் இலங்கை அரசாங்கம் புலிகளோடு தொடர்ந்து போர் புரியாமல் அவர்களோடு பேசி பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாண வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது.

காரணம் என்ன?

புலிகள் மீது புதிய பாசமா?

தமிழ் மக்கள் கஷ்டப்படுகிறார்களே, அவர்களுடைய தாயகப்பகுதிகள் அழிந்து போகின்றனவே என்ற பரிவும் கவலையுமா?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய அரசின் சுயநலந்தான் மூல காரணம் என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டு கிறார்கள்.

ஜனாதிபதி புஷ்ஷின் தலைமையிலான அமெரிக்க வல்லரசு உலகம் முழுவதற்கும் தானே பொலிஸ்காரன் என்ற நிலையில் இருக்க ஆசைப்படுகிறது.


புஷ்

அப்படியே பிரதமர் வாஜ்பாயின் வழிநடத்தலில் இந்தியாவும் தானே தென் கிழக்கு ஆசியாவில் "சூப்பர் பவர்" என்றும் தன்னுடைய மேலாண்மை இந்து சமுத்திரப் பிராந்தியம் முழுவதிலும் படிய வேண்டும் என்றும் பேராவல் கொண்டிருக்கிறது.

அதற்காக எதையும் செய்ய இந்தியா தயார். அதற்கு எந்தக் கோணத்திலிருந்து எப்படி இடைஞ்சல் வந்தாலும் அதை முறியடிக்க இந்தியா திடசங்கற்பம் பூண் டுள்ளது.

தென்கிழக்கு ஆசிய மேலாண் மைதான் இந்தியாவுக்கு முக்கியம். மற்றவை எல்லாம் இரண்டாம் பட்சம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான இலங்கை அரசு புலிகளோடு யுத்தம் செய்து வருவதால்தான் ஆயுத மற்றும் இராணுவப் பயிற்சி உதவிகளுக்காக அமெரிக்கா, இஸ்ரேல், செக்கோஸ்லா வாக்கியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் ஒட்டுகிறது.

இலங்கைக்கு அமெரிக்காவோடுதான் நெருக்கம் அதிகம்.

அமெரிக்காவும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள நாடுகளில் இலங்கையின் நட்பையும் நெருக்கத்தையுமே பெரிதும் விரும்புகிறது. அதிலும் சுயநலம்தான்.

தென்கிழக்கு ஆசியாவில் இலங்கை கேந்திர ஸ்தானத்தில் அதுவும் இந்தியாவுக்கு மிக அருகில் இருக்கிறது.

இலங்கையில் கால் பதித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கு மானால் இந்தியா உட்பட தென் கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதை யும் கண்காணித்து ஒரு கை பார்ப்பதற்கு அமெரிக்காவுக்கு வசதியாக இருக்கும்.

பொருளாதார ஒத்துழைப்பு, இராணுவ மற்றும் பாதுகாப்பு உதவி, பயிற்சி என்பன போன்ற போர்வைகளில் இலங்கையில் மூக்கை நுழைத்து நிலையான இடத்தைப் பிடித்துக்கொள்ள அமெரிக்கா முயற்சி செய்து வருகிறது. அதற்கு இலங்கை இசைந்து, மசிந்து போகிறது. அதுதான் இந்தியாவுக்குக் கோபம்.

### காண்டீபம்

தன்னுடைய எதிர்ப்பை அமெரிக்காவுக்குக் காட்ட முகாந்திரம் இல்லாததால் இந்தியா தனது கோபத்தை இலங்கையிடம் காட்டி வருகிறது.

கடந்த வருடம் ஏப்ரலில் புலிகள் ஆனையி றவைப் படைகளிடமிருந்து கைப்பற்றினார் கள். அதை அடுத்து அவர்கள் யாழ்ப்பாணத்தை யும் முற்றுகையிட்டார்கள். அங்கே பல்லாயிரம் படைவீரர்கள் அகப்பட்டுக்கொண்டு வெளி யேற முடியாமல் தவித்தார்கள்.

இலங்கை அரசு இந்தியாவிடம் உதவி கேட்டது. மனிதாபிமான அடிப்படையில் மட்டுமே உதவி செய்ய முடியும். மற்றப்படி போர் செய்ய உதவ முடியாது என்று இந்தியா கையை விரித்தது.

இலங்கை உடனே மற்ற நாடுகளுக்கு அபயக் குரல் எழுப்பியது. முதலில் உதவிக்கு வந்த நாடு இஸ்ரேல். அடுத்து அமெரிக்கா, செக்கோஸ்லாவாக்கியா, பாகிஸ்தான், சீனா முதலான நாடுகளும் உதவ முன்வந்தன.

இலங்கைக்கு அமெரிக்கா உட்பட வேறு நாடுகளின் கூட்டு ஏற்படுவதைக் கண்டு விட்டு இந்தியா சற்றுப் படியிறங்கி வந்து இலங்கைக்கு சுகன்யா ரக கரையோர ரோந்துக்கப்பலைக் (OPV) கொடுத்து உதவியது. பணத்துக்குத்தான். பயிற்சிகள் வழங்கவும் சம்மதித்தது.

அந்தக் கப்பலில் இருந்து வான் கண்காணிப்புச் செய்வதற்காக மூன்று செடாக் ஹெலிகொப்டர்களை இலங்கைக்கு வழங்கவும் இந்தியா சம்மதித்திருந்தது.

ஆயினும் அவற்றை மட்டுமன்றி வேறு எந்த யுத்தக் கருவிகளையும் இலங்கை அரசுக்கு விற்பதில்லை என்று இப்போது இந்திய அரசு முடிவு செய்துவிட்டது.

இலங்கை அரசுக்கு அமெரிக்காவோடு நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க இந்திய அரசு இலங்கை மீது அதிகமாக வெறுப்பைக் காட்டத் தொடங்குகிறது.

இதை அறிந்தும் இலங்கை அரசு இந்தி யாவுடன் ஒத்துப் போக நினைக்காமல், முரண்டு பிடிக்கும் வகையில் கருத்துக் களை வெளியிட்டு வருகிறது.

விமானப்படை விமானங் கள் வடக்கில் குண்டுமாரி பொழிந்து பெரும் அழிவு களை ஏற்படுத்திய போது இந்தியா அது சரியல்ல என்று கருத்து வெளியிட்டதை முன்னர் குறிப்பிட்டோம். இந்தியா அப் படிக் கருத்து வெளியிட் டதை இலங்கையால் ஜீரணிக்க முடிய வில்லை.

எங்கள் மதிப்புக்குரிய வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வாயைத் திறந்தார்.

"பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டியது இறைமையுள்ள ஒரு நாட்டு அரசாங்கத்தின் கடமை. இந்தியாவின் கருத்து யதார்த்த பூர்வமற்றது. ஏற்றுக் கொள்ள முடியாதது" என்று கதிர்காமர் இந்தியாவுக்குச் சூடு போட்டார்.

இலங்கையும் இந்தியாவும் உண்மையான நட்பு நாடுகளாக இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய நன்மை இந்தியாவை விட இலங்கைக்குத்தான் அதிகம்.

அண்டை நாடான இந்தியாவை நட்பு நாடாக வைத்திருக்க இலங்கையால் முடிய வில்லை என்றால் அந்த நாட்டைப் பகைத்துக் கொள்ளாது இருப்பதுதான் இலங்கைக்கு நல்லது.

பகைத்துக் கொண்டால் என்ன நடக்கும்?

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை இலங்கையின் முன்னாள் ஜனாதி பதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா ஒருமுறை பசுமாடு என்றும் அவருடைய மூத்தமகனும் முன்னாள் பிரதமருமான ராஜீவ்காந்தியை கன்றுக்குட்டி (Cow and calf) என்றும் இந்தியாவில் நடந்த மாநாடு ஒன்றில் நகைச் சுவையுடன் குத்தலாகப் பேசினார். இந்திரா காந்தியின் முகம் கறுத்து விட்டது.

இன்றைய ஈழப் போருக்கும் அந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு உண்டு.

"உன் சொல்லால் என்னைப் புண்படுத்தினாய், என் நாட்டை அவமானப்படுத்தினாய், உன்னையும் உன் நாட்டையும் என்ன செய்கிறேன் பார்" என்று கருவிக் கொண்டு தான் இந்திரா காந்தி இலங்கைத் தமிழ் இளை ஞர்கள் இந்தியாவில் போர்ப் பயிற்சி பெற ஏற்பாடு செய்தார். அங்கே பயிற்சி பெற்ற தமிழப் போராளிகள்தான் இன்று இங்கே இலங்கை அரசை எதிர்த்துத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தமது உயிரைப் பணயம் வைத்துப் போராடி வருகிறார்கள்.

பாகிஸ்தான் இந்தியாவோடு உரசிக் கொண்டு இருந்தது. பாகிஸ்தானுக்குப் பாடம் கற்பிக்கத்தான் பாகிஸ்தானின் ஒரு மாகாணமாக இருந்த கிழக்கு பாகிஸ்தானை வங்காளதேசம் என்ற தனி நாடாக இந்தியா உருவாக்கிக் கொடுத்தது. அந்தக் கைங்கரியத்தைச் செய்தவரும் இந்திராகாந்திதான்.

புலிகள் மீது அனுதாபம் கொண்டோ அல்லது தமிழ் மக்களுக்காகப் பரிந்தோ அல்லாமல் இலங்கை அரசைப் பழி வாங்குவதற்காகவேனும் இந்தியா இங்கேயும் அப்படிச் செய்ய முனையும் அளவுக்கு இலங்கை அரசே நிலைமையை வளர்த்து வருவது தான் வினோதம்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆயுத நகர்த்தல் படையினருக்கு பெரும் சவால்

## அள்ளிச் சுருட்டிய நிதியுடன் அடுத்த கட்ட விமானக் கொள்வனவு

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் விமானத் தளம் ஆகியவை மீதான தாக்குதல்கள் தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகப் பல புதுப் புதுத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

தாக்குதல் நடத்திய புலிகளின் வீர, தீரத்தையும் அரசின் இழப்புக்களையும் ஏற்றுக்கொண்டுள்ள அனைவரும், இலக்கை நோக்கிப் புலிகள் ஆயுத தளவாடங்களை எப்படி நகர்த்தினார்கள் என்பது குறித்து இன்னும் தலையைப் பிய்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஜூலை மாதம் என்றவுடனேயே கொழும்பில் பாதுகாப்புக்கெடுபிடிகள் தீவிரமாகின. முப்படையினரும் முகர்ந்து திரிந்து சோதனைகள் என்ற பெயரில் அட்டகாசங்களைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டகையோடு அதியுயர் பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனப்படுத்தி பாதுகாப்பு விடயத்தில் தனது கவனத்தையும் ஜனாதிபதி வெளிப்படுத்தினார்.

இத்தனை கெடுபிடிகளுக்கும் மத்தியில் கட்டுநாயக்கவுக்கு ஆயுதங்களைப் புலிகள் நகர்த்தியுள்ளனர் என்றால் அது அவர்களின் அதீத ஆற்றலே என்று கூறப்படுகிறது.

விமானத்தள தாக்குதலுக்கு புலிகள் மேற்கொண்ட ஆயுத நகர்வு சற்று வித்தியாசமானது எனக் கருதப்படுகிறது.

ஜூன் 7ஆம் திகதி விமானப்படையின் A-32 அன்ரனோவ் விமானம் வில்பத்துக் காட்டுப் பகுதிக்கு மேலாகச் சென்றுக்கொண்டிருந்த சமயம் புலிகள் விமானத்தை நோக்கித் தாக்கினர் எனவும் ஆனால் விமானம் தப்பிவிட்டது எனவும் இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரட்ன தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி தாக்குதல் தொடர்பாக இடம் பெற்ற விசாரணைகள் மூலம் புலனாய்வுத் தகவல்கள் சில வெளியாகின.

அதன்படி வில்பத்துக் காட்டுக்குள் பத்து மைல் தூரத்திலுள்ள எழுவான் குளம், ஈச்சந்தீவு பகுதிகளை உள்ளடக்கிய புலிகளின் தளம் ஒன்று உள்ளது என்றும் கனரக ஆயுதங்களின் ஒரு தொகுதி இங்கேயும் களஞ்சியப்படுத்தப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், வனப்பகுதிக்குள் சிறிது தூரம் சென்ற படையினர் அப்பகுதி கிராமவாசிகளின் உதவியுடன் நோட்டம் விட்டுவிட்டுத் திரும்பிவிட்டனர்.

இந்த வனப்பகுதிக்குள் புலிகளின் தளம் உண்டு என்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு படைத் தரப்பு பல கட்டுக்கதைகளையும் வதந்திகளையும் புனைவது உண்டு. அதை அப்படியே ஊடகங்களால் அரசு தரப்பினர் வெளித்தள்ளியும் உள்ளனர்.

தற்போது முக்கிய விடயம் என்னவெனில், வில்பத்து வனப்பகுதிக்குள் உள்ளதாகக் கூறப்படும் ஆயுதக் களஞ்சியத்திலிருந்துதான் கட்டுநாயக்கவுக்கு ஆயுதங்கள் நகர்த்தப்பட்டன என்பது. புலனாய்வு வட்டாரங்கள் இது குறித்து ஆராய்ந்து வருகின்றன.

A3 இயந்திரத் துப்பாக்கிகள், T-56 துப்பாக்கிகள், 40 mm கிரனேட் லோஞ்சர்கள், RPG லோஞ்சர்கள், இலகு ரக டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், LMG இலகு ரக இயந்திர துப்பாக்கிகள், வெடித்துச் சிதற வைக்கும் பிளாஸ்ரிக் கவர் குண்டுகள், இலக்குகளில் ஒட்ட வைக்கும் காந்த கவரிட்ட குண்டுகள், அவற்றை வெடிக்க வைக்கும் மாணிகள், மோட்டார்கள், ஷெல்கள், நைற் விஷன் கண்ணாடிகள் என ஒரு தொகை ஆயுதங்களை கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதலுக்குப் புலிகள் பயன்படுத்தியுள்ளனர்.

இவற்றை விமானத்தளத்துக்குள் புலிகள் எவ்வாறு எடுத்துச் சென்றனர்? இது விடயத்தில் புலனாய்வுகளுக்குள்ளும் 'கசமுசா' எனத் தகவல்.

இவை இவ்வாறிருக்க,விமானப்படைத்தளத் தாக்குதல் சம்பவம் தொடர்பான கவலையை விட்டெறிந்து விட்டு விமானப் படையை மறுசீரமைப்பதற்கான முயற்சிகளில் அரசு இறங்கியுள்ளது.

நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை தனது கௌரவம் பாதிக்கப்படக்கூடாது என்ற வகையில் கிடைக்கும் நிதிகளை எல்லாம் அள்ளிச் சுருட்டி மீண்டும்



றுத்லாந்தில் கடந்த ஜூலை 26 – 29இல் நடைபெற்ற The Royal International Air Tattoo விமானக் கண்காட்சியில் F-16 விமானம்.

விமானக் கொள்வனவுக்கு அரசு ஆயத்தமாகிவிட்டது.

இந்த மாதிரி இக்கட்டான சூழ்நிலைகளில் தனக்குதவும் இஸ்ரேலையும் இதர நாடுகளையும் அரசு நாடியிருக்கிறது. சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் உடனடி உதவிகளை அது கோரியிருக்கிறது. இதன் அடிப்படையில் பாகிஸ்தானிடம் நான்கு மிக் 27 ரக தாக்குதல் விமானங்களை விமானப்படை வாடகைக்கு வாங்கவுள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச விமானப்படை ஒருங்கிணைப்பு அதிகாரி ஒருவர் பாகிஸ்தான் செல்லவுள்ளார் என விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வான்படையில் தாக்குதல் விமானங்களின் பற்றாக்குறை பேரிடியாக விழுந்திருக்கிறது.

கடந்த மே மாதம் தான் ரஷ்யாவிடமிருந்து நான்கு மிக் 27 ரக தாக்குதல் விமானங்கள் 85 லட்சம் அமெரிக்க டொலர்களுக்கு கொள்முதல் செய்யப்பட்டன.

இதற்குப் புறம்பாக இவற்றுக்கான உதிரிப் பாகங்கள் 5.3 இலட்சம் அமெரிக்க டொலருக்கு கொள்முதல் செய்யப்பட்டன. இவை அன்ரனோவ் – 124 விமானம் மூலம் சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து இலங்கைக்கு எடுத்துவரப்பட்டன.

இவை வந்து சேர்ந்தவுடன் இலங்கை வான்படையில் மிக்–27 ரக தாக்குதல் விமானங்களின் வலுவுடன் 'ரென் ஸ்குவாட்ரன்' (Ten Squadron) அணி உருவாக்கப்பட்டது. இந்த அணியில் எட்டு மிக் – 27 ரக விமானங்களும், 13 கிபிர் விமானங்களும் இடம் பெற்றிருந்தன.

புலிகளின் தரவுகளின்படி, கட்டுநாயக்க தாக்குதலை அடுத்து விமானப்படையின் ரென் ஸ்குவாட்ரன் அணி இரண்டு மிக் –27 ரக விமானங்களையும், நான்கு கிபிர் விமானங்களையும் இழந்து நிற்கிறது. இதன் தேவையை நிவர்த்தி செய்வதற்காகவே தற்போதைய உடனடி கொள்முதல் நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன.

இஸ்ரேலுடனான உறவுகள் இன்னும் இறுக்கமடைந்து வரும் இந்த வேளையில் ஆயுதங்களை மேலும் இறக்க இஸ்ரேல் தயாராக உள்ளது.

இஸ்ரேல், இலங்கைக்கு இந்தத் தடவையும் வானூர்திகளை வழங்க உத்தேசித்திருப்பதாகத் தகவல்.பலஸ்தீன தீவிரவாத அமைப்பான ஹமாஸ் மீதான வான் தாக்குதல்களில் இஸ்ரேல் F– 16 என்ற தாக்குதல் விமானத்தையே அதிகம் பயன்படுத்துவது வழக்கம்.

இந்த வான் தாக்குதல்கள் மூலம் இஸ்ரேல் பாரிய சேதங்களை இதுவரை உண்டு பண்ணியிருக்கிறது.

இந்த மாதிரியான ஒரு தாக்குதலைத் தான் புலிகளின் நிலை மீது அரசு மேற் கொள்ளத் தயாராகிறது. இலங்கை இஸ்ரேலிடம் இந்த விமானத்தை கொள்வனவு செய்ய முயல்கிறது.

ஆனால், விமான எதிர்ப்பு ஏவுகணை விடயத்தில் புலிகள் அசட்டையாக இருப்பதாகத் தெரியவில்லை.

கட்டுநாயக்க மீதான தாக்குதலை அடுத்து இனி விமான நிலையப் பாதுகாப்புப் பலப்படுத்தப்படும். எனவே இனி அவ்வாறானதொரு தாக்குதலுக்கு முயற்சிப்பதில் பலன் இல்லை.

ஆகவே நவீன ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்முதல் செய்யும் நடவடிக்கையில் புலிகள் கவனம் கொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 17ஆம் திகதி பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் விமானக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு இரண்டு ஆண்டுக்கு ஒரு தடவை இடம் பெற்று வருகிறது. இந்த ஆண்டு பாரிஸின் வடக்கில் உள்ள விமான நிலையம் ஒன்றில் இந்த கண்காட்சி இடம்பெற்றது. 43 நாடுகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட விமானங்கள் கண்காட்சியில் பங்குபற்றின. அவற்றில் 200க்கும் மேற்பட்டவை நவீன ரக விமானங்கள்.

அந்தக் கண்காட்சியில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் வகை வகையாகப் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இந்தக் கண்காட்சிக்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் பிரசன்னமாகி விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தொடர்பான விவரங்களைப் பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது. SA–16 இக்லா (IKLA), மற்றும் அதிக உயரம் வரை சென்று தாக்கக் கூடிய மிஸ்ட்ரல் விமான எதிர்ப்பு ஏவுகணை லோஞ்சர்கள் (Mistral Ground to Air Missile Launcher) என்பன தொடர்பான விவரங்களை அங்கு புலிகள் பெற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ரக ஏவுகணைகள் மூலம் ஆறாயிரம் மீற்றர் உயரத்தில் செல்லும் விமானங்களையும் தாக்க முடியும். அந்த வகையில் படையினரின் வான் தாக்குதல்கள் குறித்து புலிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுகின்றனர்.

படைத் தரப்பு தனது ஆஸ்தான விநியோக வழியாக வான் வழியையே நம்பியிருக்கிறது. ஆனையிறவுப் படைத் தள வீழ்ச்சிக்குப் பின்னர் வடக்கு இராணுவத்தினருக்கான பெரும்பாண்மை வழங்கல்கள் வான் வழியாகவே நடைபெறுகின்றன.

ஏனெனில் கிழக்குக் கடற்கரைப் பிராந்தியத்தில் புலிகளின் ஆதிக்கம் மிகுந்து காணப்படுகிறது. தனது தேவைகளை மட்டுமன்றி புலிகள் மீதான தாக்குதல்களில் கூட வான் வழித் தாக்குதலையே அரசு மிகவும் நம்பியிருந்தது. ஏனெனில் தனது தரப்புச் சேதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு இதுவே உகந்ததாகக் கருதப்படுகிறது.

அந்த வகையில் தற்போது அரசின் நிலைவரம் படு பயங்கரம். அதற்காக வானூர்திக் கொள்வனவில் தீவிரமாகியுள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் முதலிட்ட நிதிகளைக் கொண்டு தான் இந்த வானூர்திக் கொள்வனவுகள் இடம் பெறப் போகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

—எறியன்

# நட்டத்தால் அம்மணி சீற்றம் பொருளாதாரத்தில் பாரிய தாக்கம்

கட்டுநாயக்க விமானத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல் நாட்டின் பொருளாதாரத்துக்கு சாவு மணி அடித்திருக்கிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உயிர் நாடி மொத்தத் தேசிய உற்பத்தி. இது தேர்ச்சி அடைய வேண்டிய சகல வழிகளும் இந்தத் தாக்குதலினால் தடைப்பட்டுள்ளன.

அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இலங்கையின் இயற்கை எழில் வழி சமைத்த போதும் தற்போதைய நிலைமை காரணமாக வெளி நாட்டவர்கள் இங்கு வர மறுக்கிறார்கள்.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடி, பதவியிலுள்ள அரசாங்கத்தை வளைத்துப் பிடித்திருக்கிறது. அரசோ மீளமுடியாமல் சிக்கித் தவிக்கிறது.

அதே வேளை – 'ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இந்த நெருக்கடிகளிலிருந்து மீளும் முயற்சியின் முதல் படியாக 12 நாடுகளுக்கான தனது விமானச் சேவைகளை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது. சேவை நடை பெற்றுவரும் 25 நாடுகளுக்கான விமானக் கட்டணங் களை பத்துச் சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அரைவாசி வானூர்தி வலுவை இழந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், தான் வேலைக்கமர்த்திய பலரை வேலை நீக்கம் செய்து 'டாட்டா' காட்டி விட்டது.

இதற்கு சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டம் (Voluntary Service Retirement) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 900 பேர் வீடு சென்று விட்டனர். தற்போது 4100 பேர் மட்டுமே வேலையில் உள்ளனர். மேலும் 78 வெளிநாட்டு விமானிகள் உட்பட ஆயிரம் பேரை வேலையிலிருந்து இடைநிறுத்தப் போவதாகவும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இது இப்படி இருக்க இலங்கைக்கு வந்து போகும் வெளிநாட்டு விமானங்களுக்கு சர்வதேச காப்புறுதிக் கூட்டுத் தாபனங்கள் காப்புறுதிக் கட்டணத்தை அதிகரித்துள்ளன.

'தாய்' விமான சேவைக்கு 102 லட்சம் ரூபா மேலதிகமாகவும், சிங்கப்பூர் எயார் லைன்ஸுக்கு ஒரு லட்சம் டொலர்கள் மேலதிகமாகவும், எமிரேட்ஸ் விமான சேவைக்கு ஒரு லட்சம் டொலர்கள் மேலதிகமாகவும் சர்வதேசக் காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் கட்டணங்களை உயர்த்தியுள்ளன.

ஒரு விமான சேவை மேலதிகமாக ஒரு பறப்பை மேற் கொள்வதானால் மேலதிகமாக ஐம்பதினாயிரம் டொலர்கள் செலுத்த வேண்டும். அதேவேளை ஒரு பயணிக்கான மேலதிக காப்புறுதிக் கட்டணம் 20 முதல் 50 டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கைக்கு வரும் கப்பல்களுக்கும் சர்வதேசக் காப்புறுதிக் கூட்டுத் தாபனங்கள் காப்புறுதிக் கட்டணங்களை அதிகரித்துள்ளன.

இப்படியான ஓர் இழுபறிக்குள் விமான நிலையமும், துறைமுகங்களும் சிக்கியுள்ளன.

நாட்டில் நிலவும் யுத்த சூழலினால் ஏற்கனவே தட்டுத் தடுமாறிக் காலத்தை ஓட்டும் உல்லாசப் பிரயாணத்துறை விமான நிலையத்தில் இடம்பெறும் தொடர்ச்சியான நெருக்கடியால் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ளவிருந்த உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள சுமார் ஐயாயிரம் உல்லாசப் பயணக் குழுக்கள் இலங்கைக்கான பயணத்தை ரத்துச் செய்துள்ளனர்.

இவர்களை அழைத்து வரும் உல்லாசப் பயண முகவர் நிறுவனங்கள் விடுத்த ஆலோசனையின் பிரகாரம் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கான தமது பயணங் களை நிறுத்தி விட்டனர்.

வோக்கர்ஸ்டுவர்ஸ் நிறுவனம் (Walkers Tours) இரண்டாயிரம் உல்லாசப் பயணிகளதும் 'ஜெற் விங்' (Jet wing Travels) நிறுவனம் 800 உல்லாசப் பயணிகளினதும் இலங்கைக்கான பயணத்தை ரத்துச் செய்துள்ளன.

கண்டி எசல பெரஹர கதிர்காம உற்சவம் போன்ற உல்லாசப் பயணிகளைக் கவரும் நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்ற போதும் கட்டுநாயக்க சம்பவமும் அதனைத் தொடர்ந்து நடைமுறைக்குவந்த கறாரான நடவடிக்கைகளும் உல்லாசப் பயணத்துறையின் இயல்பு முறையில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்து விட்டன.

சில மாதங்களுக்கு முன் இலங்கையில் நடைபெற்ற இலங்கை – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரின் போது ஆயிரக்கணக்கான வெளிநாட்டுக் கிரிக்கெட் ரசிகர்கள் இலங்கைக்கு வந்திருந்தனர்.

இவர்களுக்கு வேண்டிய வசதிகளுக்கு வழிசெய்து கொடுத்து ஹொட்டேல்கள் பெருமளவு ஆதாயம் பெற்றிருந்தன.

தற்போதைய நிலையில் வெளிநாட்டவர்களின் வருகை இனிமேலும் தொடருமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதேவேளை சர்வதேச போட்டித் தொடர்களை இலங்கையில் நடத்த போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் இசைவார்களா? என்பதும் கேள்விக் குறியே.

இலங்கை கடந்த ஆண்டு மாத்திரம் உல்லாசப் பயணிகள் வருகை மூலம் ஒன்பதினாயிரம் கோடி ரூபாவை எட்டிப்பிடித்திருந்தது.

கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல் நாட்டின் முதுகெலும்பையே முறித்து விட்டதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

— சேனாவரையன்

# பாரிஸ் மாணிக்கவிநாயகர் ஆலயம் 6 ஆவது தேர்த்திருவிழா

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தாம் தப்பினோம் பிழைத்தோம் என்று சும்மா இருக்க வில்லை. உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், அவர்கள் தமது தாயகத்துக்காகவும் தமது சகோதரர்களுக்காகவும் உரிமைக்குரல் எழுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.

அதே வேளை தமிழையும் சைவத்தையும் வளர்க்க அயராது உழைத்தும் வருகிறார்கள். அது மட்டுமா? தமிழ்க் கலை கலாசார விழுமியங் களைப் பேணிப் பாதுகாத்தும் வருகிறார்கள்.

லண்டனில் ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சி பற்றிய செய்தி யையும் படங்களையும் இதே பக்கத்தில் காண்கிறீர்கள்.

பிரான்ஸ் நாட்டுக்குள் இடம் பெயர்ந்துள்ள தமிழர் களின் சைவத் தொண்டுக்குச் சான்றாக இதோ ஓர் நிகழ்ச்சி.

தலைநகர் பாரிஸில் உள்ள ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய உற்சவம் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 3ஆம் திகதி வரை நடைபெற இருக்கிறது.

செப்டெம்பர் 2ஆம் திகதி தேர்த்திருவிழா 3ஆம் திகதி சங்காபிஷேகமும் திருவூஞ்சலும்.

இந்த விழாக்களிலே பிரான்ஸின் பல்வேறு நகரங்களிலும் உள்ள தமிழ் மக்கள் மட்டுமன்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வந்து கலந்து கொள்கிறார்கள்.

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்த் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்களையே இங்கு காண்கிறீர்கள்.





# லண்டனில் தமிழ் உணர்வலைகள் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில்!



மேடை அலங்காரம்

இலங்கை வாழ் தமிழ் மக்களின் சுதந்திரம், சுய நிர்ணய உரிமை, சமத்துவம், தாயகக்கோட்பாடு ஆகியவற்றை வலியுறுத்தும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு இலங்கையின் வடக்கு கிழக்கில் போல் லண்டனிலும் உணர்ச்சி பூர்வமாக நடை பெற்றது.

ஐயாயிரத்துக்கும் மேலான தமிழ் மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

லண்டனின் பெயர் பெற்ற 'வெம்பிளி அரினா' என்ற அரங்கு குட்டி யாழ்ப்பாணமாகக் காட்சி அளித்தது.

இந்த நிகழ்வை பிரித்தானிய தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான போல் பொயிரெங் உட்படப் பலர் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் உரையாற்றினர்.

''எனது சொந்த அனுபவத்தின் படி மனிதர் களிடையே சமத்துவமும் மதிப்பும் இல்லாதபோது சமாதானத்தை ஒரு போதும் அடைய முடியாது. ஒருவரது மொழியையும் மதத்தையும் அவரது விழுமியங்களையும் நாம் மதித்துச் செயற்படு வதன் மூலம் சமாதானமும் அமைதியும் ஏற்படும்.''

இப்படி இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் பொயிரெங் கூறினார்.

மௌன அஞ்சலி மற்றும் மங்கள விளக்கேற் றல் ஆகியவற்றுடன் நிகழ்வு ஆரம்பமானது.

போல் பொயிரெங் தமது உரையில், மேலும் கூறியதாவது;—

''தமிழர்கள் தமது சொந்த நாட்டில் அனு பவிக்கும் துன்பங்கள் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''நாம் எந்த தேசியத்தை உடையவர்களாக இருந் தாலும் பலதரப் பட்ட சாதி, மத, மொழி சார்ந்த மக்கள் வாழக் கூடியதான உகந்த சூழலை எவ் வாறு அமைக்கப் போகின்றோம் என்பதே பிரதானமான கேள்வி ஆகும்.

''எமக்குள் எவ்வளவு வேறுபாடுகள் இருந்தாலும் எமக்கு பொதுவான மனித நாகரிகம் ஒன்று உள்ளது. அந்த நாகரிகம் இல்லையேல் அதைப் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் கண்டறிய வேண்டும்'' — என்றார்.

தமிழர்களின் ஒற்றுமைக்குப் பொயிரெங் பாராட்டுத் தெரிவித்தார். பொங்கு தமிழ் நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தி உறுதிமொழி எடுக்கப் பட்டதற்கு நன்றியும் தெரிவித்தார்.

பிரித்தானிய தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த ஏ.சி.சாந்தன் சங்கம் ஆற்றி வரும் பணிகள் பற்றிக் கூறுகையில் ஈழத்தமிழ் மக்களின் துயர்துடைக்கப் பிரித்தானியா விலிருந்து பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப் பினர்கள், பிரித்தானிய மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் ஆகியோருடன் இணைந்து தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை வெளிப் படுத்தி உலகறியச் செய்து வருவதாகவும் அவர் சொன்னார்.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் முதலாவது கலை நிகழ்ச்சியாக நாட் டியம் இடம் பெற்றது.

பத்மினி குணசீலனின் மாணவிகள் நாட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். இவற்றிற்கான இசையையும் பாடல்களையும் காசி ஆனந்தன் வழங்கினார். சிவனிடம் ஈழத் தமிழரின் விடிவை வேண்டி நிற்பதாக அவரது பாடல் ஒன்று அற்புதமாக அமைந்திருந்தது.

பொங்கு தமிழ் நிகழ்வில் அடுத்ததாக இடம் பெற்ற நாட்டிய நாடக நிகழ்ச்சியை பிரித்தானிய தமிழ்க் கலை கலாசார மன்றத்தினர் நடத்தினர்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாறு கூறும் இந்த நாட்டிய நாடகத்தை அன்ரன் பொன்ராஸ் தயாரித்து வழங்கினார்.

சேர, சோழ, பாண்டிய அரசுகள் வெளிநாட்டு அரசுகளின் ஆதிக்கத்தில் இருந்து இறுதியில் விடுதலை பெறுவதாக சித்திரிக்கப்பட்ட நாடகம் ஈழத் தமிழர்களும் இறுதியில் விடுதலை பெறுவார்கள் என்று உணர்த்தியது.

இந்த நிகழ்வில் 'இசை வெள்ளம்' (Flood of Music) என்ற புதிய இசைத் தொகுப் பொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் அவலங்களை வெளிப்படுத்துவதாக அமைந்த இப்பாடல் தொகுப்பின் முதற்பிரதியை புஷ்பவனம் குப்புசாமி பெற்றுக் கொண்டார்.

புஷ்பவனம் குப்புசாமி காசி ஆனந்தனின் பாடல்களையும் பாடி பார்வையாளர்களை தமிழீழத்துக்கே நினைவுகளால் கொண்டு சென்றார்.

இந்த நிகழ்வுக்கு பிரபல நடிகரும், இயக்குநருமான மணிவண்ணன் வருவதாக இருந்தும் தவிர்க்க முடியாத காரணத்தால் வர முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் பொங்குதமிழ் நிகழ்வின் உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

அதில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:—




உறுதி மொழி எடுக்கிறார்கள்

* இலங்கை அரசாங்கமும் ஏனைய நாடுகளும் புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சு வார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்த வழிசமைக்க வேண்டும்.
* தமிழரின் மரபு வழித்தாயகம் அங்கீகரிக்கப் பட வேண்டும்.
* 10 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் பிரதேசங் கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்.
* தமிழரின் தாயகப் பிரதேசங்களில் இருந்து ஆக் கிரமிப்புப் படைகள் விலக்கப்பட வேண்டும்.
* நிரந்தரமான சமாதானமும் அமைதியும் இலங்கையில் ஏற்படும் வரை பிரித்தானி யாவில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களை பிரித்தானிய அரசு திருப்பி அனுப்பக் கூடாது.

இந்நிகழ்வில் இன, மத, மொழி, வயது வேறு பாடின்றிக் கலந்து கொண்டு தேசிய உணர்வுக்கு மதிப்பளித்த அனைவருக்கும் ஏற்பாட்டாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வு தொடர்ந்தும் பிரித்தானியாவில் பல இடங்களிலும் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டது.



பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்குத் திரண்டிருந்த மக்கள்







# மத்திய அரசின் கெடுபிடிகள் ஜெயாவுக்கு புதிய தலையிடி!

**த**மிழகத்தில் ஜெயலலிதா அரசிற்கு எதிராக மத்திய அரசு பல்வேறு விதங்களில் நிர்வாகத் தலையீடுகளை மேற்கொண்டு வருகிறது. ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கருணாநிதி கைது விவகாரத்தில் முக்கிய பங்கு வகித்த மூன்று உயர் மட்டப் பொலிஸ் அதிகாரிகளை தமிழக அரசில் இருந்து மத்திய அரசிற்கு இடம் மாற்றுவதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மூன்று அதிகாரிகளும் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் நடந்து கொண்டதன் மூலமே கருணாநிதி கைது விவகாரம் உக்கிரமடைந்தது. அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும்படி மத்திய அரசு கேட்டது. ஜெயலலிதா இழுத்தடித்தார். எனவே அவர்களைத் தமிழகத்திலிருந்து வேறு பகுதிகளுக்கு அனுப்பும் விதத்தில் புதிய உத்தரவை மத்திய அரசு பிறப்பித்தது.

அந்த உத்தரவின்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாலும் ஆபத்து. நடவடிக்கை எடுக்காமல் இழுத்தடித்தாலும் ஆபத்து. இத்தகையதொரு நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறார் ஜெயலலிதா. ஆயினும் ஒரு விசாரணைக் கமிஷனை அவர் நியமித்திருக்கிறார். அதன் மூலம் தமக்கு சிறிதளவு நிம்மதியைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதாவை எந்த விதத்திலும் விரட்டியடித்துவிட வேண்டும் என்பதில் துடிப்பாக இருக்கிறது மத்திய அரசு. தி.மு.க அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் மத்திய அமைச்சரவையில் இது விடயத்தில் நிர்ப்பந்தமும் அதிகம் இருக்கிறது. அத்துடன் தமிழகப் பொலிஸார் மத்திய அமைச்சர்களை அடித்துப் பந்தாடியதால் ஏற்பட்ட சீற்றமும் பக்கத்துணையாக இருக்கிறது.



ஜெயலலிதா

மத்திய அரசு எப்படியும் தம்மைப் பழிவாங்கிவிடும் என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியும். எனவே நயமாகவோ, பயமாகவோ நடந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலையில் அவர் இருக்கிறார்.

இத்தகையதொரு சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தாம் பதவிவிலகப் போவதாக அறிவித்தார். இந்தச் செய்தி எத்தனையோ பேருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் ஜெயலலிதாவுக்கு அது இனிப்பான செய்தி என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

மத்திய அரசாங்கம் கவிழ்ந்து விடும் நிலையில் இல்லை என்பது உண்மைதான். ஆனால் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் 27 அரசியல் கட்சிகளுக்குள் ஒருமித்த கருத்துணர்வு இல்லை. எனவே உடல் நலன் குன்றியிருக்கும் தம்மால் பிரதமர் பதவியைத் தொடர்ந்து கவனிக்க முடியாது என்று வாஜ்பாய் தெரிவித்திருக்கிறார்.

மத்திய அரசு தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காக சில திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. எனவே ஜெயலலிதாவைக் கவனித்துக் கொள்ள அதற்கு நேரம் இருக்காது என்று சிலர் நினைக்கக் கூடும்.

ஜெயலலிதாவுக்கு லோகசபையில் 11 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ராஜ்ய சபையிலும் போதிய அளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே ஜெயலலிதா மீது கைவைப்பது அவ்வளவு சுலபம் அல்ல என்று அ.தி.மு.க வட்டாரங்கள் நம்புகின்றன.

பிரதமர் வாஜ்பாய் பதவி விலக முன் வந்ததற்குக் காரணம் அவருடைய அலுவலகத்தில் பண மோசடி நிகழ்ந்தது என்று புகார் தெரிவிக்கப்பட்டதனால்தான். ராஜ்ய சபையில் சிவசேனா உறுப்பினர் ஒருவர் இந்தப் புகாரைத் தெரிவித்திருக்கிறார். மத்திய அரசில் சிவசேனாவும் அங்கம் வகிக்கிறது. அதனால் தான் பிரதமர் வாஜ்பாய் சீற்றம் கொண்டார். ஆயினும் சிவசேனா தலைவர் பால்தாக்கரே பிரதமருக்கு ஆதரவாகவே இருக்கிறார்.

மத்திய அரசில் பிணக்கு ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் லோக சபையில் ஏதாவது வாக்கெடுப்பை நடத்தி ஆட்சியைக் கவிழ்த்துவிட காங்கிரஸ் தரப்பினர் முயன்றனர். நிதி அமைச்சருக்கு எதிரான கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. விவாதத்தை ஒத்தி வைப்பதற்கு எதிர்க்கட்சியினர் முன்மொழிந்தனர். ஆனால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டதில் அது தோற்கடிக்கப்பட்டது. அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தை நிரூபித்து விட்டது.

வாஜ்பாய் பதவி விலகினால் இந்திய அரசு கவிழ்ந்து விடும் என்று எதிர்க்கட்சியினர் எதிர்பார்க்கக்கூடும். ஆனால் ராஜினாமா செய்தி மூலம் வாஜ்பாய் இந்தியாவில் ஒரு அதிர்ச்சி வைத்தியமே செய்திருக்கிறார். கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் உதிரிக் கட்சியினர் இனித் தமது முதுகில் தாமே குத்திக் கொள்ள முயல மாட்டார்கள். அத்துடன் பிரதமரின் கையைப்பலப்படுத்த அவர்கள் முழு மூச்சாகப் பாடுபட வேண்டியிருக்கும்.

வாஜ்பாய் அரசில் அங்கம் வகித்த திரிமூல் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன மேற்கு வங்காளத்திலும் தமிழகத்திலும் மாநிலத் தேர்தல்கள் நடந்த போது வெளியேறின. சட்டசபைத் தேர்தல்களில் மண் கௌவிய தால் இரு கட்சிகளும் திரும்பி வந்து வாஜ்பாயின் காலடியில் வீழ்ந்துள்ளன.. இதன் மூலம் வாஜ்பாயின் பலம் மேலும் அதிகரித்தே இருக்கிறது.

எனவே தமிழக அரசு விவகாரங்களில் மத்திய அரசு கடும் போக்கைக் கடைப்பிடிக்காது என்று கூறிவிட முடியாது. தக்க பதிலடிகளைக் கொடுத்து தம்மைக்காத்துக் கொள்ளும் பலம் ஜெயலலிதாவுக்கு ஏற்படும் என்றும் கூறமுடியாது. ஜெயலலிதாவுக்கு பல விதத்திலும் தலையிடிகளைக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள்.

கருணாநிதி கைது செய்யப்பட்டு பந்தாடப்பட்ட விவகாரம், மத்திய அமைச்சர்களான முரசொலிமாறன், டி.ஆர்.பாலு ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவங்கள் ஆகியன இந்திய வரலாற்றில் பதிந்த வடுக்கள் ஆகும். இந்தச் சம்பவங்களுக்குக் காரணகர்த்தா ஜெயலலிதாவே என்பது அகில உலகமே அறிந்த உண்மை.

ஆனால் தவறு செய்தவர் என்று கருதப்படும் ஜெயலலிதா மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தமிழகத்தை ஆட்சி செய்கிறார். அவரைத் தண்டிக்க வேண்டிய மத்திய அரசுக்கு சிறிதளவு அறுதிப் பெரும்பான்மையே லோக சபையில் இருக்கிறது. ராஜ்ய சபையிலோ அறவே இல்லை பெரும்பான்மை.

லோகசபையில் வாஜ்பாய் அரசு நிறைவேற்றும் நாட்டுக்கு நன்மைபயக்கும் மசோதாக்களை ராஜ்ய சபையில் எதிர்க்கட்சியினர் எதிர்ப்பதில்லை. இதனால் நாட்டு நிர்வாகம் தடையின்றி நடைபெறுகிறது.

ஆனால், ஜெயலலிதா அரசை மத்திய அரசு கலைத்தால் அது தொடர்பான மசோதாவை லோகசபையில் நிறைவேற்றி விடலாம். ராஜ்யசபையில் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஆதரவு அளித்தாலே அந்த மசோதாவை நிறைவேற்ற முடியும்.

ஜெயலலிதா அரசைக் கலைத்து விடலாம். ஆனால் ராஜ்ய சபையில் மசோதா தோல்வி அடைந்து விட்டால் மீண்டும் ஜெயலலிதாவின் ஆட்சியே வரும். இதனால் தமிழகத்தில் நெருக்கடி ஏற்படும். மத்திய அரசுக்கு அவமானம் ஏற்படும்.

## பக்கத்து வீடு

இந்த விடயங்கள் காரணமாகவே ஜெயலலிதா அரசைக் கலைக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது. இவ்வேளையில் வாஜ்பாய் அரசு எப்போது கவிழும் என்று ஆர்வத்துடன் நோக்குகிறார் ஜெயலலிதா.

ஆனால் வாஜ்பாய் ஒதுங்கிவிட்டால் அல்லது ஒதுக்கப்பட்டால் இந்தியாவில் ஒரு நிலையான அரசு ஏற்பட வழியில்லை. வாஜ்பாயின் இடத்துக்கு வேறொருவர் வருவதும் சுலபம் அல்ல. இதன் விளைவுகளை இந்திய மக்கள் நன்கறிவர்.

வாஜ்பாய் அரசு கவிழ்ந்துவிட்டால் அவருக்குப் பதிலாக புதிய அரசு ஒன்றை அமைக்கும் வல்லமை சோனியா காந்திக்கே கிடையாது. புதிதாக ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் நிலையிலும் இந்தியா இல்லை. எனவே எப்படியோ சம்பந்தப்பட்டவர்கள் ஒருமித்த கருத்தில் இயங்கி வாஜ்பாய் தமது அரசின் பூரண ஆயுட்காலம் முழுவதும் ஆட்சியை நடத்த வேண்டும் என்பதையே விரும்புகிறார்கள்.

மத்தியில் ஒரு பலம் வாய்ந்த அரசாங்கம் இருந்திருந்தால் ஜெயலலிதா பதவியிலிருந்து எப்போதோ விரட்டப்பட்டிருப்பார். சோனியாவின் கையிலேயே ஜெயலலிதாவின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

இருப்பினும் ஆறு மாதகாலக் கெடுவுடன் ஜெயலலிதாவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்துவிட மத்திய அரசு அக்கறை காட்டும் என்பது புலனாகிறது. அதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கின்றன.

அதுவரை புதிய புதிய தலையிடிகளை ஜெயலலிதா நிச்சயம் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

—கதாசி

## 60 கறுப்பு பூனை வீரர்கள் கருணாநிதிக்கு பாதுகாப்பு

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதிக்கு மத்திய அரசின் கறுப்பு பூனைப் படையின் பாதுகாப்பு வழங்கப் பட்டிருக்கிறது.

கருணாநிதி தமக்கு தமிழக அரசு அளித்து வரும் பாதுகாப்பு தேவை இல்லை என்று தமிழக உள்துறை செயலாளருக்கு கடிதம் எழுதினார். எனவே கருணாநிதிக்கு மத்திய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி அறிவித்தார்.

மத்திய அரசின் தேசிய பாதுகாப்பு படையில் இருந்து டி.ஐ.ஜி. பொன்னுசாமி சென்னை வந்து கருணாநிதியைச் சந்தித்து ஆலோசனை நடத்திவிட்டுச் சென்றார்.

கருணாநிதிக்கு 'இசட் பிளஸ்' பிரிவில் பாதுகாப்பு வழங்கும்படி உள்துறை அமைச்சு உத்தரவுபிறப்பித்துமுள்ளது.

தேசிய பாதுகாப்பு படைப்பிரிவில் இருந்து துணை கமாண்டர் சுமித் குமார் தலைமையில் 60 கறுப்பு பூனைப் படை வீரர்கள் சென்னை வந்தனர்.

பாதுகாப்பு படையின் 60 வீரர்களும் 6 'ஷிப்ட்' முறையில் ஒரு 'ஷிப்டுக்கு' 10 பேர் வீதம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். அனைவரும் 'ஏ.கே.47' துப்பாக்கி ஏந்தி பாதுகாப்பில் ஈடுபடுவார்கள்.

கருணாநிதி எங்கு சென்றாலும் அவரது காருக்கு முன்னாலும் பின்னாலும் பாதுகாப்பு படையினர் 2 கார்களில் செல்வார்கள். கருணாநிதியுடன் அவரது காரில் ஒரு பாதுகாப்பு படை வீரரும் ஏறிக் கொள்வார்.

கருணாநிதி பயணம் செய்ய 'குண்டு துளைக்காத' கார் வழங்கப்படுகிறது.



ஏ.கே.47 துப்பாக்கி ஏந்திய கறுப்பு பூனை வீரர்களின் பாதுகாப்புடன் வீட்டிலிருந்து புறப்படும் கருணாநிதி.

## ராமதாஸை முற்று முழுதாகவே புறக்கணிக்கும் எண்ணம் இல்லை!

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஜெயலலிதாவைப் பகைத்துக் கொண்டு கருணாநிதி அணியில் சேருவதற்கு முயலுகிறார். அவரை உடனடியாக அரவணைக்கும் நிலையில் கருணாநிதி இல்லை. கருணாநிதியைச் சந்தித்து இது விடயமாக ராமதாஸ் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஆனால் நேரடியாகவே பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துத் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். நிபந்தனை ஏதும் இல்லாத விதத்தில் மத்திய அரசுக்கு ஆதரவு தருவோம் என்றார்.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு லோக சபையில் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆதரவு தேவைப்படுவதால் ராமதாஸை முற்று முழுதாகவே புறக்கணிக்கும் எண்ணம் வாஜ்பாய்க்கு இல்லை என்று தெரிகிறது.

இருப்பினும் கருணாநிதியைச் சந்தித்து அவருடைய சம்மதத்தைப் பெறும்படி ராமதாஸிடம் பிரதமர் கேட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

ஜெயலலிதாவின் அடக்கு முறையை எதிர்த்து நிற்க கருணாநிதிக்கு ராமதாஸின் பக்கபலம் உறுதுணையாக இருக்கும். அத்துடன் உள்ளூராட்சி தேர்தலில் தி.மு.க. வுக்கு வெற்றி வாய்ப்பு களைத் தேடிக் கொள்ளலாம். இவை போன்ற காரணங்களால் ராமதாஸை முற்று முழுதாகவே புறக்கணிக்கும் எண்ணம் கருணாநிதிக்கும் இல்லை.

ஆனால் ராமதாஸைச் சேர்த்துக் கொண்டால் தலித் பிரிவினரான விடுதலைச் சிறுத்தைகள் தி.மு.க. வில் இருக்க மாட்டார்கள். இதன் காரணமாகவே கருணாநிதி இது விடயத்தில் பின்னடிக்கிறார்.

மத்திய அரசில் மீண்டும் தமது கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகள் கிடைக்கும் என்று ராமதாஸ் எதிர்பார்க்கிறார். பிரதமர் வாஜ்பாய் பதவி விலகல் நாடகம் நடந்த போது அவரைக் கூட்டணிக் கட்சிகள் சமாதானப்படுத்துவதற்காக ஒரு சந்திப்பு நடத்தப்பட்டது. அதற்கு பாட்டாளி மக்கள் கட்சியும் அழைக்கப் பட்டிருந்தது. ராமதாஸைக் குதூகலப்படுத்தியிருக்கிறது.


# வெளிநாட்டில் கல்வி

"இன்றைய கல்வி நாளைய வெற்றி"

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இத்தாலி, மோல்டா (இத்தாலிக்கு அருகில்) நியூசிலாந்து, சைபிரஸ்

- அனுமதி தகைமை G.C.E. (O/L)
- சாதாரண பாடநெறி கட்டணம்
- மிகக் குறைந்த கட்டணத்தில் தங்குமிடம்
- டிகிரி, டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள்

DOWN PAYMENTS RS.20,000/= ONLY FOR ANY COUNTRY

CAREEM AND COMPANY



1990, இலிருந்து வெளிநாட்டு கல்வி ஆலோசகர்கள்
367,2 ஆம் மாடி, காலி வீதி, மலிபன் சந்தி, இரத்மலானை.
714267, 729276 Fax: 729276
E-mail : cereem@visual.lk

# ஜனாதிபதி நடத்தியது கருத்து பரிமாற்றமா கேலிக்கூத்தா?

## கலந்து கொண்ட சமய குருமார் பலர் பெரும் அதிருப்தி

தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடி இன்னமும் தீரவில்லை. தீர்க்கும் வழிகள் குறித்து அரசாங்கத் தலைவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். அரசியல் கட்சித் தலைவர்கள் சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்கள். அரசியல் சட்ட நிபுணர்களும் மூளையைப் போட்டு குடைந்து கொண்டிருக்கிறார்கள்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் ஜனாதிபதியின் முடிவை அடுத்து இந்த நெருக்கடி ஆரம்பமானது. இது தீர வழியென்ன?

சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி வெற்றி பெற்றதும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடுவேன் என்று கூறி வருகிறார் ஜனாதிபதி. எதிர்க்கட்சிகளோ மாறான கருத்துகளையே கொண்டிருக்கின்றன. ''வாக்கெடுப்பில் அரசு வெற்றி பெறாது. தோல்வியோடு வீட்டுக்கே செல்லும்'' என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

சர்வஜன வாக்கெடுப்புக்குக் கிடைத்துள்ள ஆதரவைக் காட்டிலும் எதிர்ப்பே வலுவானதாகத் தெரிகிறது. அரசாங்கக் கட்சிகளுக்குள்ளேயும் இழுபறி இருந்து வருகிறது. அமைச்சர்கள் சிலர் கூட முழு மனதுடன் சர்வஜன வாக்கெடுப்பை ஆதரிப்பதாக இல்லை.

இருந்தாலும் ஜனாதிபதியோ முழுவீச்சுடன் தனது பிரசாரப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்துச் சந்திக்கிறார். மதத் தலைவர்களுடன் மாநாடுகளை நடத்துகிறார். வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திப்புக்கு அழைக்கிறார்.

கடந்த வாரம் அவர் இவ்வாறு பல மாநாடுகளையும் சந்திப்புக்களையும் நடத்தினார். சிஹல உறுமய, ஜே.வி.பி தலைவர்களை ஜனாதிபதி சந்தித்துப் பேசினார். பௌத்த துறவிகளை, இந்து, கிறிஸ்தவ குருமாரை, முஸ்லிம் சமயப் பெரியார்களை அழைத்து உரையாடினார்.

ஐ.தே.க. தலைவர்களை ஜனாதிபதி பேச்சு வார்த்தைக்கு முதலில் அழைத்திருந்தார். ஆனால் ஐ.தே.க. தலைவரோ ஏனைய சிரேஷ்ட தலைவர்களோ ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்லவில்லை. கட்சித் தவிசாளர் சரித்த ரத்வத்தையே ஜனாதிபதியைச் சந்திக்க அனுப்பப்பட்டிருந்தார். அதனால் அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை.

சிஹல உறுமய செயலாளர் திலக் கருணாரத்ன ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். சில யோசனைகளையும் முன் வைத்தார். பொ.ஐ.மு வையும் ஐ.தே.க வையும் இணைத்து அரசு அமைப்பதே அவரது முக்கிய யோசனையாக இருந்தது.

இருபெரும் சிங்களக் கட்சிகளைக் கொண்ட அரசு அமைக்க பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்காவும் முன்னர் முயன்று பார்த்தார். இறுதியில் தோல்வியே கண்டார். ''ஐ.தே.க முதுகில் குத்தி விட்டது'' என்று இறுதியில் வேதனையும்பட்டார்.

ஜே.வி.பியைப் பொறுத்த வரை உயர் மட்டத் தலைவர்களே ஜனாதிபதியைச் சந்தித்தனர். இரண்டு மணி நேரம் பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஆனால் பலன் எதுவும் கிட்டவில்லை.

இன்றைய நெருக்கடி நிலையில் நாட்டின் நன்மைக்காகத் தீர்மானம் மேற்கொள்ள ஜே.வி.பி தலைவர்கள் சில நிபந்தனைகளை ஜனாதிபதிக்கு விதித்துள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பு நிறுத்தப்பட வேண்டும் நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட வேண்டும் — மக்களுக்கு பொருளாதார, சமூக ரீதியில் சலுகை வழங்கும் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இவையே அந்த நிபந்தனைகள்.

நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் சமயத் தலைவர்களையும் ஜனாதிபதி விட்டு வைக்கவில்லை. அவர்களையும் அழைத்துத் திட்டங்களை விவரித்துள்ளார்.

மகா சங்கத்தினரை முதலில் அழைத்து ஜனாதிபதி உரையாற்றினார். அவர்களுக்கு மதிய தானமும் வழங்கினார். ஏறக்குறைய 300 மகா சங்கத்தினர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சர்வஜன வாக்கெடுப்பு, அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டிய தேவை, யுத்தத்தின் விளைவுகள் போன்றவை குறித்து ஜனாதிபதி விளக்கியுள்ளார். சில மகா சங்கத்தினர் புதிய அரசியல் சட்டம் குறித்து விளக்கங்கள் கோரினர்.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் தலைவர்களை ஜனாதிபதி ஒரே சமயத்தில் சந்தித்தார். கத்தோலிக்க, கிறிஸ்தவ பிரிவுகளின் சார்பில் 15 குருமார்கள் கலந்து கொண்டனர். சுமார் 50 இந்துக் குருக்களும் 30 முஸ்லிம் சமயத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இவர்கள் மத்தியிலும் ஜனாதிபதி ஒரே பல்லவியையே பாடியுள்ளார். ''சர்வஜன வாக்கெடுப்புக்குப் பின்னர் எப்படியாவது புதிய அரசியல் சட்டம் இயற்றப்படும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப்பலம் இல்லாவிடினும் அரசு அறிந்து வைத்துள்ள தந்திரோபாயங்கள் வழியாக சர்வஜன வாக்கெடுப்பில் அது நிறைவேற்றப்படும்'' இவ்வாறு ஜனாதிபதி அங்கு கூறியுள்ளார்.

ஜனாதிபதி தனது கருத்துக்களை ஏனையோர் முன் வைத்த சந்திப்புக்களாகவே இவை பெரும்பாலும் அமைந்துள்ளன. கருத்துப் பரிமாற்ற சந்திப்புக்களாக அவை அமையவில்லை என்றே செய்திகள் கூறுகின்றன.

சமயத் தலைவர்கள் சந்திப்பில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் தேசிய கத்தோலிக்க ஊடக மையத்தின் இயக்குநர் வண. சிறில் காமினி. அவர் செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள தகவல் வியப்பைத் தருகிறது.

''நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து பயனுள்ள கருத்துப் பரிமாற்றம் ஏற்படுமென எதிர்பார்த்தேன். ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. இதனால் சந்திப்பின் இடையிலேயே நாம் அங்கிருந்து வெளியேறினோம். கருத்துப் பரிமாற்றத்துக்கு இருந்த நேரத்தில் குறுக்கிட்டு அமைச்சர்கள் உரையாற்றினர். அது நேரத்தை வீணடித்து விட்டது என்று எமக்குப்பட்டது'' இவ்வாறு அந்த குருவானவர் கூறியுள்ளார்.

நாட்டில் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொள்கின்றன. மதத்தலைவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். பொது அமைப்புகள் ஏற்றுக் கொள்கின்றன. பொது மக்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். எல்லோருமே ஏற்றுக் கொண்டுள்ள ஒரு விடயத்துக்குக் கருத்துப் பரிமாற்றம் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

—அவதானி

### நினைத்தேன் வந்தாய்!

(உயர் தரப் பரீட்சைக்கு இப்பாட்டு சமர்ப்பனம்)

ஏடெடுக்கப் பின்னடித்து
அழுகைச் சொல்லெடுத்து— கெட்ட
பேரெடுக்க என்று
பின்வாங்கு இடம்பிடித்து
வாரடித்த பள்ளி வளவுள்ளே
அடிபடியாக்காரணத்தால்
மனது கலங்கிறதே இன்று!

மங்களமாய் பல ரியூசன்
மாறிமாறிப் போவதுண்டு
மந்திரமாய் பல செய்தி
ரகசியமாய்ச் சொல்வதுண்டு.
மதவடியில் நின்று
மாக்கதைகள் கேட்பதுண்டு
மப்பான பின்னர்
வீடுவந்து சேர்வதுண்டு!

வெறி பிடித்த நாய்போல
தறிகெட்டு வீதியெலாம்
சொறி பிடித்த குணங்களுடன்
நெறிகெட்டு அலைவதுண்டு!
மரியாதை தனையிழந்து
மாணாக்கர் குணமிழந்து
மட்டி மடையனென
மட்டமாய் பேரெடுத்ததுமுண்டு!

கோட்டை முனியப்பர்
கோவில்வரை போனதுண்டு
கட்டை உடையுடனே
கலர்கலராய் பார்த்ததுண்டு!
சந்நிதிக் கந்தனைக்
கனவினிலுங் கண்டதுண்டு
சிந்திக்க நேரமின்றி
சீரியசாய் திரிந்ததுண்டு!

சோதனையும் கடுகதியில்
சோதிக்க நெருங்கிவிட
போதனைகள் புரிகின்ற
பட்டாளம் பேச்சுரைக்க
வேதனைகள் வீட்டினிலே
வேரெடுத்துப் பரவிவிட
எத்தனையோ துன்பங்கள்
உள்ளூரப் பரவிவிடும்...!

மொட்டவிழ்த்து பூத்த
முகைதள்ள வண்டடித்து
பட்டுவிட்ட மனம்தானே
பாடுபடும் —எட்டிவைத்து
நினைத்தேன் வந்தாய்
நீயெனக்கு முன்னாலே
நினைவிழக்க வைத்து
நின்மதியைக் கொன்றாயே!

லோ.துஷிகரன்,
தாவடி

### நல்லது வெல்லுமோ ?

நீதி வெல்லுமென்று
சொல்லுவார்கள்!
நித்தமும்
என்ன நடக்கிறது?
அணுக்குண்டு போட்ட
அராஜகவாதிகள் தான்
அவனியில் நீதிபதிகள்!
சூழ்ச்சியின் சூத்திரதாரிகள்தான்
ஆட்சியின் அதிபதிகள்!
வண்டினம் பாடிய
எம்மண்ணில்
குண்டுகள் கூவித்திரிய
அதர்மம் நர்த்தனமாடுது!
நல்லது கடைசியில்தான்
வெல்லுமோ? அல்லது
வெல்வது நீதி என்று
நிறுவப்படுமோ?

ச.சிவன்பாலன்,
யாழ்ப்பாணம்.

### மறுபக்க தோல்வி

அகிலத்தின் அந்தரங்கங்கள்
அழகானவை அழகுமிக்க
அதிசயங்கள் அந்தரங்கமானவை

மும்தாஜின் முகத்தை
மூடிக்கொண்டிருக்கும்
தாஜ்மஹால் அழகு

இதயத்துடிப்போடு அறையப்பட்ட
அனார்க்கலியின் கல்லறை
அதைவிட அழகு

பிரிவினைக் கோடாய் சிரித்துக்
கொண்டிருக்கும் சீனச் சுவர் அழகு
பாரதத்தையும் ஈழத்தையும் ஈறுபிரித்து
நிற்கும் பாக்கு நீரிணை அழகு

அடுத்த வீட்டையும் என் வீட்டையும்
அணைத்துக் கொண்டிருக்கும்
நெருஞ்சிவேலி அழகு!

மனித வளர்ச்சியை
மறுதலித்து நிற்கும்
மரபிலக்கியம் அழகு

கல்லாகி அமர்ந்திருக்கும்
கண்தெரியா கடவுளரின்
கோயிற் கோபுரங்கள் அழகு

வாழ்ந்த சுவடு பதிக்காமல்
வந்ததும் மறைந்திடும்
வானவில் அழகு!
வண்ணத்துப் பூச்சி அழகு!!
அது சரி...! அழகு....?

கந்தையா கணேஷமூர்த்தி,
வெதமுல்லையூர்.

### நல்லைப் பதிதனிலே அடியார்கள்ஆனந்தம்!

கலக்கத்தில் காலங்களைக்
கழிக்கின்ற மக்களுக்கு
அஞ்சாதீர் என்று கொண்டே
குஞ்சரியர் மணாளன்
வேதனைகள் தீர்ப்பதற்காய்
வீதிகளில் வருகின்றான்!
அடியார்கள் ஆனந்தத்துக்காய்
ஐயைந்து நாட்கள் ஆனைமுகன் தம்பி
பல்வகை அலங்காரங்களில்
பக்தர்கள் ஏற்றி மகிழும்
அத்தனை ஊர்திகளிலும்
பாங்காக அமர்ந்திருந்து
கேட்கின்ற வரங்களை
கருணை விழிகளினால்
சொரிந்தே மகிழ்விப்பாள்
கற்பூர வாசனையோ...
காததூரம் மணம் பரப்ப
நாற்றிசையுமே கந்தன் புகழைப்
போற்றி இசைத்து நிற்க
செந்தமிழ் வாழ்கின்ற
அந்த நல்லைப் பதிதனிலே
கந்தன் வீதியுலா வருகின்றான்

— மீசாலையூர் கமலா

### தனிமையில் நான் பெற்ற தவம்

எல்லாரையும் விட்டு ஏதோ ஒரு இடத்தில்
நல்லா இருத்தலா நான், இல்லை — சொல்லாத
ஏதோ ஓர் அன்பை என் மனது தேடுகுது
'அதோ என்நெஞ்சின் சுமை'

ஒரு ஒற்றை பார்க்க என் மனது நிற்குதில்லை
தெரு ஒன்றைத் தேடித் தேவையின்றி
அலைகிறது—அருவமாய்
சும்மா ஓர் அன்பை என் மனது கேட்டாலும்
அம்மா போல் வருமா அது?

தாயுறவிற் கண்ட சுகம், ஏறி விழுந்தாலும்
சேயுறவிற் காட்டும் தெய்வகுணம் —
போயினவேல்
எத்தனை இன்பங்கள் மாறித்தான் வந்தாலும்
''அத்தனையும் வெறும் அடை''

விட்டுப் பிரிந்தே நாம் வெகு தொலைவில்
இருக்கையிலே (ஜன்னற்)
சட்டம் கூட எம்மைச் சாடுவதாய்த்தான் தெரியும்
— வட்டத்தின்
உள்ளே நிற்பவர்க்கு எப்படித்தான் உது தெரியும்
'அள்ளியா? பார்க்கலாம் அதை'

சுற்றங்கள் விட்டுப் போ... சூழ்குடும்பம் விட்டுவிடு
பற்றெல்லாம் பாராமல் பற்றி எரி — அற்றையிலே
எதுவென்று சொல்லாத ஏதோ ஓர் வெறுமை
''புது ஒன்றாயேறுமே புலன்''

— தி.திருக்குமாரன்



### வாழ்க்கை

விருதுகளுக்காய்
வாழ்வதல்ல வாழ்க்கை
விழுதாய் வாழ்வதுவும் வாழ்க்கை
சலுகைகளைச் சுமப்பதல்ல வாழ்க்கை
சிலுவைகளைச் சுமப்பதுவும் வாழ்க்கை
வாழ்க்கை நாணயம் போன்றது
அது நாணயமானது
வாழ்ந்து காட்டிவிடும்!

றொட்றிகோ, யாழ்ப்பாணம்

### பேசுவது யார்?

சரித்திரத்தின் சாகரத்தில்
சத்திரமாம் பூமி இதில்

சத்தமின்றி சமாதியாக்கப்பட்ட
இரத்தத்தின் அத்தியாயங்களை
புரட்டிப் பார்த்திருக்கிறேன்
வெடிச்சத்தங்கள்— பாயும் இரத்தங்கள்
இத்தனைக்கும் மத்தியிலும்
அக்கிரமங்களைத்
தட்டிக்கேட்டிருக்கிறேன்

பித்துப்பிடித்த மனிதவர்க்கத்தின்
அத்துமீறல்களை வீரத்தோடு
சுட்டிக் காட்டியிருக்கிறேன்

யுத்தத்தின் சத்தத்தில்
சித்தம் கலங்கிய இளம்
குருத்துகளுக்காய்
சத்தமாய் குரல் கொடுத்திருக்கிறேன்

சத்தியமாய் ஏதுமறியாச்
சுத்தமனத்தோடு
வித்தாகி வீழ்ந்துபோன
மனிதர்களுக்காய்
உருக்கத்தோடு அழுதிருக்கிறேன்

நித்தம் நித்தம் செத்துமடியும்
சமாதான தத்துவத்துக்காய்
இன்னமும்
போராடிக்கொண்டிருக்கிறேன்

புரியவில்லையா? பேசுவது யார்?
பெருமையுடன் பேனாமுனை.

— எவ்.விஜயா, யாழ்ப்பாணம்.



# கழுத்து நிறைந்த நகை சூடியதால் புன்னகை


நகை அணிந்த நங்கையர் முகத்தில் எப்போதும் புன்னகை மிளிரும் என்பது நிச்சயம். எனவே கழுத்து நிறைய நகை அணிந்த இந்த அழகியின் முகத்தில் புன்னகை மிளிருவதில் ஆச்சரியம் இல்லை.

சென்னையில் நடைபெற்ற ஒரு ஆபரணக் கண்காட்சியில் கலந்து கொண்ட ஒரு அழகியின் தோற்றம் இது. இந்த அழகி அணிந்திருப்பது வெள்ளி மற்றும் தங்கத் தகடு களைக் கொண்டு பிலிகிரி எனப்படும் நூலிழை வேலைப் பாட்டுடன் தயாரிக்கப்பட்ட நகைகளைத்தான். இவை தங்க நகைகளாக இருந்திருந்தால் அழகியின் புன்னகை மேலும் ஜொலித்திருக்கும் அல்லவா?



# பனிப்பாறையில் வடித்த ஜப்பானிய நூதன சாலை

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைபோல் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது இந்தக் கட்டடம். ஆனால் இது வெயில் பட்டால் நீராகிவிடும். ஆம்! பனிப்பாறையில் வடிக்கப்பட்ட ஒரு கட்டடம்தான் இது என்று சொன்னால் நம்ப முடிகிறதா? பனிப்பாறையில் சிலைவடிக்கும் கலை ஜப்பானில் பிரபல்யம் பெற்றிருக்கிறது. ஜப்பானிய தய்யுஇன் நூதனசாலையின் தோற்றம் இவ்வாறு பனிப்பாறையில் செதுக்கப்பட்டிருந்தது. பார்வையாளர்களைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது இந்தப் பனி மாளிகை.



# உரம்வாய்ந்த மரங்களில் உயிர் வாழும் மரங்கொத்தி


உரம் வாய்ந்த மரங்களில் கூடு களை அமைத்து அங்கு உயிர் வாழும் ஆற்றலைக் கொண் டிருக்கிறது மரங் கொத்திப் பறவை. எவ்வளவுதான் உரம் வாய்ந்த மரங் களாக இருந்தாலும் தனது அலகினால் அவற்றைக் கொத்தி துவாரம் ஏற்படுத்தி விடும் ஆற்றல் கொண்டது மரங் கொத்திப் பறவை. வளைந்து நிற்கும் ஒரு மரத்தில் கால் பதித்து நின்று தனது கைவரி சையைக் காட்டுகிறது இந்த மரங்கொத்தி.



# களி மண்ணில் குளித்தால் சருமங்கள் பளபளப்பு

களி மண்ணில் குளித்தால் சரும நோய்கள் தீரும். தேகம் தங்கம் போல் பளபளக்கும் என்று இயற்கை வைத்தியர்கள் கூறுகிறார்கள். மிகவும் எழிலான தேகத்தை இளம் வயதினர் பெற்றுக் கொள்ள களி மண் குளியல் துணைபுரிகிறது. கழுத்தளவு களிமண் சேற்றில் நின்று ஆரோக்கியமான குளியலில் ஆனந்திக்கும் சிலரை இங்கு காணலாம்.

# மசாலா மிக்ஸ்



# 100,000 தேனீக்களை மேனியில் தாங்கிய சிறுமி

வட இந்தியாவிலுள்ள குருஷேத்திரத்தைச் சேர்ந்த 13 வயது சிறுமி மாளிகா சேத். இவள் அணிந்திருக்கும் ஆடையைத் தொட்டால் அது கொட்டும். ஆம்! ஒரு லட்சம் தேனீக்களைத் தனது மேனியில் தாங்கி யிருக்கிறாள் மாளிகா. தேனீக் களை வரவழைத்து மேனியில் அவை மொய்க்கும் விதத் தில் மரமாக நிற்கும் ஆற்றல் எல்லோ ருக்கும் வந்து விடாது. அதிக எண்ணிக்கையான தேனீக்களைத் தனது மேனியில் மொய்க்க வைத்துப் பெரும் சாதனையே செய்திருக்கிறாள் மாளிகா.

# ஒளிந்திருக்கும் முகம் எது?


ஜூலை 29, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் விஜயகாந்துடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. சி. துளசிகா, மாத்தளை.
2. எஸ். டிலான், வத்தளை.
3. ஆர். விஸ்நாதன், தலவாக்கலை.



சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்ட சாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (05.08.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.



இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? "குஷி" படத்தில் வந்து குஷிப்படுத்திய கெ(ஷெ)ட்டித் தனமான நடிகை.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு — 06.

# அறை எண் நான்கு

''சே...! நீங்கள் எப்போதுமே இப்படித்தான்... என்னை ஏமாற்றி விடுவீர்கள்...'' அலுத்துக் கொண்டாள் டெய்ஸி. அவள் எவ்வளவோ முயன்றும் ஜக்ஸனை மறுபடியும் உற்சாகம் கொள்ளச் செய்ய இயலவில்லை. சலிப்படைந்தவளாக உறங்கிப் போனாள் அவள். பக்கத்து அறையிலிருந்து அப்போதும் இரண்டு விழிகள் அவர்களை நோட்டமிட்டுக் கொண்டே இருந்தன.

ஹொட்டேல் 'நைட்ஹோக்'கின் முன் பொலிஸ் வாகனங்கள் குவிந்திருந்தன. அந்த இடம் முழுவதும் மிகுந்த பரபரப்புக்குள்ளாகி இருந்தது. திரண்டு வந்திருந்த மக்கள் ஆவலோடும், திகிலோடும் அடுத்து நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

'ஸ்ட்ரெச்சரில்' கொண்டுவரப்பட்ட உடல் ஒன்று அம்புலன்ஸில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு திரண்டிருந்த பொலிஸாரும் மக்களும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். அங்கு தங்கியிருந்தவர்களும் தமது அறைகளைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டதால் அந்த ஹொட்டேல் வெறிச்சோடிப் போயிருந்தது.

உள்ளே தலையில் கை வைத்தபடி உடைந்துபோய் உட்கார்ந்திருந்தார் டேவ்ஸன். அவர்தான் அந்த ஹொட்டேலின் உரிமையாளர். பலவருடங்களாக ஆஹா, ஓஹோ என்றிருந்த அவரது ஹொட்டேலுக்கு இந்தவருடம் முழுவதும் சனிதிசை. அடுத்தடுத்து ஓரிரு மாத இடைவெளிகளில் ஐந்து கொலைகள் நிகழ்ந்து விட்டன. அதுவும் நான்காம் இலக்க அறையில்.

கொலைகளுக்கான காரணங்களோ கொலையாளிகளைப் பற்றிய தடயங்களோ இதுவரை சிக்கவில்லை. டேவ்ஸனின் தலையைப் பொலிஸார் உருட்டியதுதான் மிச்சம். பாவம் அந்த வயதான மனிதர். வருமானம், நிம்மதி இரண்டையும் இழந்து தவித்துப் போனார்.

ஹொட்டேலையே இழுத்து மூடிவிடும் எண்ணத்தில் இருக்கும்போதுதான் இன்று இன்னுமொரு கொலை!

கொல்லப்பட்டவள் பெரும் செல்வந்தர் ஒருவரின் மகள். தனது நண்பன் ஒருவனுடன் உல்லாசப் பயணம் புறப்பட்ட அவள், அங்கு தங்கியது அன்று மட்டும் தான். அன்றே தன் உயிரையும் இழந்து விட்டாள்.

''அறை எண் நான்கில் தங்கவேண்டாம். வேறு அறை தருகிறேன்'' என்று டேவ்ஸன் கேட்டுக் கொண்ட போதும் அலட்சியமாக அதில் தங்கியவள் உயிரை இழக்கவேண்டியதாகிவிட்டது.

சந்தேகத்தின் பேரில் அவளது நண்பன் கைது செய்யப்பட்ட போதும், அவனைக் குற்றவாளியாகக் காண்பிக்கும் ஆதாரங்கள் எதுவும் பொலிஸார் வசம் இருக்கவில்லை.

ஹொட்டேல் 'நைட் ஹோக்' இன் நான்காம் இலக்க அறையின் கொலை மர்மம் தொடர்ந்தது.

* * *

இரண்டு மாத இடைவெளியின் பின்னர்.

கொலை மர்மங்கள் துலக்கப்படாத் நிலையில் மறுபடியும் 'நைட்ஹோக்' வாடிக்கை யாளர்களைக் கவரத் தொடங்கியிருந்தது. இலையுதிர்காலம் முடிந்து மரங்கள் தளிர்களை வெளிவிடத் தொடங்கியிருந்த நேரம். அந்த ஹொட்டேல் அமைந்திருந்த ரம்மியமான மலைப்பிரதேசத்தின் கவர்ச்சியால் உல்லாசப் பயணிகள் வந்து குவிய ஆரம்பித்திருந்தனர்.

டேவ்ஸன் மிகுந்த உற்சாகத்தில் இருந்தார். அறை எண் நான்கைத் தவிர ஏனைய அறைகள் எல்லாமே 'புக்' செய்யப்பட்டிருந்தன. பாட்டும் கூத்துமாக ஹொட்டேலே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

''எக்ஸ் கியூஸ் மீ சேர்...''

ஆழ்ந்த சிந்தனையில் இருந்த டேவ்ஸனை அந்தக் குரல் திசை திருப்பியது. அவர் எதிரே ஆணும் பெண்ணுமாக இரண்டு பேர் நின்றிருந்தார்கள்.

''யெஸ். உங்களுக்கு என்னால் ஏதேனும் உதவி ஆகவேண்டுமா?'' டேவ்ஸன் அன்பாகக் கேட்டார்.

''ஆமாம். நாங்கள் தங்குவதற்கு அறை ஏதும் கிடைக்குமா?'' கேட்ட அந்த மனிதனுக்கு வயது நாற்பது மதிக்கலாம். அவனருகில் நின்றிருந்த பெண் இருபத்தைந்து வயதைத்தாண்டாதவள் என்பது நன்கு தெரிந்தது.

''மன்னிக்க வேண்டும். அறை எதுவும் காலி இல்லை. எல்லாமே 'புக்' காகி விட்டன!''

''ப்ளீஸ்! தொலைவிலிருந்து வந்திருக்கின்றோம். உடனே திரும்பிச் செல்வதும் இயலாது. இருட்டவேறு ஆரம்பித்து விட்டது. வசதிகள் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. ஓர் அறையை ஏற்பாடு செய்து தாருங்கள்...'' கெஞ்சலாகக் கேட்ட அந்தப் பெண்ணைப் பார்க்க டேவ்ஸனுக்குப் பரிதாபமாக இருந்தது.


''நான்காம் இலக்க அறை காலியாகத்தான் இருக்கிறது. ஆனால் அதில் தங்குவதற்குப் பொதுவாக யாரும் விரும்புவதில்லை. சில அசம்பாவிதங்கள் அந்த அறையில் நிகழ்ந்திருக்கின்றன...'' என்று இழுத்தார் அவர்.

''பரவாயில்லை. நாங்கள் எதற்கும் பயப்படுவதில்லை. அந்த அறையிலேயே தங்கிக் கொள்கிறோம்.'' அந்தப் பெண் தைரியத்துடன் கூறினாள்.

''ஓகே! இன்றிரவு மட்டும் அந்த அறையில் தங்கிக் கொள்ளுங்கள். நாளை அறை ஒன்று காலியாகும் என்று தெரிகிறது. அதற்கு மாற்றித் தருகிறேன்.!''

தன் உதவியாளன் மார்ஷை அழைத்து அறையை ஏற்பாடு செய்து கொடுக்குமாறு பணித்து விட்டு, அவர்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டார். மிஸ்டர் அன்ட் மிஸிஸ் ஜக்ஸன் க்ளெம் என்று தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டார்கள் இருவரும்.

அறை எண் நான்கை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து விட்டு வந்தான் மார்ஷ். நேராகத் தனது அறைக்குள் நுழைந்து தொலைபேசி இலக்கங்களைச் சுழற்றினான்.



ஐந்தாம் இலக்க அறையில் தொலைபேசி மணி ஒலித்தது. அந்த அறையில் தங்கியிருந்த ஆசாமி ரிசீவரை எடுத்தான்.

''மார்ஷ் பேசுகிறேன். பக்கத்து அறையில் இரண்டு பறவைகள் தங்குகின்றன. ஒன்று ஆண். மற்றது பெண்!''

''ஓ.கே! நான் கவனித்துக் கொள்கிறேன்'' இணைப்பைத் துண்டித்துக் கொண்டான் அந்த மனிதன்.

* * *

உணவை அறைக்கே வரவழைத்து உண்டார்கள் ஜக்ஸன் தம்பதியர். உணவை முடித்துவிட்டு படுக்கைக்குச் செல்ல ஆயத்தமானார்கள். அவர்களது ஒவ்வொரு அசைவையும் இரண்டு விழிகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தன.

ஜக்ஸன் களைத்துப் போனார். இளம் மனைவியின் வேகத்துக்கு அவரால் ஈடுகொடுக்க இயலவில்லை.

''டெய்ஸி... மூச்சுவாங்குகிறது. பயணக்களைப்பு மிகுதியாக இருக்கிறது. என்னால் இயலவில்லை...'' திக்கித் திணறிக் கூறினார் ஜக்ஸன்.

''சே...! நீங்கள் எப்போதுமே இப்படித்தான்... என்னை ஏமாற்றி விடுவீர்கள்...'' அலுத்துக் கொண்டாள் டெய்ஸி. அவள் எவ்வளவோ முயன்றும் ஜக்ஸனை மறுபடியும் உற்சாகம் கொள்ளச் செய்ய இயலவில்லை. சலிப்படைந்தவளாக உறங்கிப் போனாள் அவள்.

* * *

அதிகாலை வேளையிலேயே 'நைட்ஹோக்' அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. துப்பாக்கி ஒன்று தோட்டாவை உமிழ்ந்த ஓசை அங்கு தங்கியிருந்தவர் களைத் தூக்கத்திலிருந்து உசுப்பி எழுப்பியிருந்தது.

'யாராவது கொல்லப்பட்டார்களா? கொல்லப் பட்டிருந்தால் கொலையாளி யார்?' போன்ற கேள்விகள் எல்லோர் மனதிலும் எழுந்தாலும், பயத்தினால் அறைகளுக்குள்ளேயே முடங்கிக் கொண்டார்கள்.

'ஸ்ட்ரெச்சரில்' வைத்து ஒருவரை மருத்துவப் பணியாளர்கள் அம்புலன்ஸுக்குக் கொண்டுவந்தார்கள். அது டெய்ஸி! அவள் இறந்துபோயிருக்கவில்லை. வலது தோளில் தோட்டா ஒன்று ஆழமாகப் பதிந்திருந்தது. ஏராளமான இரத்தம் வெளியேறிப் போயிருந்ததால் மயங்கிய நிலையில் கிடந்தாள் அவள்.

டேவ்ஸன் நிலைதடுமாறிப் போயிருந்தார். இரண்டு மாதங்களாகப் பிரச்சினையில்லாமல் வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுத்து வந்த அவரது ஹொட்டேலில் மறுபடியும் சிக்கல் ஆரம்பித்துவிட்டதே! தலையை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு சோர்ந்துபோய் இருந்தவரின் தோளில் ஆதரவாகக் கைவைத்தான் அவரது உதவியாளன் மார்ஷ்.

''மிஸ்டர் டேவ்ஸன் நடந்த அசம்பாவிதம் எமது ஹொட்டேலுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும் எனினும் ஒரு கொலை தடுக்கப்பட்டிருக்கிறது!'' என்ற மார்ஷை கேள்விக்குறியுடன் பார்த்தார் டேவ்ஸன்.

அவன் தொடர்ந்தான். ''ஐந்தாம் இலக்க அறையில் தங்கியிருந்தவர் ஒரு சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர். யாராவது நான்காம் எண் அறையில் தங்குவதற்கு வந்தால் தனக்கு அறிவிக்கும்படி என்னிடம் கூறியிருந்தார். நமது ஹொட்டேலில் நடைபெற்ற கொலைகள் பற்றித் துப்பறியவே அவர் இங்கு வந்திருக்கிறார்''

''மிஸ்டர் ஜக்ஸனும் மனைவியும் அறைக்குச் சென்றதும் நான் இன்ஸ்பெக்டருக்கு அறிவித்தேன். அவர், அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வந்திருக்கிறார். யாராவது அவர்களைக் கொலை செய்ய முயற்சித்தால் பிடித்துவிடலாம் என்பதே அவரது எண்ணமாக இருந்தது''

''ஆனால் கணவனிடம் திருப்தியான சுகத்தை அனுபவிக்க முடியாத டெய்ஸி விரக்தியில் கணவனையே தீர்த்துக்கட்ட நினைத்திருக்கிறாள். தலையணையால் அமுக்கி தூக்கத்திலிருந்த ஜக்ஸனைக் கொலை செய்ய முயன்றபோது இன்ஸ்பெக்டர் துப்பாக்கியால் அவளைச் சுட்டுக் காயப்படுத்தியிருக்கிறார்''

மார்ஷ் சொல்லச் சொல்ல டேவ்ஸனின் முகத்தில் ஒரு தெளிவு தெரிந்தது. மார்ஷ் மேலும் கூறினான்.

''முன்னைய கொலைகளுக்கான காரணகர்த்தாக்களைக் கண்டுபிடிக்கவே இன்ஸ்பெக்டர் நமது ஹொட்டேலில் தங்கியிருந்தார். ஆனால், அறை எண் நான்கில் நடந்த மர்மக் கொலைகளைப் பயன்படுத்தி அவற்றின் போர்வையிலேயே தனது கணவனையும் கொலை செய்ய முயன்ற டெய்ஸி சிக்கிக்கொண்டாள்''

தனக்குத் தெரிந்த உண்மைகளைக் கூறி முடித்தான் அவன்.

ஆனால் இன்னும் முன்னர் நடந்த கொலைகளுக்கான காரணங்களோ கொலையாளிகளோ அடையாளம் காணப்படவில்லை! எது நடந்தாலும் நஷ்டம் நமது ஹொட்டேலுக்குத்தானே?'' என்றார் டேவ்ஸன் யதார்த்தமாக.

# அடங்கிப் போன கணினி வைரஸ்

கடந்த வாரம் இணையத்தளங்களுக்குப் பாரிய அச்சுறுத்தலை விடுத்திருந்த கணினி வைரஸ், ஆரவாரம் இன்றி அடங்கிச் சென்று விட்டது.

பல பொறிகளை (Packages) தாக்கக்கூடும் என சர்வதேச அளவில் எதிர்பார்க்கப்பட்ட 'கோட் ரெட்' (Code Red) என்ற இந்தக் கணினி வைரஸ் எந்தச் சேதத்தையும் கணினிகளில் உண்டு பண்ணவில்லை.

கடந்த ஜூலை 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை இந்தக் கணினி வைரஸின் அறிகுறிகள் ஆங்காங்கே தென்படத் தொடங்கின. அந்த வகையில் கடந்த மாதம் 31ஆம் திகதி முன்னிரவு 8 மணியளவில் இந்த வைரஸின் தாக்கம் கணினிகளில் உக்கிரமாகும் என அப்போது எதிர்வு கூறப்பட்டது.

அதன்படி Windows NT, Windows 2000, Microsoft <<MSFT.O> Internet Information Server (IIS) Software version 4.0 அல்லது 5.0 ஆகிய பொறிகள் கடும் தாக்கத்துக்கு உள்ளாகலாம் என்றும், இந்தத் தாக்கத்திலிருந்து Windows95, Windows 98 அல்லது Windows me போன்ற பொறிகள் தப்பிக் கொள்ளும் என்றும் முன்னர் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக அமெரிக்க உளவு நிறுவனமான எவ்.பி.ஐ (FBI) யின் தேசிய உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையம் (National Infrastructure Protection Center) தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தது.

கணினி நிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பாளர்கள் விரும்பிக் குடிக்கும் குளிர்பானம் ஒன்றின் பெயரே இந்தக் கணினி வைரஸுக்குச் சூட்டப்பட்டது.

கணினி வல்லுநர்கள், அமெரிக்காவிலுள்ள கணினி மேதைகள் ஆகியோர் இந்த வைரஸ் தாக்கத்துக்கு முற்கூட்டிய பாதுகாப்பு முயற்சி மேற்கொண்டதால் விபரீத விளைவுகள் தவிர்க்கப்பட்டன. இந்தத் தாக்கத்தைத் தவிர்ப்பதற்காக அமெரிக்கா பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

தேசிய உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையப் பணிப்பாளர் டொனால்ட் டிக் கூறுகையில், தவிர்க்கப்பட்ட இந்தக் கணினித் தாக்கம் இந்தப் பிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வாக அமையாது என்றார்.

'கோட் ரெட்' வைரஸ், வீட்டுக் கணினிகளை (Home Computers) இலக்கு வைத்து ஏவப்படவில்லை; வர்த்தக ரீதியிலான செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் கணினிகளை (Business Computers) தாக்கும் நோக்கிலேயே ஏவப்பட்டது என பி.பி.ஸி தெரிவித்தது.

எது எப்படியாயினும் அமெரிக்காவிலும் தென்னாசியாவிலும் கோட் ரெட்டின் தாக்குதல் செல்லுபடியாகவில்லை என்பது பெரும் வெற்றி. 'மிலேனியம் பக்' என்ற வைரஸின் தாக்கம் போல் அல்லாது முற்பாதுகாப்பு ஆயத்தங்களை மேற்கொண்டதால் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என ஸி.என்.என் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

# அஸ்பிறின் அதிரடி வைத்தியம் மாரடைப்புக்கு உடன் நிவாரணம்

கே: கடந்த சில ஆண்டுகளாக எனது தொடைக்கும் ஆணுறுப்புக்கும் இடையில் வியர்வை தங்கியோ அல்லது வேறு காரணங்களாலோ எரிச்சல் வருகிறது. 100 சதவீதம் பருத்தி என விற்கப்படும் தரமான உள்ளாங்கியையே அணிகிறேன். தினமும் அதனைத் தோய்த்தே பாவிக்கிறேன். இருந்தும் அவ்விடத்தில் தோல் மென்மையாகவே உள்ளது. கை வைத்தால் எரிகிறது. இரண்டு மாதங்களுக்கு முன் வைத்தியர் ஒருவரிடம் காட்டினேன். அவர் zole (f) எனப்படும் மருந்தைப் பூசுவதற்குத் தந்தார். அது பூசும் நாட்களுக்குச் சுகம் தெரியும். ஆனால் அதை நிறுத்தியதும் மீண்டும் இந்த நோய் ஏற்படுகிறது. இது என்ன நோய்? இதனை எப்படி முற்றாக மாற்றலாம்? இந்த நோயினால் பாரதூரமான விளைவுகள் ஏதாவது ஏற்படுமா?

ப: உங்களுடைய கடிதம் தெளிவாகவும் தேவையான விவரங்கள் யாவும் உள்ளடக்கியதாகவும் இருந்தது. கண்டிடா (Candida) எனப்படும் ஒருவகை (F) பங்கசு கால் இடுக்குகளுக்கிடையே உள்ள தோலில் வளருவதனால் இந்த நோய் ஏற்படுகிறது. இது ஒரு பாரதூரமான நோய் அல்ல. நீங்கள் மட்டுமல்ல பலர் இந்த நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நோயை மாற்றுவதும் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதும் மிக இலகுவான காரியம் ஆகும். ஈரமாக உள்ள தோல்பகுதியிலேயே இந்த (F) பங்கசு வளருகிறது. தோல் காய்ந்தபடியிருந்தால் இவை வளரமாட்டா.

எனவே இப்பகுதியில் வியர்வையைக்

**கால் இடுக்குகளிடையே உள்ள தோலில் வளரும் பங்கசு ஆபத்தானதா?**

குறைப்பதற்கும் தோலைக் காய்ந்த நிலையில் வைத்திருப்பதற்கும் பின்வரும் முறைகளைக் கையாளலாம். தினமும் இரண்டு தடவைகள் குளித்தல், பருத்தியிலான சுத்தமான உள்ளாடைகளை அணிதல், தோலின் இப்பகுதியை சவரம் (Shave) செய்துவிடல், கூடுமானவரையில் சாரம் போன்ற காற்றோட்டமான . உடைகளை அணிந்து உள்ளாடையை அணிவதைத் தவிர்த்துக் கொள்ளுதல், காற்றோட்டமானஇடத்தில்படுத்துஉறங்குதல். இந்த முறைகளைக் கையாண்டு வந்தால் மருந்து ஏதும் இல்லாமலேயே இந்தத் தோல் சம்பந்தமான நோயை முற்றாக மாற்றமுடியும்.

கே: எனக்கு வயது 27(பெண்) . பதினைந்து வயதில் பருவம் அடைந்தேன். 3 தடவைகள் மாதவிடாய் வந் தது. அதன்பிறகு இல்லை. அருகில் உள்ள வைத்தியரிடம் காட்டிய போது "நாளடைவில் சரிவரும், இரத்தம் பற்றாது" என்றார். எனக்கு வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லை. இதற்கு பரிகாரம் உண்டா?

ப: உங்களுடைய கடிதத்திலிருந்து உங்களுக்கு இரத்தப் பற்றாக் குறை இருக்கிறது என்பதும் உடல் வளர்ச்சியும் போதுமான அளவாக இல்லை என்பதும் தெரிகிறது. பல வருடங்களாக உங்களுக்கு மாதவிடாயும் ஏற்படவில்லை. இதற்குப் பல்வேறு கார ணங்கள் இருக்கலாம்.

எனவே நீங்கள் ஒரு பொது மருத்துவ மனைக்குச் சென்று உங்களுடைய முழு விவரங்களையும் கூறுங்கள். வைத்தியர் உங்களை பூரணமாகச் சோதித்துப்பார்த்து சில பரிசோதனைகளும் செய்து உங்கள் நிலைக்கான காரணத்தை அறிந்து தகுந்த நடவடிக்கை எடுப்பார். காலம் தாழ்த்த வேண்டாம்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன்.
> நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

கே: எனக்கு 48 வயது (ஆண்) தலைச்சுற்றுக் காரணமாக இரண்டு தடவைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றேன். நான் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது பல சோதனைகள் செய்யப்பட்டன. பல வகையான மருந்துகளும் தரப்பட்டன. ஆனால் எனக்கு என்னென்ன சோதனைகள் செய்யப்பட்டன என்பதோ அவற்றின் முடிவுகள் என்ன என்பதோ என்ன மருந்துகள் தரப்பட்டன என்பதோ தெரியாது. இன்னும் சொல்லப்போனால் எனக்கு என்ன நோய் ஏற்பட்டது என்பதுகூட எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலை எனக்கு மட்டுமல்ல இன்னும் பல நோயாளர்களுக்கு நடந்திருக்குமென நினைக்கிறேன். இந்த நிலையில் நான் இன்னொரு டாக்டரிடம் செல்லும்போது முன்பு எனக்கு என்ன நடந்தது என்பது பற்றி விவரமாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப: ஒவ்வொரு நோயாளியும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வீடு செல்லும்போது அவர்களுக்கு நோய் விவர அட்டை (Diagnosis card) ஒன்று வழங்கப்படுகிறது. அதில் எல்லா விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த அட்டையை வாங்காமல் நீங்கள் வீடுசெல்லக் கூடாது.

அரசாங்க வைத்தியசாலையாக இருந்தாலும் தனியார் வைத்தியசாலையாக இருந்தாலும் இந்த அட்டையைக் கேட்டு வாங்கிக் கொள்ளும் கடமையும் உரிமையும் நோயாளிக்கு இருக்கிறது. இதைவிட மிக முக்கியமானஒருகடமையும் நோயாளிக்கு இருக் கிறது. அது என்னவென் றால் எப்போதாவது ஒரு டாக்டரைச் சந்திக்கப் போகும் போது கட்டாயமாக முன்பு வழங்கப்பட்ட இந்த அட்டையை அல்லது அட்டைகளை எடுத்துச் சென்று டாக்டரிடம் காட்ட வேண்டும். இது உங்களுக்கு உரிய சிகிச்சையைத் தாமதமின்றி வழங்குவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

உங்களுடைய விடயத்தில் இதிலே எங்கு தவறு நடந்தது என்பது தெரியவில்லை.

கே: எனது அண்ணன் (வய்து 49) சுகதேகியாக இருந்தார். ஒருநாள் மத்தியானம் முழுகிய பின் ஆட்டிறைச்சி சாப்பிட்டுவிட்டு படுத்திருந்தார். அப்பொழுது அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. அது 'வாய்வுக் குத்து' என்று சொல்லி இரசம் வைத்துத் தருமாறு கேட்டார். பின்பு அதனைக் குடித்தும் குத்துக் குறையவில்லை. பின்பு வைத்திய சாலைக்குக் கொண்டு போகும் வழியில் அவர் இறந்துவிட்டார்.

**முழுகிவிட்டு ஆட்டிறைச்சி உண்டவர் மரணமடைய காரணம் என்ன?**

இந்த மரணத்துக்கு மாரடைப்புத்தான் காரணமா? மாரடைப்புக்கான நெஞ்சு வலியை எப்படிக் கண்டறிந்து கொள்வது? அப்படியான நெஞ்சுவலி ஏற்பட்டால் உடனே என்ன செய்யவேண்டும்? இந்த மரணத்தைத் தடுத்திருக்க முடியுமா?

ப: உங்களுடைய அண்ணனின் மரணத்துக்கு மாரடைப்புத்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும். இருதயத்தின் சுவருக்கு இரத்தத்தை வழங்குகின்ற இரத்தக் குழாய்களில் இரத்தம் கட்டிபட்டு இரத்த ஓட்டம் அடைபடுவதால் மாரடைப்பு ஏற்படுகிறது. உடனடியாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்த இரத்தக் கட்டியைக் கரைத்து இருதயம் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம் அல்லது குறைத்துக் கொள்ளலாம்.

ஒருவருக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டு அது மாரடைப்பாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தால் உடனடியாக அவருக்கு இரண்டு கரையக் கூடிய அஸ்பிறின் மாத்திரைகளை (Soluble aspirin) வாயில் உமியக் கொடுக்க வேண்டும். இதனை ஒரு டாக்டர்தான் கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இது இரத்தக் கட்டியை கரைப்பதற்குப் பெரிதும் உதவியாக இருப்பதுடன் பல இறப்புகளையும் இருதயப் பாதிப்புகளையும் தடுத்து நிறுத்துவதற்கு உதவியாய் இருக்கும். நேரம் தாமதிக்காது நோயாளியைத் தூக்கி வாகனம் ஒன்றில் ஏற்றி (நோயாளி நடப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்) பெரிய வைத்தியசாலை ஒன்றுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அங்கு மாரடைப்பு உறுதி செய்யப்பட்டால் இரத்தக் கட்டியை முற்றாகக் கரைப்பதற்கான மருந்து ஏற்றப்படும். இந்த மருந்தை ஏற்றுவதில் சில மணி நேர தாமதம் ஏற்பட்டால் கூட இருதயம் பாதிக்கப்படலாம் அல்லது மரணம் சம்பவிக்கலாம். சிறிய வைத்திய நிலையங்களில் இந்த மருந்தை ஏற்றுவதற்கான வசதிகள் இல்லை. எனவே நேரத்தை விரயமாக்காமல் நேரடியாக பெரிய வைத்தியசாலை ஒன்றுக்குச் செல்ல வேண்டும். உங்கள் முதலுதவிப் பெட்டியில் சில கரையக் கூடிய அஸ்பிறின் மாத்திரைகளை எப்பொழுதும் வைத்திருங்கள். பொதுவாக மாரடைப்பின்போது ஏற்படும் வலி நடுநெஞ்சில் இறுக்குவதுபோன்று ஏற்படும். இந்த வலி கழுத்துப் பகுதி கையின் மேற்பகுதி என்பவற்றுக்கும் பரவலாம். கடுமையான வியர்வை ஏற்படலாம். சிலசமயம் நெஞ்சுவலியுடன் மூச்சுவிடுவதில் கஷ்டம் ஏற்படலாம். நெஞ்சுப் படபடப்பு ஏற்படக்கூடும். இவ்வாறான அறிகுறிகள் ஒருவருக்கு ஏற்பட்டால் உடனடியாக இரண்டு அஸ்பிறின் மாத்திரைகளை உமியக் கொடுத்து தாமதிக்காது வைத்தியசாலைக்கு அவரை எடுத்துச் செல்ல வேண்டியதே நீங்கள் செய்ய வேண்டிய கடமை ஆகும்.

## ராசி பலன்

**12.08.2001 முதல் 18.08.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

குரு, சுக்கிரனைத் தவிர மற்றைய கிரகங்கள் எல்லாம் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனங்களால் மத்திம பலனே உண்டு. பிள்ளைகளால் பெருமையடையலாம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் பொருள் விரயமாகலாம். மாதப்பிறப்புக்கு மேல் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

ராகு, சனியைத் தவிர மற்றைய கிரகங்கள் நல்ல பலனைச் செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. பிள்ளைகள் சிறப்பாக இருப்பார்கள். மன அமைதி குறையலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். திருமணவாய்ப்புகள் உண்டு. தொழில்துறையில் சில பிரச்சினைகள் உருவாகலாம். எடுத்த கருமங்கள் தாமதமாக நிறைவேறும்.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

சனி, சூரியன், புதன், சுக்கிரன் ஆகியன நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயலைத் தாமதமாகவேனும் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனங்களால் செலவு அதிகரிக்கும். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது கடினம். மன அமைதி குறையலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் போட்டி இருக்கும். நண்பர்களால் தொல்லை வரலாம். குறுந்தூர பிரயாணம் அமையும்.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சூரியன், புதன், சனி, செவ்வாய், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சொல்லுக்கு மதிப்பு இருக்கும். மன அமைதி குறையலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். குழந்தைகள் கீழ்ப்படிய மறுக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. நண்பர்களால் உதவியுண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

செவ்வாய், கேதுவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மையே செய்யும். பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயல் இலகுவில் முடியும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். திருமண வாய்ப்புகள் இருக்கின்றன. தொழில் துறை முன்னேறும். பிரயாண வாய்ப்புக்கள் பிரகாசமாக இருக்கும். நண்பர்களால் உதவியுண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

செவ்வாய், கேது, புதனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சொல்லுக்கு மதிப்பிருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். பிள்ளைகள் சொற்கேட்பர். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில் துறையில் பேர், புகழ் இருக்கும். மன அமைதி இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். நண்பர்கள் உதவுவர்.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

ராகு, சந்திரனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். மன அமைதி குன்றும். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். குழந்தைகளின் செயல்பாடு மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். இடமாற்றம் வரலாம்.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

குரு, சுக்கிரன், கேதுவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயல் தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனங்களால் செலவு அதிகரிக்கும். குழந்தைகள் சொற்கேளார். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில்துறை முன்னேறும். பதவி உயர்வு இருக்கும். பிரயாணம் தாமதிக்கலாம்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம்1.**

ராகு, கேது, செவ்வாயைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயல் இல்குவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவது கடினம். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறை முன்னேறும். நண்பர்களால் உதவியுண்டு.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சனி, குருவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதியுண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது கடினம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பும் தாமதிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் அமைதி இருக்காது. நண்பர்களால் செலவு ஏற்படலாம்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

சனி, ராகுவைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும் நிலையில் உள்ளன. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு உண்டாகும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். திருமண வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். தொழில் துறையில் போட்டி இருப்பினும் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் உதவுவர்.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

ராகு, புதனைத் தவிர மற்றைய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயல் இலகுவில் முடியும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும், மன அமைதியுண்டு. குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது கடினம். உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. இடமாற்றம் இருக்கும். நண்பர்களால் தொல்லை ஏற்படலாம்.

# நடிப்பு வில்லில் கவர்ச்சி அம்பு தொடுக்கிறார் சிம்ரன்

ஒட்டிய உடல்வாகு, மாநிறம் ஆனாலும் கண்களினால் கவர்ச்சி அஸ்திரத்தை வீசும் நடிகை சிம்ரன்.

'தேரே மேரே சப்னே' — சிம்ரன் அறிமுகமாகிய முதல் இந்திப்படம். இந்தி ரசிகர்கள் அப்போதே சிம்ரனின் கண்களில் தெரிந்த செக்ஸ்-அப்பியரன்ஸைத் தெரிந்து கொண்டார்கள். இந்தப் பெண் ஒரு ரவுண்டு வருவாள் என்று பலர் ஆருடம் சொன்னார்கள். ஆனால் இந்தித் திரையுலகம் அவருக்கு அப்படி ஒரு வாய்ப்பை அளிக்கத்தவறி விட்டது.

சிம்ரன் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமாகுவதற்கு வழிவகுத்தவர் லைலா. 'வி.ஐ.பி' படத்தில் லைலா தான் ஹீரோயினாக ஒப்பந்தம் செய்யப்பட்டவர். ஆனால் தாஜ் ஹோட்டலில் தங்கிக் கொண்டு லைலா காட்டிய பந்தாவினால் ஆடிப்போன தாணு லைலாவை மும்பைக்கு அனுப்பி விட்டார்.

அடுத்த நாள் படப்பிடிப்பு தொடங்க வேண்டும்! யாரை ஹீரோயினாகப் போடலாம் என்று மொடல்களின் படங்களை வைத்துக் கொண்டு அலைபாய்ந்து கொண்டிருந்தவரிடம் சிம்ரனை அறிமுகப்படுத்தி வைத்தவர் ஒரு பத்திரிகையாளர். 'வி.ஐ.பி' மூலம் சிம்ரன் அறிமுகமானார். இவர் அறிமுகமான சந்தர்ப்பத்தில் மீனா தமிழில் நம்பர் வன் இடத்திலிருந்தார். குணசித்திர வேடங்களில் மீனாவை அசைக்க முடியாது.

கவர்ச்சிப் பாதையிலேயே செல்வதற்கு இடமிருந்தது. அதனால் அந்த அஸ்திரத்தைக் கையில் எடுத்தார் சிம்ரன். அந்த அஸ்திரத்தின் வலிமையினால் இன்றளவும் நிலைத்து நின்று கொண்டிருக்கிறார்.

வெறுமனே கவர்ச்சியுடன் மட்டுமே நின்று விட்டால் ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை சிம்ரன் அறிந்தே வைத்திருக்கிறார்.

அதனால் நடிப்பின் பக்கமும் கவனம் செலுத்தத் தொடங்கினார். 'வாலி' படத்தில் சிம்ரனின் நடிப்பு அனைவர் கண்களையும் வியக்க வைத்தது. இதன்பிறகு 20 லட்சம் சம்பளமாக வாங்குமளவுக்கு உயர்ந்தார். குஷ்பு, ரம்பா இவர்களைத் தொடர்ந்து சிம்ரனும் ரசிகர்களால் பேசுமளவுக்கு உயர்ந்தார்.

1995ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை திரையுலகில் நிலைத்து நிற்கிறார் என்றால் அதற்குக்காரணம் பெண்களும் விரும்பும் இவரது உடலழகே என்று கூறுகிறது தென்னிந்திய பத்திரிகை ஒன்று.

இவர் நடித்த படங்களில், 'துள்ளாத மனமும் துள்ளும்', 'வாலி', 'அவள்வருவாளா', 'கண்ணெதிரே தோன்றினாள்', 'ப்ரியமானவளே' குறிப்பிடத்தக்கவை. இவற்றில் ''துள்ளாத மனமும் துள்ளும்'' வெள்ளி விழாக் கொண்டாடிய படம்.

நடன மாஸ்டர் ராஜுசுந்தரத்துடனான காதல் விவகாரம் அம்பலமான நேரத்தில்தான் கமலின் 'பம்மல் கே சம்பந்தம்' படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார். கவர்ச்சி அஸ்திரத்தை நடிப்பு என்ற வில்லில் வைத்துத் தொடுப்பதனால் தான் சிம்ரனின் பயணம் வெற்றிப்பயணமாக அமைந்திருக்கிறது.

''பார்த்தேன் ரசித்தேன்'' படத்தின் மூலம் வில்லியாகவும் நடித்துள்ளார் சிம்ரன். இப்படத்தில் சிம்ரன் நடித்த 'தின்னாதே' என்ற பாடலில் ரசிகர்கள் கிறங்கித்தான் போய் விட்டார்கள்.

தமிழ் சினிமாவில் நடிகைக்காக ரசிகர்கள் தியேட்டருக்கு வருவதென்பது எப்போதாவதுதான் நடக்கும். அந்த வகையில் சிம்ரனின் படங்களுக்கு இளைஞர்கள், பெண்களின் மத்தியில் நல்ல வரவேற்பு உண்டு.

—ஷாம்



சிம்ரன்



சிம்ரன் தன் காதலர் ராஜுசுந்தரத்துடன்

# விஜயகாந்த்-ரஜினிகாந்த் மோதல் விரைவில் சூப்பர் பதிலடி!!



விஜயகாந்த்

தமிழ்த்திரையுலகில் மீண்டும் ஒரு பரபரப்பான மோதல்! அதுவும் திரையுலகின் இரு முக்கிய பிரமுகர்களிடையே இடம் பெற்றிருக்கிறது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஒரு காலத்தில் தமிழ்நாட்டு அரசியலையே நிர்ணயித்தவர், ஸ்டைல் மன்னன். இவர் பின்னால் ரசிகர்கள் பட்டாளமே இருக்கிறது.

விஜயகாந்த் — மதுரையின் மைந்தன். ஜாதி, சமூக அவலங்களுக்கு எதிராகத் தன் படங்கள் மூலம் குரல் கொடுக்கும் புரட்சிக் கலைஞன்.

இந்த இருவருக்குமிடையே தான் இப்போது மோதல் இடம்பெற்றுள்ளது.

இதுவரை தான் நடிக்கும் திரைப்படங்களில் ஆட்சியாளருக்கு மறைமுக எச்சரிக்கை விடுப்பவராகத் திகழ்ந்தவர் சூப்பர் ஸ்டார் ரஜினி தான். முன்னொரு காலத்தில் ஜெயலலிதா ஆட்சியில் ரஜினி படத்தின் வசனங்கள் அ.தி.மு.கவினரை எரிச்சலூட்டின. இது ஒரு பக்கமிருக்க 'நரசிம்மா' படத்தின் வசனங்கள் இது போன்ற சிறு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ரஜினியை குறிவைத்து வசனத்தாக்குதல் நடந்திருக்கிறது. விஜயகாந்த் பேசும் வசனங்கள் ரஜினியை சீண்டிப்பார்ப்பதாக அவருக்கு சவால் விடுவதாக இருக்கின்றன.

இதனால் ரஜனி ரசிகர்களுக்கும் விஜயகாந்த் ரசிகர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாம்.

விஜயகாந்த் போஸ்டர்களைக் கிழிக்க ரஜினி ரசிகர்கள் தயாராக, அப்படிச் செய்தால் திருப்பி அடிப்போம் என்று விஜயகாந்த் ரசிகர்களும் களமிறங்கி விட பெரும் பதற்றம் ஏற்பட்டதாம்.

இநத நிலைக்குக் காரணம், 'நரசிம்மா' படத்தில் இடம் பெற்ற வசனங்கள் தானாம். ''நான் அரசியலுக்கு வர்றதுன்னா நேரடியாக வந்திடுவேன். இப்பவர்றேன், அப்பவர்றேன் என்று பூச்சாண்டி காட்ட மாட்டேன்'' என்று குளோசப்பில் கையை நீட்டி அவர் பேசும் வசனம் யாரை மனதில் வைத்துப் பேசப்பட்டது என்பது தெளிவான ஒன்று.

ரஜினி — விஜயகாந்த் மோதல் இன்று நேற்று ஏற்பட்டதல்ல, விஜயகாந்த் திரையுலகில் வெற்றிகரமான கதாநாயகனாக வலம் வரத் தொடங்கிய போதே ரஜினி தரப்பில் இருந்து ரியாக்ஷன்கள் ஏற்படத் தொடங்கி விட்டதாம்.

ரஜினிகாந்த். எல்லோரும் வற்புறுத் திய பின்னர்தான் வந்தாராம்.

ரஜினியைப் பொறுத்த வரை அரசியலில் ஆர்வமே இல்லை. ரசிகர்களைத் திருப்திப்படுத்துவதற்கா கத்தான் அவ்வப்போது ஸ்டேட்மென்ட் விடுவார் என்றும் கருதப்படுகின்றது.

இவ்வளவு நாள் திரைக்குப் பின்னால் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகளில் ஒரு துளியை மட்டும் விஜயகாந்த் நரசிம்மாவில் பேசியதற்குக் காரணம் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலைதான் என்று கூறப்படுகின்றது.

ரஜினி வழியைப் பின்பற்றி பெயரை ரஜினி போலவே வைத்துக் கொண்டது. நிறம், 'ஹேர்ஸ்டைல்' போன்றவைகளில் ஒற்றுமை அக்ஷன் ஹீரோ என்ற இமேஜ் இவற்றையெல்லாம் பார்த்த ரஜினி வட்டாரம் விஜயகாந்திற்குத் தொடர்ந்து படங்கள் கிடைக்காமலிருப்பதற்கு முயற்சி எடுத்தது என்ற ஒரு கதையும் கோடம்பாக்கத்தில் உண்டு.

இத்தடைகளைத் தாண்டி விஜயகாந்த் ஒரு லெவலுக்கு வந்த பின்னரும் மறக்காமல் பதிலடி கொடுப்பதற்குக் காத்திருந்தார்.

திரையுலகமே ரஜினியை உச்சத்தில் வைத்துக் கொண்டாடும் போதும் விஜயகாந்த் ஒதுங்கியே இருந்தார். ஒதுங்கி இருந்தாலும் என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாகவே இருந்தார் என்று விஜயகாந்த் ரசிகர்கள் கூறுகின்றனர்.

இதற்கு வேறு ஒரு முக்கியமான காரணமும் இருக்கிறது. அது, விஜயகாந்த் நடிகர் சங்கத் தலைவர் தேர்தலில் நின்றபோது முதலில் ஓட்டுப்போடமறுத்து விட்டாராம்

நரசிம்மாவில் தமிழ் நாட்டின் அரசியலைச்சாடியிருக்கிறார் விஜயகாந்த்.

இது இப்படியிருக்க, ''ரஜனியைப் பற்றியோ ரஜினியைச் சுட்டிக் காட்டியோ எங்க கப்டன் பேசவில்லை. எங்கள் ரசிகர்களும் ரஜினி ரசிகர்களும் எல்லா ஊர்களிலும் ஒற்றுமையோடு தான் இருக்கிறார்கள். எங்க கப்டன் நடித்த படங்களை ரஜினி சாரே போன் செய்து தனியாக ப்ரிவியூ பார்த்துவிட்டு ''விஜிரொம்ப நல்லாப் பண்ணியிருக்கே உன்னைப் போல சண்டைக் காட்சிகளில் ரிஸ்க் எடுத்து யாராலும் நடிக்க முடியாது'' என்று பாராட்டுவார் இப்படிக் கூறுகிறார் தமிழ்நாடு விஜயகாந்த் தலைமை ரசிகர் மன்றத்தின் செயலாளர் எஸ். மணி. அது சரி ரஜினி தரப்பின் ரியாக்ஷன் என்ன?

'ரசிகர்கள் மிகவும் கொதித்துப் போயிருக்கிறார்கள். எனவே, நாம் ஏதாவது செய்தே ஆகவேண்டும். இல்லாவிட்டால் ஏற்கனவே பல மன்றங்கள் கலைக்கப்பட்டது போல் இப்போதும் ஆகி விடும் என்று ரஜினிக்கு ஆலோசனை சொல்லப்பட்டுள்ளதாம். விரைவில் ரஜினியின் பதிலடி வரக்கூடும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.



ரஜினிகாந்த்

# அக்காவுக்கு அட்வைஸ்

'சிட்டிசன்' படம் தனக்கு நிரந்தர இடத்தைப் பிடித்துத்தரும் என்று எதிர்பார்த்தார் நக்மா.

படத்தில் நக்மாவுக்கு எதிர்பார்த்த அளவு நல்ல கரெக்டர் கிடைத்திருந்தாலும் அந்தக் கரெக்டருக்கு கொடுக்கப் பட்ட குரல் ஆண்மைத்தனமானதாக இருந்ததனால் ரசிகர்களிடையே எடுபடவில்லை. அதனால் மீண்டும் மும்பைக்கே சென்ற நக்மா மன உளைச்சலில் இருந்திருக்கிறார்.

இதனைக் கேள்விப்பட்ட ஜோதிகா உடனடியாக மும்பைக்குச் சென்று அக்காவுக்கு ஆறுதல் கூறியதுடன், தான் தொடங்கியிருக்கும் புதுக்கம்பனியின் மூலமாக படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை அக்கா நக்மாவிடமே கொடுத்து விட்டாராம்.


ஜோதிகா

## இனி இவர்கள்.....!

* நரசிம்மாவை முடித்த கையோடு 'தவசி'யில் பிஸியாகியுள்ள விஜயகாந்த் தென்னரசு என்ற டைட்டிலை பதிவு செய்து வைத்திருக்கிறார்.

* 'செம்பா' படத்தில் நெப்போலியன் மீனவராக நடிப்பது தெரிந்த விஷயம். நடிப்பில் யதார்த்தம் இருக்க வேண்டும் என்பதற்காக படகு ஓட்டக்கற்று வருகிறாராம்.

* கார்த்திக்கின் முன்னாள் மனேஜர் கபார் 'மௌனம் பேசியதே' என்ற படத்தைத் தயாரிக்கிறார்.

* 'ஏறுமுகம்' படத்திற்காக நாயகியைத் தேடிக் கொண்டிருக்கும் சரண் ஆஸ்கார் பிலிம்ஸினருக்காக இயக்கும் படத்திற்கு 'ஜேஜே' என்று பெயரிட்டுள்ளார்.

தா'ன் பெற்றது பெறுக இவ்வையகம் என்ற கொள்கை யுடையவர் பிரபுதேவா. தனக்கு கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி

# தேவா சிபாரிசை மறுத்தார் லைலா!

தனக்கு பிரியமானவர்களுக்கும் வாய்ப்பு வாங்கிக் கொடுப்பதில் கெட்டிக்காரர்.

'சார்லி சப்ளின்' படத்தில் பிரபுதேவா முதலில் ப்ரியங்கா த்ரிவேதிக்கு சிபாரிசு செய்தார். அவர்கன்னடத்தில் பிஸியானதனால் லைலாவை சிபாரிசு செய்தாராம். தயாரிப்பாளரும் ஒத்துக் கொண்ட போதும் லைலா ஒத்துக் கொள்ள வில்லையாம்.


லைலா

# ஒட்டிக்கொண்டார் மோனல்

'சார்லி சப்ளின்' பூஜையை மிகவும் அமர்க்களமாக நடத்தினார் ரோஜாகம்பைன்ஸ் காஜாமைதீன். பூஜை மட்டுமல்ல மாற்றங்களும் பரபரப்பாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது.

இப்படத்திற்கு முதலில் இசையமைப்பதாகச் சொன்ன பரத்வாஜைக் காணவில்லை. பதிலாக இசையமைப்பாளர் பரணி. கதாநாயகிகளாக அபிராமி, லைலா தெரிவு செய்யப்பட்டனர். இப்போது லைலா மாறி காயத்ரி ரகுராம் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது கதாநாயகியாகச் சங்கவியை ஒப்பந்தம் செய்ய நினைத்திருந்தனர். ஆனாலும் சங்கவியின் தாயார் சம்மதிக்கவில்லை. இப்போது அந்த இடத்திற்கு மோனல் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

தனது காதலிக்காக தாஜ்மஹால் கட்டினான் ஷாஜஹான். காதலர்களைச் சேர்த்து வைக்கப் போராடுகிறார் புதிய 'ஷாஜஹான்'.

சூப்பர் குட் பிலிம்ஸின் சார்பில் சௌத்ரி தயாரிக்கும் 'ஷாஜஹான்' படத்தின் கதை நன்றாக இருக்கிறது என்று பாடலாசிரியர் வைரமுத்து பாராட்டுத் தெரிவித்ததோடு அதற்காக காதல் ரசம் சொட்டும் பாடல்களையும் எழுதிக் கொடுத்து இருக்கிறாராம்.

# மில்லேனிய "ஷாஜஹான்" விஜய்

மில்லேனிய ஷாஜஹானாக நடிப்பவர் விஜய். இவருக்கு ஜோடியாக ரிச்சா நடிக்கிறார். முழுமூச்சாக ஷாஜஹானில் பிஸியாகியுள்ளார் விஜய்.

# விவேக் பேச்சு கடுப்பில் கார்த்திக்

சமீபத்தில் 'லவ்லி' படத்தின் விளம்பர நிகழ்ச்சியிலே விவேக் பேசியபோது, ''கார்த்திக்கை எல்லோரும் கடவுள் என்றுதான் சொல்வோம். படப்பிடிப்பில் கூட கடவுள் வந்தாச்சா? கடவுள் மேக்கப் போட்டாச்சா என்றுதான் கேட்டுக் கொள்வோம். ஏனென்றால் அவர் எப்போது வருவார்? எப்போது படப்பிடிப்பில் இருந்து எஸ்கேப் ஆவார் என்று சொல்ல முடியாது'' என்று கூறினார். இந்தப்பேச்சைக்கேட்டு அங்கிருந்தவர்கள் சிரித்தாலும் கார்த்திக் கடுப்பாகி உள்ளாராம்.


கார்த்திக் — மாளவிகா

கதாநாயகிக் கனவுடன் திரையுலகில் குதித்தவர் ராதிகா சௌத்ரி. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக இரண்டாவது கதாநாயகியாகி பின்னர் ஒற் றைப் பாடலுக்கு ஆடினார்.


மந்த்ரா


ராதிகா சௌத்ரி

அதுவும் சரிப் பட்டு வராததினால் இப்போது மந்த்ராவுடன் கூட்டணி சேர்ந்துள்ளார்.

இருவரும் இணைந்து மகாபலிபுரம் செல்லும் சாலையில் கிளப்பொன்றை நடத்தி வருகிறார்கள். இந்த கவர்ச்சிக் கூட்டணியினரின் கிளப் இயங்கத் தொடங்குவது இரவு 7 மணிக்கு மேல்தானாம்.

# கவர்ச்சிக் கூட்டணி நடத்தும் நைட் கிளப்

# திரை மறைவில்

தித்திக்கும் தின்பண்டத்தின் பெயர் கொண்ட படத்தில் நடிக்கிறார் ஷாஜஹானின் காதலியின் பெயர் கொண்ட கவர்ச்சி நடிகை.

அம்மணி தண்ணி விஷயத்தில் தாராளமானவர் என்பது திரையுலகில் வெட்ட வெளிச்சமான விஷயம்.

படப்பிடிப்பில் அளவுக்கு மீறித் தண்ணியடித்ததனால் அப்செட்டான நிலையில் இருந்தார்.

டைரக்டர் அடுத்த 'ஷாட்' ரெடி என்று அழைத்த போதும் அம்மணி அசரவில்லையாம். அதிர்ச்சியுடன் அருகில் சென்று பார்த்தால் எனக்கு மூட் இல்லை என்று பதிலளித்தாராம். நான் கோடிக்கணக்காகக் கொட்டி படமெடுத்துக் கொண்டிருக்கிறேன். மூட் இல்லையாமா? என்று கோபமாகத் திட்டியிருக்கிறார் டைரக்டர். நடிகையும் தாறுமாறாகத் திட்டியதுடன் தனது கையைப்பிடித்து இழுத்ததாக நடிகர் சங்கத்தில் புகார் கொடுத்துள்ளார்.

* * *

என்னவளே' பெயர் சொல்லாமற் போனாலும் 'ஆனந்தம்' படத்தின் ஒற்றை ரூபா நாணயத்தில் பல்லாங்குழி ஆடியபாடல் மூலம் முன்னுக்கு வந்திருக்கிறார் ஸ்நேக நடிகை.

இவரது இப்போதைய இலட்சியம் ஒளிமயமான நடிகையை ஓரங்கட்டுவது தானாம். முதல் வேலையாக கமலுடன் ஜோடி சேரத் தூது விட்டுள்ளாராம்.

* * *

நடிகநடிகையரை நடிக்க வைப்பதனை விட சிரமமானது அவர்களுக்கு உணவு சப்ளை செய்வதுதான். ஷூட்டிங்குக்கு ஏகப்பட்ட பேர்களை அழைத்து வருவதுடன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அயிட்டங்களை ஓடர் செய்து விடுகிறார்களாம்.

இதில் முன்னணியில் நிற்பவர்கள் 'ஒளி'மயமான நடிகையும் 'ரன்' நடிகையும் தானாம்.

ஒளிமயமான நடிகைக்கு 'தாஜ்' ஹோட்டல் மட்டன் பிரியாணி ஸ்பெஷல் சாப்பாடும் 'ரன்' நடிகைக்கு ஜூஸ் அயிட்டங்களும் மிகவும் பிடிக்குமாம்.

* * *

'கருத் தம்மா' மூலம் பெயரெடுத்த 'ஸ்ரீ' நடிகையின் தங்கை காதலைச் சொல்லித்தானா தெரிய வேண்டும் படத்தில் நடித்தார். ஆனாலும் தங்கையை ரசிகர்கள் கண்டு கொள்ளவில்லை. அதனால் தெலுங்கு நோக்கித் திரும்பியுள்ளார். தமிழ் நடிகைகளைத் துகிலுரித்துக் காட்டும் தெலுங்குத் திரையுலகம் இவரையும் இருகரம் நீட்டி வரவேற்றுள்ளதாம்.

* * *

இசை ராஜாங்கம் நடத்திய இசையமைப்பாளர் சாதனைகள் பல செய்து விட்டவர். மகன்களை இசைக் களத்தில் இறக்கி விட்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். மூத்தமகனுக்கு தந்தையே பெண் பார்த்துத் திருமணம் செய்து வைத்தார். இப்போது இரண்டாவது மகனான இசையமைப்பாளரும் காதலில் கசிந்துருகியுள்ளாராம்.

* * *

நட்சத்திரத்தினைப் பெயரில் கொண்டவர் வான்மதி நாயகி 'திவாசு' நடிகை. இவர் நடிப்பதை விட வி.ஐ.பிக்களுக்கு கம்பனி கொடுப்பதிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றாராம். அதனால் தான் அம்மணியினால் நடிப்பில் சோபிக்க முடியவில்லையாம். அம்மணியின் லேட்டஸ்ட் கம்பனி ரமேஷான தமாஷ் நடிகராம். தமாஷ் நடிகருக்கு மார்க்கெட் இருப்பதனால் அம்மணி அவரை விட்டுப்பிரிவதில்லையாம். இப்போதைக்கு அம்மணியின் வாழ்க்கைச் செலவைக் கவனிப்பவர் தமாஷ் நடிகர்தானாம்.


பாபி

## சுடர் ஒளி சிறுகதை

# சொன்னால்தான்... காதலா!

என்.ஜெ.நிலா
சிலாபம்

செல்வி சாதாரண குடும்பத்துப் பெண். ஆனால் அழகு, அறிவு, அடக்கம், அன்பு என்று அத்தனை அம்சங்களும் அவளில் அடங்கியிருந்தன. பழகும் எவருக்குமே அவளைப் பிடித்துவிடும். அவ்வளவு நகைச்சுவையாகவும், பிறர் மனம் நோகாமலும் பேசும் திறமை அவளோடு கூடவே பிறந்தது.

இனி என்னைப்பற்றி சில வரிகள்.... நான் செல்வியின் நண்பி வாணி. இருவரும் ஒன்றாகவே படித்தது மட்டுமன்றி, பக்கத்து வீட்டவர்களும்கூட. எனது பெற்றோர் கடந்த வருடம்தான் விபத்து ஒன்றில் அகால மரணமடைந்தார்கள். எனக்குத் திருமணம் முடித்து ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. அப்படியென்றால் செல்விக்கும் மணமாகியிருக்கும் என்று நீங்கள் நினைக்கலாம்.... இல்லை அவள் இப்போதுதானே காதலிக்கவே ஆரம்பித்திருக்கிறாள்.

செல்வியின் காதல் புனிதமானது என்பது அவளின் வாதம். ஆனால் என்னைப் பொறுத்தவரை உலகின் முதல் முட்டாள்தனம் அதுதானென்பேன். காதலர்களே! என்னைக் காதலுக்கு வில்லியாக எண்ணிவிடாதீர்கள். அது இல்லாமலா கணவன், குழந்தை என்று உருவானது?

வானொலி என்பது பொழுதுபோக்குச் சாதனம். அதில் நாம் என்ன செய்வோம்? விரும்பிப் பாடல் கேட்போம். நிகழ்ச்சிகளில் எதிலும் பங்கு கொள்வோம். பரிசுகள் பெறுவோம் இவ்வளவுதானே? ஆனால் அதன் அறிவிப்பாளர்களில் காதல் கொள்வதென்றால், அது பைத்தியக்காரத்தனம்தானே? அதைத்தான் எனது அன்பு நண்பி செல்வி செய்து கொண்டிருக்கிறாள்.

செல்வி, 'செல்வா' என்ற பெயரையே அடிக்கடி உச்சரிக்கலானாள். எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. காதல், கத்தரிக்காய், புடலங்காய் என்றவள், இப்போது என்னடாவென்றால்...... என்னுடைய குட்டி மகனைக் கொஞ்சிக்கொண்டே, வானொலியின் சத்தத்தையும், அதிகரிக்கச் செய்தவளாக அதன் அருகிலேயே அமர்ந்து விட்டாள். என் கணவர் தொழில் நிமித்தம் அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார். தனிமைக்கு ஆறுதலாக செல்வியின் உதவிகளோடும், நகைச்சுவையான பேச்சுக்களோடும் பொழுதுகள் நகரும். ஆனால் இப்போது வானொலியைக் கட்டிக்கொண்டு அழுவதே செல்வியின் வாழ்க்கையாகிவிட்டது. இரவுகளில் விழித்திருப்பாள். பகல் பொழுதிலேனும் தூங்குவாள் என்று பார்த்தால்..... ம்ஹூம்.....

அவன் குரலில் ஒலித்த நிகழ்ச்சித் தொகுப்பு, கவிதைகளை மீண்டும் ஒருமுறை என்னிடம் சொல்லிச் சந்தோஷப்படுவாள். எனக்கும் கேட்டுக்கேட்டு காதுகள் இரண்டும் செவிடாகிப் போய் விட்டன. இவளை இவள் வழியில் விடுவது சரியில்லை என்று கேட்டுவிட்டேன்.

''என்ன செல்வி! இது பைத்தியக்காரத்தனம் என்று நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?'' என்றேன்.

''வாணி! என்னைப் புரிஞ்சவடி நீ! காதல் என்பதை நீ சொல்வது போலத்தான் இதுவரை நினைத்திருந்தேன். ஆனால் அது எவ்வளவு பெரிய... காவியம் என்றதெல் லாம் இப்பத்தாண்டி புரிஞ்சுது. செல்வா! (செல்வன் என்ற அந்த அறிவிப்பாளனின் பெயரைச் சுருக்கிச் செல்லமாக இவள் வைத்துக்கொண்டது) எப்படி எனக்குள்ள உயிரானார் என்று எனக்கு சொல்லத் தெரியேல்ல கணீர்க்குரல், காந்தச் சிரிப்பு என்று எல்லாமே.... என்னைக் கவர்ந்துவிட்டன. ஆனால் அவரின் முகத்தை இன்னும் காணவில்லை. எல்லாப் பத்திரிகைகளையும் பார்க்கிறேன். ஒன்றில்கூட அவரின் படத்தைப் போடுகிறார்களில்லையே!'' பெருமூச்சோடு கூறினாள்.

நான் கிண்டலாக ''நிச்சயமாய் வடிவேல் மாதிரித்தான்'' என்றேன். அவள் சிரித்துக்கொண்டே ''செல்வாவின் பெயரே எனக்குப் பொருத்தமாக இருக்கு பார்த்தியா?'' என்றவளிடம், குறுக்கிட்டு

''சரி, சரி செல்வி! உன்னை நான் புரிஞ்சிக்கிறேன். ஆனால் நீதான் அவனுடைய உருவத்தைப் பார்த்த தில்லை. உன்னைப் பற்றி அணுவளவு கூட அவனுக்குத் தெரியாது. இந்த லட்சணத்தில் உன் காதல் எந்த வழியில் வெற்றி பெறும்?'' என்று கோபமாகவே கேட்டேன்.

கடிதம், தொலைபேசி என்று ஒருவரை ஒருவர் அறியவும் வழியில்லை. கடிதம் ஒன்று எழுதவும் வெட்கமாக இருக்கிற தாம். தொலைபேசியில் தொடர்புகொள்ளவும் தயக்கமாக இருக்கிறதாம். அப்படி இந்த வழிகளில் இறங்கினால் தன்னைத் தவறாக எண்ணிவிடுவானோ என்று பயமாகவும், கவலையாகவும் இருக்கிறதாம். ஆனால் காதலில் மட்டும் எவ்வித மாற்றமுமில்லை. அதனால் தெய்வங்களிடம்தான் கையேந்துகிறாளாம். அவைகள்தான் தங்களைச் சேர்த்து வைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறாளாம்.

செல்விக்கும் பல இடங்களில் இருந்து திருமணப் பேச்சுக்கள் வந்தன. அதிலும் வெளிநாட்டு சம்பந்தங்கள்தான் அதிகமாக வந்து கொண்டிருந்தன. ஆனால் அவளோ, வேண்டாம் என்று ஒரு வார்த்தையிலேயே மறுத்துவிட்டாள். பெற்றவர்கள் காரணம் தெரியாமல் விழித்தார்கள். காரணம் தெரிந்த நானும், எதுவும் சொல்லமுடியாமல் மௌனமாக நின்றேன். இப்படியே காலம் கடந்து போய்க்கொண்டிருந்தது. செல்வியும் நவீனகால மீராவாக மாறி, அந்தக் கண்ணனை (செல்வனை) நினைத்து உருகினாள்.

அன்று வெள்ளிக்கிழமை. தொடர்ந்து மூன்று நாட்களாக செல்வி வீட்டுப் பக்கமே வரவில்லை. குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு, அவள் வீட்டிற்குச் சென்றேன். ஒருவரையும் காணவில்லை. செல்வியின் அறையிலிருந்து பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. கட்டிலில் கண்களை மூடியவாறு செல்வி கிடந்தாள். அவளருகில் சென்று நெற்றியில் கைகளை வைத்துப்பார்த்து ''செல்வி'' என்றேன். சத்தமில்லை. ''மிஸிஸ் செல்வா'' என்றழைத்துச் சிரித்தேன். திடுக்கிட்டவளாக எழுந்தமர்ந்தாள். என்னைக் கண்டதும் ''வா! வாணி'' என்றாள். ''உடம்புக்கென்னடி?'' என்றதும். ''ஒன்றுமில்லையே'' என்று லேசாகச் சிரித்தாள்.

நான் முதலில் செல்வியை உற்றுப்பார்த்தேன். கண்கள் சிவந்து, வீங்கியிருந்தன. குரலிலும் ஒரு தடுமாற்றம். அவள் அழுதிருக்கிறாள் என்பதை அவை பறைசாற்றின. அவள் திருமணங்களை மறுத்த போதும்கூட செல்வியின் பெற்றோர் அவளைக் கடிந்து பேசியது கிடையாது. அப்படியிருக்கையில் இவள் சோர்ந்து போயிருப்பதற்கு என்ன காரணம்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளின் கைகளைப் பற்றியவாறு... 'என்ன செல்வி! ஏன் அழுதாய்' என்றதும். என்னைக் கட்டிக் கொண்டு மீண்டும் அழலானாள். ஒரு மூச்சு அழுது முடித்தவள்.

தன்பிடியைத் தளர்த்தியவாறு, பக்கத்து மேசையில் இருந்த ரேடியோவில் ஒரு கஸெட்டைப் போட்டுவிட்டு, என் மடியில் தலைவைத்துப் படுத்துக்கொண்டாள். அதில்....

இன்று திருமண பந்தத்தில் இணையும், நமது அறிவிப்பாளர் செல்வனுக்கும் — லதாவுக்கும் நல்வாழ்த்துக்கள் என்று ஒலித்துக்கொண்டிருந்தது.

எனக்கு என் காதுகளையே நம்ப முடியவில்லை. கடவுளே! என்ன இது! எனக்கே இவ்வளவு அதிர்ச்சியென்றால்.... என் செல்விக்கு எப்படி இருந்திருக்கும்? டக்கென்று அதனை நிறுத்தினேன்.

கண்கள் கலங் கியவாறு, செல்விக்குஎப்படி ஆறுதல் சொல்வ தென்று தெரியாமல் அவளின் கைகளைப் பிடித்துக்கொண்டுவிழித்தேன். முதலில் முட்டாள்தனம் என்று கூறிய நான் செல்வியின் பேச்சுக்களிலும், செயல்க ளிலும் இருந்து அவளின் ஒருதலைக்காதலின் புனிதத் துவத்தைப் புரிந்து கொண்டேன். அவளின் கனவுகள் நிஜ மாக வேண்டுமென்று இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த நேரத்தில்தான் இவ்வாறு நடந்துவிட்டது.


இப்போது என்னைத் தேற்றுமளவிற்கு செல்வி தெளிவடைந்திருந்தாள். ''வாணி! 'நீ முன்பே சொன்ன மாதிரி, பைத்தியக்காரத்தனமென்பதை மட்டும் என்னால் ஏற்க முடியாது. என் ஏக்கம், எண்ணம், காதல் அத்தனையும் பொய்யில்லை. ஆனால்.... எல்லாமே கானல் நீரானது.... என்றவள் அதற்குமேல் பேச முடியாதவளாகத் தலையணைக்கு அடியில் இருந்த டயறியை எடுத்து என் கைகளில் வைத்துவிட்டு.... ரேடியோவை ஒலிக்கச் செய்தாள். நாட்குறிப்பில்.....

எனக்கு உயிர் என்றெண்ணியவன்....
அடுத்தவளுக்கு உரிமை என்றானபோது
உள்ளம் ஒருதரம் உறைந்து போனது....
மனம் யாரை நேசித்தாலும்....
திருமணம் என்பது இறைவனின்
இணைப்பில்தான் சேர்கிறது....!
அதனால்! யாரோடு நீ
வாழ்ந்தாலும் உன்னோடு நான்
வாழ்கிறேன்.... வாழ்க! நீங்கள்
இருவரும் நலமுடன்....!

செல்வியின் தெளிவு நன்றாகவே ஊர்ஜிதமானது. ஆனால், 'யாரோடு நீ வாழ்ந்தாலும்.....' என்னும் வரிகள் தான் கொஞ்சம் கலக்கமடையச் செய்தன. எங்கேயோ, யாரோ ஒரு பெண்ணோடு சந்தோஷமாக வாழப்போகும் ஒருவனுக்காக, இவள் தன் காலங்களைக் கழித்து, உண்மையில் மீராவாகவே மாறிவிடுவாளோ?

இவ்வளவு உறுதியைப் பெறுவதற்கு முகம் காணா அவன் மேல் இவள் எவ்வளவு நேசம் வைத்திருக்க வேண்டும். செல்வியின் காதல் என்னை நெகிழ வைத்தது.

சொன்னால்தான் காதலா? சொல்லாமலே இவள் காதலும் புனிதத்துவமடைந்துவிட்டதே.



## வாசகர் இதயம் பேசுகிறது




அறிவொளி பரப்பும் ''சுடர் ஒளி''யே! திருமலை மீனவர்களின் துயரக் கதையினை இதயம் கனக்கும் வகையில் இதமாகத் தந்தமைக்கு நன்றிகள். ''வீதிப் போராட்டம் ஒரு வீரகாவியம்'' எனும் தலைப்பில் அமைந்த ஆசிரியர் தலையங் கம் ''மக்கள் சக்தி மாபெரும் சக்தி'' என்பதை உணர்த் தியது. படங்களுடன் கூடியதாய் வீதிப்போராட்டத் தகவல் களைத் தந்து கண்முன் நிழலாட வைத்தமைக்கு நன்றி.

எஸ்.டிலக்ஷன், வவுனியா.

என் இனிய ''சுடர் ஒளி''யே! இலங்கையில் காண ப்படும் நிலைமைகளை உடனுக்குடன் தெரிவிக்கும் உன் நல்லெண்ணம் என் உள்ளத்தைக் கவர்கிறது. இளையோரின் திறமைகளை வெளிக்கொணர களம் அமைக்கும் இளஞ்சுடரே உன் பணி சிறக்கட்டும். பொதுவான விடயங்களை வெளிக்காட்டும் மசாலா மிக்ஸிற்கு என் உளங்கனிந்த பாராட்டுக்கள்.

ச.கிருசாந்தன், மானிப்பாய்.

பொங்குதமிழ் தலைவனின் விவரங்கள் மற்றும் வடபுலத்தில், தேரடி அரட்டை, பக்கத்து வீடு, கவிதைப்புனல் பகுதி அத்தனையும் நன்று. அதற்காக நன்றிகள்.

ரா.சேகர், கம்பளை.

''சுடர் ஒளி''யே சுவைபட பல சுவையான தகவல்களைத் தருவதில் வல்லவனாக நீ வலம் வருகிறாய். அரசியல் விமர்சனக் கட்டுரைகள், சிறுவர் கதைகள் யாவும் சுவையாக உள்ளன. உன் சேவை வளர என் வாழ்த்தும் நன்றியும்.

எம்.எஸ்.பாசீதா, முள்ளிப் பொத்தானை.

ஒளிச்சுடராய் ஒளி வீசிக் கொண்டிருக்கும் ''சுடர் ஒளி''யே நீ தொடர்ந்தும் ஒளி வீச எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் உள்நாட்டுச் செய்திகளையும் ஏனைய இடங்களில் இடம்பெறும் செய்திகளையும் ஒளிவு மறைவின்றி உண்மையை உண்மையாகவே பிரசுரிக்கின் றாய். உன்பணி மேலும் தொடர்ந்து வாசகர்களின் நெஞ்சங்க ளில் நீங்கா இடம் பிடிக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிக் கின்றேன்.

ம.கஜேந்திரன், முல்லைத்தீவு.

ஒளிதரப்போவது விளக்கா? பொங்கி வழியப் போவது குடமா? என்ற தலைப்பில் வெளியான சர்வஜன வாக் கெடுப்பு குறித்த கட்டுரை, சபாநாயகர் நாட்டில் இல்லாத வேளை இம்பீச்மெண்ட் பற்றிய குறிப்புகள் எல்லாம் ''சுடர் ஒளி''யின் தனித்துவத்தையே காட்டுகிறது. மக்களை வழிநடத்தும் உன் அரசியல் பார்வைக்கு நன்றிகள்.

த.கேதாரிகணேசன், கொழும்பு — 13.

ஒரே பாடசாலையில் இடம் பெற்ற நான்கு மாணவர்க ளின் தற்கொலையை வெளிச்சம் போட்டுக் காட்டிய சுடர் ஒளிக்கு நன்றி சொல்லவேண்டும். குறிப்பிட்ட அந்த ஆசிரியர்களைத் தண்டிக்க அரசு ஆவன செய்யுமா?

சி.தர்மேந்திரன், ஹற்றன்.

ஓகஸ்ட் 5ஆம் திகதி ''சுடர் ஒளி''யில் மலையகக் கண்ணோட்டத்தில் இடம்பெற்ற தற்கொலை ஆக்கம் நெஞ்சை நெகிழ வைத்துவிட்டது. அநியாயங்களைத் தட்டிக் கேட்டால்தான் நியாயம் பிறக்கும்.

எ.றெமீஜியஸ், மினுவாங்கொடை.

''சுடர் ஒளி''யில் வெளியாகும் வடபுல 'சிற்றுவேஷன் ரிப்போர்ட்', தேரடி அரட்டை என்பன தமிழர்களின் உண்மை யான நிலைமையினை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

சி.வாசுகி, திருநெல்வேலி.

கவிதைப் புனலில் வெளிவரும் கவிதைகளுக்கு சபாஷ்! ''சுடர் ஒளி'' பத்திரிகையானது மேலும் சுடர் பரப்பித் தன் முயற்சியில் முன்னேறி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

எம்.எஸ்.ஸாகிதா மர்யம், ஹந்தெஸ்ஸ.

## இதுவரை.....

மைக்கேலின் வழக்கில் வாதாடுவதற்காக கோர்ட்டுக்கு வருகிறாள் சுமரா. அரச தரப்பு வக்கீல் நோமன் அனுபவசாலி; திறமையானவன். அவனை வாதாடி வெல்லும் மனநிலையில் சுமரா இல்லை. எனினும் சுமராவின் வாதங்கள் சற்றுத் தடுமாறவே வைத்தன. வழக்கைத் தன் தரப்புக்குச் சாதகமாகக் கொண்டுவரும் முயற்சியில் அவள் ஓரளவு வெற்றி பெறும் நிலை. அப்போது திடீரென்று வயிற்றுவலி அவளைத் தாக்குகிறது. மயங்கிச் சாய்கிறாள் சுமரா.


**இனி.....**

# சுடர் ஒளி தொடர் கதை

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் 12

மு.சிவநேசன்



சுமராவின் கணவன் வில்லியம் பார்வையாளர் பகுதியிலிருந்து எழுந்து ஓடி வந்தான். அடியற்ற மரம் போல விழுந்தவளை அவன் ஏந்தி நிறுத்த முயன்று கொண்டிருந்தான். அவசரமாக அம்புலன்ஸில் ஏற்றப்பட்டு அவள் அனுப்பப்பட்டாள்.

* * *

மைக்கேல் ஒரு கொலையாளியா? உண்மை நிலைவரம் யாருக்குத் தெரியும்? ஆனால் கோர்ட்டில் றோமனதும் சுமராவினதும் வாதத் திறமைகள்தான் அவனது தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்றன. இதுதான் கிரிமினல் வழக்குகளின் விதி.

மைக்கேல் ஒரு பிரபல தொழில் அதிபர். அவனது சொத்துக்கள் மிகவும் பரந்தவை. பெருமளவில் குற்றச்செயல்களை மேற்கொள்ளும் பல ஏஜென்ஸிகளை அவன் நடத்தக் கூடும் என்கின்ற சந்தேகம் ஊகமாக நெடுங்காலம் அடிபட்டே வந்தது. ஆனால் அவனைக் கண்காணிப்பவர்களால் எதனையும் ஆதாரப்படுத்த இயலவில்லை.

அவனது அலுவலக குப்பைக் கூடைக் கழிவுகள்கூட அடிக்கடி இரகசியமாக பொலிஸ் தலைமையகத்துக்கு ஆராய்ச்சிக்காக வந்து விடுவதுண்டு. அதில் எதையும் பிடுங்க இயலுவதில்லை. பிரத்தியேகமாக வேறு அலுவலகங்களையும் அவன் கொண்டிருக்கிறான். ஆனால் அந்த இடங்கள் அவனது எந்த மாளிகையில், எந்த மாடியில் செயற்படுகின்றன எனக் கண்டுபிடிப்பது இயலாத காரியம்.

அவனிடம் வேலைக்கு வந்திருப்பவர்களில் பலர் உளவறியும் பணிக்காக பொலிஸாரினால் அமர்த்தப்பட்டவர்கள் என்பதனையும் அவன் அறிவான். எனவே எதிலும் மிக எச்சரிக்கையாகவே நடந்து கொள்வது அவனது வழமை.

பெருமளவில் கணக்குக் காட்டப்படாத சொத்துக்களை வைத்திருப்பதாக வருமானவரி அதிகாரிகள் அவன்மீது அடிக்கடி குற்றம் சாட்டி வந்தனர். இக்குற்றச்சாட்டுக்களை எல்லாம் ஒரு தொல்லையாகவே கருதாது அடிக்கடி கோர்ட்டுக்கு வந்து சமாளித்துவிட்டுப் போய்விடுவான் அவன்.

சிவில் குற்றச்சாட்டுக்களை ஏற்று அடிக்கடி நீதிமன்றம் வருகின்ற அவன்மீது கிரிமினல் குற்றச்சாட்டுக்களை சுமத்த எவருக்கும் துணிவு வரவில்லை. அவனது ஏராளமான அலுவலகங்களில் பல அந்தரங்கச் செயலாளர்கள் கடமையில் இருந்தனர். அவனது நம்பிக்கைக்குப் பாத்திரமான இளம் பெண்கள் அவர்கள்.

பெண்களை நம்பி மோசம் போனவர்களில் மைக்கேலும் ஒருவன். மைக்கேலின் யு5 என இரகசிய இலக்கமிடப்பட்ட ஒரு கண்காணிப்பு அலுவலகமொன்றில் வேலை செய்தவள் செயலாளர் மேசி. அவள் அவனது பெறுமதிமிக்க பல தகவல்களை கணினியில் புகுத்திக் கொண்டிருப்பாள். மைக்கேலின் கணினிக் கோப்புக்களின் பெயர்களும் அவற்றைத் திறக்கும் இரகசிய இலக்கங்களும் அவளுக்கு அத்துப்படி.

அவள் பல தகவல்களை தனது காதலனான டானியலுக்கு வஞ்சகமின்றிக் கூறி வந்திருக்கிறாள். அவற்றில் பெறுமதியான சில தகவல்களை இனங்கண்டு துப்பறியும் தனியார் ஏஜென்ஸிகளுக்கு விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தான் டானியல்.

இத் தகவல்கள் பல மோசடிகளைத் துப்புத் துலக்க உதவிவந்தன. எனினும் அந்த மோசடிகள், குற்றச் செயல்கள் எதிலும் மைக்கேல் நேரடியாகச் சம்பந்தப்பட்டு இருக்கவில்லை. ஆனால் யு5 ஊடாக செயற்படும் கருமங்களில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுவதை மைக்கேல் அவதானித்து வந்திருக்கிறான். அவனோடு அதிகம் இழைந்து குழைந்து பழகி எதற்கும் தாராளமாகவே விட்டுத்தரும் மனப்பாங்கு கொண்ட மேசியை அவனால் சந்தேகிக்க இயலவில்லை. மேசி பெயருக்கு ஏற்ற வகையில் தன்னோடு இரக்கமாகவே இருப்பாள் என மைக்கேல் எதிர்பார்த்தான்.

எனினும் மேசியைக் கண்காணிக்க வேண்டிய தேவை எழுந்து விட்டது. அவளுக்கு ஒரு காதலன் இருக்கிறான் என்கிற செய்தி கிடைத்த போது மைக்கேலினால் அதனை ஜீரணிக்க இயலவில்லை. அதைப் பற்றி அவளிடம் சூசமாக விசாரித்துப் பார்த்தான். 'காதலாவது? கத்தரிக்காயாவது?' என்ற அலட்சியமான அவளது போலிப் பதில் மைக்கேலை என்னவோ செய்தது.

அவளது காதலன் டானியல் துப்பறியும் ஏஜென்ஸிப் படிகளில் ஏறி இறங்குவதும் அடுத்துத் தெரியவந்தது. கடமை முடிந்து இருவரும் கடற் கரையிலும் ஹோட்டல்களிலும் சந்திப்பதும், விடிந்ததும் மேசி வேலைக்குப் போனபின் அவன் தகவல்களை விற்க அலைவதும் வழமையான நிகழ்வுகள்.

இந்த வியாபாரம் மேசியின் சம்மதத்துடன் நடக்கிறதா, இல்லை அவள் வஞ்சகமின்றி இருக்கிறாளா? என்பதெல்லாம் மைக்கேலைப் பொறுத்தவரை அவசியமில்லாத ஆராய்ச்சிகள். இப்பொழுதெல்லாம் அவன் கேட்டுக் கொண்டபடி சலிக்காமல் சந்திக்க மேசியால் இயலுவதில்லை என்பதனையும், நிலைமையின் போக்கு யு5 இனது ஆரோக்கியத்துக்கு உகந்தது அல்ல என்பதனையும் மைக்கேல் கண்டுகொண்டான்.

எனவே மேசியைக் கண்காணிக்க ஆட்களை அமர்த்தியிருந்தான் மைக்கேல். அவளது கடமை அவனுக்கு முக்கியமானது. அதில் அவள் துரோகம் இழைத்தால் அதனை அவனால் மன்னிக்க இயலாது. அவள் டானியலைக் காதலிப்பதை மட்டும் அனுமதிக்கலாம் என நினைத்தான் மைக்கேல்.

சனிக்கிழமை இரவு மேசியும் டானியலும் லேக்வியூ ரவுணுக்குப் பயணமானார்கள். சுவடு பிடிக்கும் மைக்கேலின் உதவியாட்களும் அதே பஸ்ஸில் ஆசனத்தைப் பதிந்து கொண்டனர். டானியலும் மேசியும் இருந்த டபிள் சீற்றின் இடுக்கில் அவர்களின் கழுத்து மட்டத் தில் ஒரு நுண்ணிய ஒலிப்பதிவுக் கருவி சொருகப் பட்டு இருந்தது.

நேரே பின் வரிசையில் இருந்த மைக்கேலின் ஆட்களை மேசிக்குத் தெரிய நியாயமில்லை. அவர்கள் இவர்களது உரையாடல்களைப் பதிந்து கொண்டி ருந்தனர். இருளைத் துழாவி அவர்களது கண்கள் இவர்களது லீலைகளை ரசித்துக் கொண்டிருந்தன.

மேசி மயக்கக் கிறக்கத்தில் இருந்தாள். அவளது கரங்கள் டானியல் மீது படரத் தொடங்கின. அவனது கேள்விகள் காதல் தொடர்பாக இருக்கவில்லை. அவளது அலுவலகச் செய்திகளை அறிவதிலேயே அவன் குறியாக இருந்தான்.

அவனது கேள்விகள் எதற்கும் அவள் பதில் சொல்லத் தயங்கவில்லை. ஆண்களை மயக்கித் துப்பறிய பெண்களைப் பயன்படுத்துவதுதான் வழக்கம். இங்கே டானியல் இவளிடம் கதை பிடுங்குகிறானே என மைக்கேலின் ஆட்கள் நினைத்துக் கொண்டனர்.

உரையாடல்களை மைக்கேல் நேரடியாகக் கேட்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. கேட்டபோது அவனது இரத்தக் கொதிப்பு மேலும் அதிகமாயிற்று. மைக்கேல் பற்றி டானியல் மேசியிடம் விசாரித்தான்.

''அவன் ஒரு மென்மையான ஆள். உறவுக்கு உதவான். பெண்களுக்கு அவனைப் பிடிக்காது. உன்னைப் போல முரடனாக, இரக்கம் அற்றவனாக இருந்தால்தான் ஆம்பிளை!'' என்றாள் அவள்.

இது மைக்கேலுக்கு ஒரு கௌரவப் பிரச்சினையாக மனதில் உருவெடுத்தது. தனது சுய ரூபத்தை அவன் மேசியிடம் காட்டியிருக்கவில்லை. அவளுடன் மிக மென்மையாகவே ஒரு பெண் தோழி போல பழகி இருந்தான்.

இரவுப் பயணத்தில் மேசியும் டானியலும் உற்சாகமாக இருந்தனர். இவர்களது சம்பாஷணையை உறக்கத்தின் ஊடே வாய் பிளந்து கேட்கவேண்டிய விதி மைக்கேலுக்கு இருந்தது. ஒருவாறு அவர்கள் ஏரிக் கரை ஹோட்டலை வந்தடைந்தனர். அவர்களது அறையில் ஒரு வீடியோ கமெராவை மைக்கேலின் ஆட்கள் துல்லியமாகப் பொருத்தி இருந்தனர்.

காட்சி மைக்கேலின் தொலைக் காட்சியில் ஓடத் தொடங்கியது. பஸ் பயணத்தின்போது உச்ச மயக்கத்தில் இருந்த மேசியின் நிலையை அறைக்குள் சொல் லியா தெரியவேண்டும். டானில் தகவல்கள் தொடர்பாகக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கணினிப் பதிவுகளின் பிரிண்ட் பிரதிகளை மேசி பயணப் பையிலிருந்து எடுத்து அவனிடம் கையளித்தாள். உடனே சில டிஸ்கெட்டுகளையும் அவள் அவனிடம் தந்தாள்.

(தொடரும்)

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச்சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | | | | | | | |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | திரைத்தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | நீங்கள் கேட்ட பாடல் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டி.வி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டி.வி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | தித்திக்கும் ஓசை | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |



# கர்ப்பிணிகளைத் தாக்கும் பிணி

பெண்களை அதிகம் தாக்கும் நோய் 'இரத்தச் சோகை'. இரத்தச் சோகை ஏற்பட முக்கிய காரணம் உடலில் போதுமான அளவு இரும்புச் சத்து இல்லாததே ஆகும்.

இரத்தத்தில் சிவப்பு அணுக்களின் உற்பத்தி குறைவாகக் காணப்படுவதே இதற்குக் காரணம்.

சிவப்பு அணுக்களில் உள்ள ''ஹீமோகுளோபின்'' இரத்தத்துக்குச் சிவப்பு நிறத்தைத் தருகிறது. 100 மில்லி லீற்றர் குருதியில் 14.5 கிராம் ஹீமோகுளோபின் இருந்தால் அந்த நபருக்கு 100% இரத்தம் உள்ளது. எனினும் பல பெண்களுக்கு இதன் அளவு 80% – 90% வரைதான் இருக்கும். 60% குறைந்தால் இரத்தச் சோகை ஏற்படும். மேலும் ஹீமோகுளோபினின் அளவு 8 கிராமுக்கும் குறைவாக இருந்தால் இரத்தச் சோகை மிகக் கடுமையாகஇருக்கும்.

சிவப்பு அணுக்கள் அழிவதற்கு மாதவிடாய் காரணமாக ஏற்படும் அதிக இரத்தப் போக்கும் ஒரு காரணம் ஆகும். மூல நோய், கொக்கிப் புழுத் தொல்லையால் ஏற்படும் அதிக இரத்தப்போக்கு, மற்றும் இரத்தப் புற்றுநோய் என்பனவும் இரத்தச் சோகைக்குக் காரணங்களாகும்.

உடலில் இரும்புச் சத்து சரியான அளவில் இருந்தால்தான் சிவப்பு அணுக்களும் சரியான அளவில் இருக்கும்.

மாதவிடாய் காரணமாக ஏற்படும் இரத்த இழப்பை ஈடு செய்யவும், கர்ப்ப காலத்திலும், பிள்ளைகளுக்குப் பாலூட்டும் காலத்திலும் பெண்களுக்கு வழக்கத்தை விட அதிகமான இரும்புச் சத்து தேவைப்படுகிறது.

எனவே பெண்கள் இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

பசளிக்கீரை, முருங்கைக்கீரை, முருக்கங்காய், பீட்றூட், பூசணி, புடலங்காய், இறைச்சி, மீன், முட்டை, ஈரல், பேரீச்சம் பழம், அன்னாசிப்பழம் போன்றவற்றில் இரும்புச் சத்து அதிகம் உண்டு.

ஒருவருக்கு நாளொன்றுக்கு 15 மில்லி கிராம் இரும்புச் சத்து தேவைப் படுவதால் உணவில் மேற்கூறப்பட்டவற்றைச் சேர்க்க வேண்டும். அத்துடன் புரதம், விற்றமின் 'பி12', விற்றமின் 'சி' போலிக் அமிலம் ஆகியவை உள்ள உணவுவகைகளையும் உண்ண வேண்டும்.

மேலும் கர்ப்பிணிகளுக்கு நாளொன்றுக்கு 20 மில்லிகிராம் இரும்புச் சத்து தேவை. ஆனால் 12 மில்லி கிராமுக்குக் குறைவான இரும்புச் சத்தே கர்ப்பிணிகளின் தினசரி உணவில் இருக்கும்.

கர்ப்பிணிகளுக்கு இரத்தச் சோகை ஏற்பட்டால் கருச்சிதைவு, குறைப்பிரசவம், ஊனமான குழந்தை பிறத்தல் போன்ற அசாதாரண நிகழ்வுகள் இடம்பெறக்கூடும். அத்துடன் தாய்க்கும், சேய்க்கும் மரணம் கூட சம்பவிக்கலாம்.

எனவே கர்ப்பிணிகள் கட்டாயமாக இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும். நிறையப் பழங்கள் சாப்பிட வேண்டும்.

இதனால் தான் வைத்தியர்கள் கர்ப்பிணிகளுக்கு இரும்புச்சத்து உள்ள மாத்திரைகளையும், டானிக்குகளையும் குடிக்கும்படி வற்புறுத்துகிறார்கள்.

**இரத்தச் சோகையின் அறிகுறிகளாவன: —**

* சோர்வு, மயக்கம் ஏற்படல்
* கை, கால்கள் அடிக்கடி உணர்ச்சியற்று மரத்துப் போதல்
* கண்கள், நகங்கள் வெளிறிக் காணப்படல்
* வேலை செய்யும் போது பெருமூச்சு ஏற்படல்.
* அடிக்கடி தலைவலி ஏற்படல்.
* வயிற்றுப் போக்கு, சமிபாடின்மை ஏற்படல்.
* கை, கால், முகத்தில் வீக்கம் ஏற்படல்.
* இதயப் படபடப்பு ஏற்படல்.
* நெஞ்சுவலி ஏற்படல்.

# வீட்டுக்கு லட்சுமிகரம் குத்துவிளக்கு

இந்துக்களின் சமயாசாரங்களில் முக்கிய இடம் வகிப்பது குத்து விளக்கு.

குத்து விளக்கு நான்கு அல்லது ஐந்து முகங்களை உடையது. நான்கு திசைகளிலும் நம் ஒளி பரவட்டும் ஐந்து பொறிகளும் ஒளியுடன் விளங்கட்டும் என்பதற்காகவே நான்கு முகமாக அல்லது ஐந்து முகமாக விளக்குகள் ஏற்றப்படு கின்றன. குறிப்பிட்ட சில திசைகளைப் பார்த்துத்தான் விளக்கு ஏற்ற வேண்டும் என்று இல்லை. எந்தத் திசையும் குறைவானது அல்ல. எல்லாப் பக்கமும் தீபம் ஏற்றலாம்.

இறந்தவர்களுக்குத் தென் திசையில் விளக்கு வைப்பது என்று ஒரு வழக்கம் உண்டு. எனினும் தென் திசை எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. சைவர்களுக்குச் சிறப்புமிக்க தலமாகிய சிதம்பரமும், வைணவர்களுக்கு சிறப்பு மிக்க தலமாகிய திருவரங்கமும் தென்திசையை நோக்கியே இருக்கின்றன.



நெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் ஆகிய மூன்று எண்ணெய் வகைகளையும் கலந்து விளக்கு ஏற்றுவது மங்களம் தரும்.

கண்களுக்கு எரிச்சல் தராத எண்ணெய்யையே பயன்படுத்த வேண்டும். ஏனெனில் தியானம் செய்து இறைவனை வழிபடும் போது இடையூறு ஏற்படக் கூடாது அல்லவா?

விளக்கு ஏற்றுவதற்கு எல்லாவற்றையும் விடச் சிறந்தது நெய் ஆகும்.


# ஆரோக்கியத்துக்கு உகந்த முளை உணவு

நீங்கள் இளமையாக இருக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் முளை கட்டிய உணவுவகைகளை உண்ணுங்கள்.

சோளம், கொண்டல் கடலை, வேர்க் கடலை, பாசிப்பயறு ஆகியவற்றை முளை கட்டவைத்து உண்ண முடியும்.

முளை கட்ட வைக்கும் முன்னர் கடையிலிருந்து வாங்கி வந்தவுடன் விதைகளை இரசாயன மருந்துகள் போக நன்றாகக் கழுவ வேண்டும்.

சிறிய அளவிலான விதைகளை 5 மணி நேரமும், நடுத்தர அளவிலான விதைகளை 8 மணி நேரமும், பெரிய அளவிலான விதைகளை 12 மணி நேரமும் ஊற வைக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தைவிட அதிகமாக ஊறவைத்தால் விதைகள் அழுகி விடும். அத்துடன் அதிக வெப்பமான இடத்திலோ, அதிக குளிர்ச்சியான இடத்திலோ வைத்தால் சில விதைகள் முளைவிடாது போகும்.



முளை கட்டிய விதைகளில் விற்றமின்கள், தாதுப் பொருட்கள், புரதம், மாச்சத்து, நீர், நார்ச்சத்து என்பன அதிகம் உள்ளன. அத்துடன் இவற்றில் நொதிகள் ஏற்கனவே தாக்கம் புரிந்துள்ளதால் விரைவில் சமிபாடடையும். உடலில் தேவையில்லாத வாயுக்களின் உற்பத்தி குறையும். அத்துடன் இரைப்பை, குடலில் உள்ள காபனீர் ஒட்சைட்டை அகற்றுகிறது.

சிறுவர்களுக்கு முளைகட்டிய விதைகளைக் கொடுப்பதால் விற்றமின் குறைபாட்டால் ஏற்படும் நோய்கள் வராது. அடிக்கடி இருமல், காய்ச்சல் வராது, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும். எலும்பு, பல் வளர்ச்சி நன்கு அமையும். உடல் நிலை ஆரோக்கியமாக இருக்கும். மூளை சுறுசுறுப்பாக இயங்கும். ஞாபக சக்தி அதிகமாகும். பிள்ளைகள் உற்சாகமாக இருப்பார்கள்.

முளை கட்டிய உணவு வாலிப வயதில் உள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் மூளைக்கு நிறைய சக்தியைக் கொடுக்கிறது. உடலுக்குத் தேவையான சத்தையும், சக்தியையும் வழங்குகின்றது.

பருவவயதில் உள்ள பெண்களின் முக அழகை மென்மையாக்கி, தோலைப் பளபளப்பாக்குகின்றது. கண்களை அழகாக்குகிறது. மேலும் இன்சுலின் சுரப்பை ஒழுங்கு படுத்துவதால் நோய் ஏற்படும் அபாயத்திலிருந்து தப்ப முடிகிறது. முதியவர்களுக்கு மூட்டுத் தேய்வு, எலும்புகள் உடைதல், பலவீனம், ஞாபகமறதி போன்ற வற்றுக்கு முளைகட்டிய விதைகள் சிறந்த உணவாகும்.

சிறுவர்களின் வயதுக்குத் தக்கபடி முளைகட்டிய விதைகளைக் கொடுக்க வேண்டும். இளைஞர்களுக்குத் தினமும் அரை கப் முளைகட்டிய உணவும், வயதானவர்களுக்கு காலையும், மாலையும் அரை கப் முளைகட்டிய உணவும் கொடுக்க வேண்டும்.

முளை கட்டிய உணவைக் காலையில் உண்பது நல்லது. மெதுவாக மென்று உண்ண வேண்டும். இவற்றை உண்டு அரைமணித்தியாலத்துக்கு வேறு எவ்வகையான திண்ம, திரவ உணவுகளையும் உண்பதைத் தவிர்க்க வேண்டும்.

உடற்பயிற்சி செய்து அரைமணிநேரத்தின் பின்புதான் உண்ண வேண்டும். வேறு சத்துள்ள உணவுகளுடன் இதைச் சேர்த்து உண்ணக் கூடாது. ஒரே நாளில் அதிகளவான முளை கட்டிய உணவை உண்ணாமல் அதன் அளவைப் படிப்படியாகவே அதிகரிக்க வேண்டும்.



## பெண்

பிரதீபா — பவீனா



# பெண்கள் இரகசியம் காப்பார்களா?

''ஒரு செய்தியை பரப்பிவிட வேண்டுமா? அதை பெண்களிடம் கூறுங்கள். அவர்கள் பி.பி.ஸியைவிட வேகமாக செய்தி பரப்புவார்கள்.''

இது பெண்கள் மீது உள்ள ஒரு பொதுவான குற்றச்சாட்டு.

பெண்களைப் போல இரகசியம் காப்பவர்கள் வேறு யாரும் இல்லை என்றால் நம்புவீர்களா? நம்பத் தான் வேண்டும். இது உண்மை!

இராஜதந்திர இரகசியங்களைக்கூட ஆண்களிடமிருந்து புத்திசாலித்தனமாக பெண்கள் வெளியே எடுக்கக் கூடியவர்கள் எனக் கூறப்படுகிறது. ஆண்களைக் குடிக்கச் செய்தால் தானாகவே இரகசியங்களைக் கக்கி விடுவார்கள்.

பெண்களிடம் இரகசியம் கேட்க முயன்றால் விளைவுகள் வேறு விதமாக அமையும். ஒன்றில் அவர்கள் வாய் திறந்து எதனையும் ஒப்புவிக்க மாட்டார்கள் அல்லது இறந்து விடுவார்கள். ஆனால் இரகசியம் வெளியே வராது.

இரகசியம் காத்த பெண்கள் பற்றி பல வரலாறுகள் உள்ளன.

மாதா ஹறி என்பவர் ஜேர்மனியின் பெண் உளவாளி. இவர் இங்கிலாந்தில் இருந்து ஜேர்மனிக்கு உளவு பார்த்தார். எதிரிகள் பலர் தூக்கிலிடப்படுவதற்கு இவர் காரணமாகஇருந்தார். இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் மீது அமெரிக்கா குண்டு வீசியது எல் லோரும் அறிந்த விடயம். ஆனால் அமெரிக் காவைத் தாக்க ஜப்பான் இரகசியமாகச் செயல்பட்டது யாருக்கும் தெரியாது.

அதை உளவு பார்த்து சரியான சந்தர்ப்பத்தில் அமெரிக்காவை உஷார்படுத்தியவர் ஒரு பெண். அவர் அப்போதைய அமெரிக்க அதிபரின் காரியதரிசி. இந்த உண்மை 2000 ஆம் ஆண்டிலேயே தெரிய வந்தது.

பொதுவாகப் பெண்கள் வெளியில் கூறும் சமாச்சாரங்கள் உண்மை யில் இரகசியங்கள் அல்ல.

ஒரே நிறுவனத்தில் தொழில் புரியும் கீதாவும் சுரேஷும் காதலிக்கிறார்கள் என்று ஒரு பெண் வெளியில் சொன்னால் அது இரகசியத்தை அம்பலப்படுத்துவதல்ல. ஏனென்றால் நாட்கள் கழியும் போது இதை எல்லோரும் தெரிந்து கொள்வார்கள். அத்துடன் ஒருத்தரை ஒருத்தர் ஏமாற்றாமல் இருக்கவும் ஒருவகையில் இது உதவும்.

ஆனால் அதே கீதா சிறுவயதில் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டவள் என்பதை இன்னொரு பெண் தெரிந்து கொண்டால் நிச்சயமாக வெளியில் சொல்லமாட்டாள். மாறாக கீதாவுக்கு நல்ல வாழ்க்கையைத் தேடிக் கொடுப்பாள்.

ஒரு தனிமனிதனின், குடும்பத்தில் அல்லது நாட்டின் கௌரவத்தைப் பாதிக்கும் எந்த விடயத்தையும் ஒரு பெண் காப்பாற்றுவாள். அதனை நடைமுறையில் நாம் காணலாம்.

# மட்டக்களப்பில் படையினர் பலி
# பிஸ்டல் குழுவால் தொடரும் கிலி

## 2 மாத காலத்தில் 20க்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலும் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரின் தாக்குதல்கள் தற்போது அதிகரித்து வருகின்றன.

இக்குழுவினர் தாக்குதல் நடத்தி விட்டுச் சாதுரியமாகத் தப்பிவிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் அப்பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரம் படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட ஒரு பிரதேசம் ஆகும்.

சுற்றிவர வாவிகள் சூழ்ந்தது இந்த நகரம். நகரத்துக்கான பிரதான நுழைவாயில்களான கல்லடிப்பாலம், வலையிறவுப்பாலம், ஊறணி உட்பட பல இடங்களிலும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வயது வித்தியாசமின்றி அனைவரும் கடுமையான உடற் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அப்படி இருக்க எவ்வாறு புலிகளின் பிஸ்டல் குழுவினர் ஊடுருவித் தாக்குதல் நடத்துகின்றனர்? என்பது படையினருக்குப் புரியாத புதிராக இருந்து வருகிறது.

மட்டக்களப்பு நகரத்தைவிட மட்டக்களப்பின் புற நகரப்பகுதிகளிலும் மாவட்டத்தின் இதர பகுதிகளிலும், இவ்வாறான தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இத்தகைய தாக்குதல்களினால் கடந்த மாதப் பிற்பகுதியில் மட்டும் மூவர் பலியாகினர்; இருவர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவதினம் ஆலய பின்புற வீதியில் வைத்து முன்னாள் ராசிக் குழு உறுப்பினர் தம்பிராசா தெய்வேந்திரராசா என்பவர் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேதினம் நண்பகல் வி.ரி.ஜெயதிஸ்ஸ (வயது 39) என்ற பொலிஸ்காரர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

ஜூலை 21ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வீதியில் இடம்பெற்ற பிஸ்டல் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பந்துல எனும் பொலிஸ்காரர் பலியானார்.

22ஆம் திகதி கல்முனையில் சின்னத்தம்பி அப்துல் ஹமீட் (வயது 37) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஊர்காவல் படையைச்சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

23ஆம் திகதி ஓட்டமாவடியில் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் பணிமனையில் கடமை புரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் சேனவீர (வயது 30) ஓட்டமாவடியில் வைத்துச் சுடப்பட்டார். எனினும் காயத்துடன் இவர் தப்பி விட்டார்.

இவ்வாறு ஜூன், ஜூலை மாதங்களில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் பிஸ்டல் குழுவினரின் தாக்குதலுக்கு உள்ளாகினர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரியாக லெப்ரினன் கேணல் அன்ரனீஸ் தமது கடமைகளை மீண்டும் பொறுப்பேற்றுள்ளார்.

புலமைப் பரிசில் பெற்று ஒருமாத விடுமுறையில் இவர் நெதர்லாந்து சென்றிருந்தார்.

இவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டிருந்த லெப்டினன் கேணல் மானவடுகே அக்காலகட்டத்தில் அன்ரனியை விட கடும் போக்கினைக் கடைப்பிடித்து வந்தவர் என்று கூறப்படுகிறது.

—சத்துருக்கன்

## தேன் எடுக்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை!

இராணுவக் கட்டுப்பாடற்ற முறுத்தானையில் இருந்து ஹெளி கல்லுப்பகுதிக்கு தேன் எடுக்கச் சென்ற ஒன்பது பேரில் ஒருவர் வீடு திரும்பவில்லை.

காட்டுக்குள் மறைந்திருந்தவர்கள் தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்கள் வெலிக்கந்தைப் பகுதியைச் சேர்ந்த படையினரே என்றும் தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

தம்பிமுத்து கறுவல்தம்பி (45 வயது) என்பவரே காணாமற்போனவர் ஆவார்.

இவர் காணாமற்போனபோது இவரிடம் ஒரு கோடரியும், தேன் சேகரிக்கும் பானை ஒன்றும் இருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் வாகரைப் பிரதேசத்தில் தேன் எடுக்கச் சென்றவர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். சிலர் காணாமற் போய் இருந்தனர்.

இச்சம்பவம் இப்பகுதி மக்களை பீதி கொள்ளச் செய்துள்ளது.

# புலிகள் தாக்க படையினர் பொதுமக்கள் மீது ஷெல் அடி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களையடுத்து பொதுமக்களை படையினர் பழிவாங்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த வகையில் கிண்ணையடியில் படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர்; ஏழுபேர் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் இருந்து வடக்காக சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் கிண்ணையடிக் கிராமம் உள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும், வேறுபடுத்தும் வகையில் வாவி ஊடறுத்துச் செல்கிறது.

விவசாயத் தொழிலுக்குச் செல்லும் மக்கள் இந்த வாவி ஊடாகவே போக்குவரத்துச் செய்கின்றனர்.

கடந்த மாத இறுதியில் கிண்ணையடி துறையடி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து கிண்ணையடித்துறையூடான போக்குவரத்துக்குப் படையினர் தடை விதித்திருந்தனர்.

இதன் காரணமாகத் துறைக்கு அப்பால் உள்ள முருக்கன்தீவு சிவசக்தி வித்தியாலயத்துக்குச் செல்லவேண்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கிராம சேவையாளர் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அதே சமயம் கிண்ணையடி சரஸ்வதி மகாவித்தியாலயத்துக்குக் கல்வி கற்க வருகின்ற முருக்கன்தீவு மாணவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

இது தொடர்பாகக் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்குக் கிண்ணையடிப் பிள்ளையார் கோவில் நிர்வாகசபை சுட்டிக்காட்டியிருந்ததைத் தொடர்ந்து தடை தளர்த்தப்பட்டுள்ளது.

எனினும் இக்கிராம மக்கள் படையினரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றனர்.

அதே சமயம் வாழைச்சேனைப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகக் கூறும் படை தரப்பு பொதுமக்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்துயுள்ளது.

கிண்ணையடியில் மூவரைப் பலி கொண்ட ஷெல் தாக்குதலும் இத்தகையதே என்று கூறப்படுகிறது.

காலையில் எழுந்த கிராம மக்கள் தங்கள் அன்றாட வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்த சமயம் பேரிரைச்சலுடன் வந்த ஷெல்கள் கிண்ணையடிக் கிராமத்தில் வீழ்ந்து பெரும் ஓசையுடன் வெடித்தன.

முதலாவது ஷெல் வாவிக்கு அப்பால் வீழ்ந்தபோது ''ஆமிக்காரன்கள் ஷெல் அடிக்கத் தொடங்கி விட்டாங்கள்'' என்று கூறிக் கொண்டு பொதுமக்கள் பாதுகாப்புத் தேட முன்னரே மற்றொரு ஷெல் ஒரு வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்தது.

இந்தச் சம்வத்தில் குழந்தைவேல் விஸ்வலிங்கம் (வயது 60), தினேஷ் (வயது 10), கௌரிகாந் (வயது 4) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

முருகுப்பிள்ளை கேமாலினி (வயது 77), அழகையா சரிகினி (வயது 16), முருகுப் பிள்ளை சத்தியேஸ்வரி (வயது 17), எஸ். கிருத்திகன் (வயது 4), நாகப் பன் ஜீவா (வயது 4), பாலரெட்ணம் பாரதி தாஸன் (வயது 23), அருணகிரி சுதாகரன் (வயது 10) ஆகியோர் காயம் அடைந்தனர்.

இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கண்டித்துள்ளனர்.

புலிகளின் முகாம் நோக்கி ஷெல் வீச்சு நடத்துகிறோம் எனக் கூறும் படையினர் தமிழ் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடத்தித் தமது கோபத்தைத் தணித்துக் கொள்கின்றார்கள் என்பது பொது மக்களின் குற்றச்சாட்டு.

எனவே படையினர் தமிழ் பேசும் மக் கள் மீது நடத்தும் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும் — இப்படியான படையினர் மீது பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் — பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கும்புறுமூலை இராணுவ முகாமில் இருந்தே ஷெல் தாக்குதல் நடத்தப் பட்டதாக ஜோசப் எம்.பி. தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எது எப்படியோ படையினரின் பழிவாங்கல் நடவடிக்கை காரணமாக மூன்று அப்பாவி மக்களின் உயிர்கள்காவு கொள்ளப்பட்டுள்ளன.

ஏழு பேர் காயம் அடைந்துள்ளனர்.

இவ்வாறான கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடருமானால் அது அப்பாவி மக்களின் உயிரைக் குடிக்கும் ஒரு நடவடிக்கையாக அமையும் என கிராம மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

போர் நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் கிராம மக்களுக்கு இந்த இரத்தம் தோய்ந்த நினைவு மனங்களிலே நீங்காத பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# பித்தன் பதில்கள்

எம் ரஜீவன், *கல்லாறு.*

கே : இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கின் தந்தையும் முன்னாள் இந்திய டெஸ்ட் அணி வீரரா?

ப : *ஆம், யுவராஜின் தந்தை யோக்ராஜ் சிங் இந்தியாவின் முன்னாள் வேக பந்து வீச்சாளர். 1980—81 இல் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளார்.*

ஜே.யூட், *கொழும்பு—10.*

கே : பித்தனே மர்மதேசம் தொலைக்காட்சித் தொடரில் ரீனா பாத்திரம் ஏற்று நடித்த நடிகை தேவதர்ஷினியின் விலாசத்தைத் தயவு செய்து கூறமுடியுமா?

ப : *பி.வி.உ.சி. நகர் மெயின் ரோட், அண்ணாநகர் (கி), சென்னை —102.*

கே : குடும்ப வாழ்வுக்கும் கழுதைச் சவாரிக்கும் தொடர்பு உண்டா!

ப : *இரண்டிலுமே உதை கிடைக்குமே!*



மஞ்சுளா, *தெமட்டகொடை.*

கே : பிறந்த நாளுக்கு 'நான்' செய்த கேக்கை நாய் தின்று விட்டதே பித்தா?

ப : *நல்லவேளை வாழ்த்த வருபவர்கள் தப்பிப் பிழைத்தார்கள்.*

எம். எல். பாருக், *வெள்ளவத்தை*

கே : கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து விமானச்சேவை பெரும் நெருக்கடியில் உள்ளதாமே?

ப : *விமானச் சேவையை மட்டுமா? நாடு முழுவதையுமே நெருக்கடிக்குள் தள்ளி விட்டதே இந்தத் தாக்குதல்.*

ரா.சேகர், *கம்பளை.*

கே : பித்தனே ரூ.60 கோடி விழுங்க இருக்கும் சர்வஜன வாக்கெடுப்பால் யாருக்கு நன்மை அதிகம்? பொது மக்களுக்கா, அரசியல்வாதிகளுக்கா?



ப : *பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைத் தக்க வைக்க ஜனாதிபதி கையாண்ட தந்திரமே சர்வஜன வாக்கெடுப்பு. இதில் நன்மை தீமை யாருக்கு என்பது இனித்தான் தெரியும்.*

ஆர். தர்ஷன், *தெகிவளை.*

கே : ஆசிய வலைப்பந்தாட்டத்தில் சாம்பியனான இலங்கை வீராங்கனைகளுக்குக் கிடைத்த பரிசுத் தொகை எவ்வளவு?

ப: *போட்டி ஏற்பாட்டாளர்களால் பணப்பரிசு எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் இலங்கை வீராங்கனைகளுக்கு தலா 50,000 ரூபா வழங்கவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.*

க. மீரா, *மன்னார்.*

கே : மனதை என்றும் இளமையாக வைத்திருக்க முடியுமா பித்தனே?

ப : *காதல், பெண், உடல் ஆசை என்பவை இளமையோடு மட்டுமே தொடர்புடயவை என்ற நினைவைத் தூக்கி எறிந்து விடுங்கள்...!*

எம். மஞ்சுளா, *கோப்பாய்.*

கே : இலக்கணத்தை மீறிய இலக்கணம் ஒன்று சொல்லுங்களேன்...?

ப : *அழகாய்த் தெரியும் 'தெற்றுப் பல்' சிரிப்பு.*

ப.மயூரன், *தெஹிவளை*

கே : தற்போதைய நெருக்கடியில் தமிழ்க் கட்சிகள் சில ஐ.தே.கவுடன் சேர்ந்து நிற்கின்றனவே. அவற்றின் நிலைப் பாடு சரியானதா?

ப : *இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பார்களே! பாவம் தமிழ்க் கட்சிகள்.*

சுதர்ஷினி, *பாணந்துறை.*

கே : மரணம் எப்படி இருக்க வேண்டும்?

ப : *இலங்கையில் போல் மலிந்து விடாமல்இருக்க வேண்டும்.*

இ.ராஜேந்திரன், *வத்தளை.*

கே : சட்டெனக் கோபம் வரும் பெண்களை என்ன செய்யலாம்?

ப : *பட்டென அறைந்தால் கோபம் பறந்து விடும்.*



கே. அக்கீத், *செட்டிக்குளம்.*

கே : காதலிப்போருக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டுமா?

ப : *உதையைத் தாங்கும் உடம்பும் தேவை.*

என். பிரசாந்தன், *நாரஹேன்பிட்டி.*

கே : காதலன் காதலியின் மடியில் படுப்பது ஏன்?

ப : *இப்பவே சுமக்க வைத்து முதற் கட்டப் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்குத்தான்.*



ஏ.பார்த்தீபன், *மருதானை.*

கே : பித்தா, அக்காலப் பெண்களுக்கும், இக்காலப் பெண்களுக்கும் என்ன வித்தியாசம்?

ப : *அக்காலப் பெண்கள் கணவன் பின் சென்றனர். இக்காலப் பெண்கள் கணவனை பின்னால் வரச்செய்கின்றனர்.*

கண்ணன், *மருதானை.*

கே : பித்தா! என் காதலி விரைவில் வேறொருவனைத் திருமணம் செய்யப் போகிறாள். எனக்கு ஆறுதல் கூறுவீர்களா?

ப : *அப்படிச் செய்பவள் காதலியாக இருக்கமாட்டாள். அவள் காதகி. ''போனால் போகட்டும் போடா!'' என்று இரும்.*

வி.மாலதி, *நல்லூர்.*

கே : என்னைச் சுற்றி இரண்டுபேர் எந்த நேரமும் செக்கு மாடுகள் போல் சுற்றுகிறார்களே என்ன செய்ய?

ப : *சிலவேளை 'செக்ஸ்' மாடுகளாகவும் இருக்கும் கவனம்.*

# அக்ரம், மொயின் நீக்கம்



அக்ரம்



மொயின்கான்

பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இத்தொடருக்கான பயிற்சி முகாமுக்குரிய 27 பாகிஸ்தான் வீரர்களின் பெயர் விவரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.

இதில் முன்னாள் அணித் தலைவர்களான வஸீம் அக்ரம், மொயின்கான் ஆகியோர் இடம் பெறவில்லை.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக இவ்விருவரும் அணியில் சேர்க்கப்படவில்லை. நான்கு தேர்வாளர்களும் ஏகமனதாக இத்தீர்மானத்தை எடுத்தனர். இவ்வாறு தேர்வுக்குழுவின் தலைவர் வஸீம் பாரி கூறியுள்ளார்.

சொந்த மண்ணில் நடைபெறும் போட்டிகள் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கு மிகவும் உகந்ததாகும் எனவும் அவர் கூறியுள்ளார். பாகிஸ்தான் அணி தேர்வாளர்களின் இந்தத் தீர்மானத்தினால் வஸீம் அக்ரமின் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வஸீம் அக்ரம் 102 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 414 விக்கட்டுகளையும் 319 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி 440 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

ஆனால் அண்மைக்காலமாக அவரது பந்து வீச்சு எதிர்பார்த்தளவு சோபிக்கவில்லை.

கடந்த வருடம் பாகிஸ்தானில் நடைபெற்ற இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் 2 விக்கெட்டுகளை மாத்திரமே அவர் கைப்பற்றியிருந்தார். அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 5 விக்கெட்டுகளையே அவர் வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிரடி நாயகர்கள்



ஸேவாக்

கொகாகோலா கிண்ணக் கிரிக்கெட் தொடரில் 02.08.2001 அன்று நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர் விரேந்தர் ஸேவாக் 69 பந்துவீச்சுகளில் சதம் குவித்தார். ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆகக் குறைந்த பந்துவீச்சுகளில் சதம் குவித்தோரில் ஸேவாக் 7 ஆவது இடம் பெறுகிறார். இவ்வாறு குறைந்த பந்துவீச்சுகளில் சதம் குவித்தோரின் முதல் 7 வீரர்களினதும் விவரம் வருமாறு:

(முறையே சதம் பெறுவதற்கு எதிர்கொண்ட பந்துவீச்சுகள், வீரர், போட்டியில் மொத்தமாகப் பெற்ற ஓட்டங்கள், அணி, எதிரணி, இடம், திகதி)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37 | சஹிட் அஃப்ரிடி | 102 | பாகிஸ்தான் | - இலங்கை | - நைரோபி | 04.10.1996 |
| 45 | பிரையன் லாரா | 117 | மே.இ.தீவுகள் | - பங்களாதேஷ் | - டாக்கா | 09.10.1999 |
| 48 | சனத் ஜெயசூரிய | 134 | இலங்கை | - பாகிஸ்தான் | - சிங்கப்பூர் | 02.04.1996 |
| 62 | எம். அசாருதீன் | 108 | இந்தியா | - நியூஸிலாந்து | - பரோடா | 17.12.1988 |
| 67 | பாசிட் அலி | 127* | பாகிஸ்தான் | - மே.இ.தீவுகள் | - சாஜா | 05.11.1993 |
| 68 | இஜாஸ் அஹமட் | 139* | பாகிஸ்தான் | - இந்தியா | - லாகூர் | 02.10.1997 |
| 69 | விரேந்தர் ஸேவாக் | 100 | இந்தியா | - நியூஸிலாந்து | - கொழும்பு | 02.08.2001 |

# மேற்கிந்திய அணிக்கு டெஸ்ட் தொடர் வெற்றி

ஸிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1-0 விகிதத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கிளைவ் லொயிட் கிண்ணத்திற்கான இத்தொடரின் முதலாவது போட்டி புலவாயோவில் நடைபெற்றது. இதில் மேற்கிந்திய அணி ஒரு இன்னிங்ஸ் 176 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டி ஹராரே நகரில் ஜூலை 27-31 வரை நடை பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி 57.1 ஓவர்களில் 131 ஓட்டங்களில் சகல விக்கட்டுகளையும் இழந்தது.

ஆகக் கூடுதலாக கை விட்டல் 43 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எவரும் இருபதுக்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெறவில்லை. பந்து வீச்சில் மெக்கெரல் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும் ஸ்டுவார்ட் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 347 ஓட்டங்களைப் பெற்றது. ஆகக் கூடுதலாக சர்வான் 86 ஓட்டங்களைப் பெற்றார். சந்தர்போல் 74 ஓட்டங்களைப் பெற்றார்.

ஸிம்பாப்வே அணி சார்பில் போல் ஸ்ரேங் 83 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் ஸிம்பாப்வே அணி 9விக்கட் இழப்பிற்கு 563 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

அறிமுக வீரரான மஸகட்ஸா 119 ஓட்டங்களைப் பெற்றார். வைஸார்ட் 93 ஓட்டங்களையும், பிலிங்னட் 92 ஓட்டங்களையும், ஹீத் ஸ்ரீக் 79 ஓட்டங்களையும் பெற்றனர். ஸ்டுவர்ட், மெக்ரல் இருவரும் தலா 3 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

வெற்றிபெறுவதற்கு 348 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் மேற்கிந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.

போட்டியில் வெற்றிபெற்று தொடரைச் சமப்படுத்துவதற்கு ஸிம்பாப்வே காத்திருந்தது. ஆனால் எதிர்பாராதவிதமாக மழை குறுக்கீடு செய்தது. இதனால் மேற்கிந்திய அணி 1 விக்கட் இழப்பிற்கு 91 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டி முடிவுக்கு வந்தது.

இதனால் தொடரில் 1-0 விகிதத்தில் மேற்கிந்திய அணிக்கு வெற்றி கிடைத்தது. 5 வருடங்களின் பின்னர் மேற்கிந்திய அணி வெளிநாடொன்றில் பெற்ற டெஸ்ட் தொடர் வெற்றி இதுவாகும்.

அண்மையில் ஸிம்பாப்வேயில் நடைபெற்ற முக்கோண ஒருநாள் தொடரிலும் மேற்கிந்திய அணியே சாம்பியனாகியது.

நட்சத்திர துடுப்பாட்ட வீரரான பிரையன் லாரா பங்குபற்றாத நிலையில் மேற்கிந்திய அணி இவ்வெற்றிகளைப் பெற்றுள்ளது.

தொடர்ச்சியாகத் தோல்விகளைத் தழுவி வந்த மேற்கிந்திய அணி தற்போது மீண்டும் தலைநிமிரத் தொடங்கியுள்ளது எனலாம்.

இத்தொடரில் தோல்வியுற்றாலும் ஸிம்பாப்வே அணி இறுதி டெஸ்ட்டின் இரண்டாவது இன்னிங்ஸில் அவ்வணியின் அதிகூடிய இன்னிங்ஸ் ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனால் இருமாதங்களில் ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்காவுடனான தொடரை ஸிம்பாப்வே நம்பிக்கையுடன் எதிர்கொள்ளக்கூடியதாயிருக்கும்.

## சாதனை படைத்த பாடசாலை மாணவன்



மஸகட்ஸா

ஸிம்பாப்வே வீரர் ஹமில்டன் மஸகட்ஸாவுக்கும் இப்போட்டி மறக்க முடியாத தொடராகும். இரண்டாவது போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 119 ஓட்டங்களைப் பெற்றார் அவர். அறிமுகமான டெஸ்ட் போட்டியில் சதம் குவித்தவர்களில் மிகவும் இளம் வீரர் என்ற பெருமையை மஸகட்ஸா பெற்றுள்ளார். சதமடித்த போது அவரது வயது 17 வருடங்களும் 354 நாட்களுமாகும்.

இதற்கு முன் சலிம் மலிக் இச் சாதனைக்குரியவராக இருந்தார். 1982 இல் தனது 18 வயதில் இலங்கைக்கு எதிரான போட்டியில் அறிமுகமான மலிக் சதம் குவித்திருந்தார்.

பாடசாலை மாணவனான மஸகட்ஸா தனது சதத்தை ரியோன் கிங்கின் பந்துவீச்சை பவுண்டரிக்கு அடித்ததன் மூலம் பூர்த்தி செய்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதையும் மஸகட்ஸா தட்டிக் கொண்டார். தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதை மேற்கிந்திய வீரர் கிறிஸ் கைல் பெற்றார்.

டெஸ்ட் போட்டிகளில் ஆகக்குறைந்த வயதில் சதம் அடித்தவர் என்ற பெருமைக்குரியவராக முன்னாள் பாகிஸ்தான் வீரர் முஸ்தாக் முஹமட் விளங்குகிறார். 1960-61இல் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அவர் சதம் பெற்றார். அப்போது அவருக்கு வயது 17 வருடங்கள் 82 நாட்கள் ஆகும்.

# வாழ்க்கைத் திறன் பயிற்சியில் கிப்ஸ்



கிப்ஸ்

"தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஹேர்ஸ்செலி கிப்ஸ் விசேட வாழ்க்கைத் திறன் வகுப்பொன்றுக்கு அனுப்பப்படவுள்ளார்.

கேப்டவுனிலுள்ள விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் ஒன்றில் 6 வாரங்கள் அவர் பயிற்சி பெறுவார்."

இவ்வாறு தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட் சபை (யு.சி.பீ) அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான கிப்ஸ், ஹன்ஸி குரொஞ்ஞேவுடன் இணைந்து ஆட்ட நிர்ணய சதிக்கு உடன்பட்டார். இதனால் அவருக்கு 6 மாத காலத் தடை விதிக்கப்பட்டது.

தடை நீங்கிய பின்னர் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுலா மேற்கொண்டபோது மரிஜுவானா எனும் போதைப்பொருளைப் பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு கிப்ஸ் அடிக்கடி தவறுகளைச் செய்வதால் அவர் திருந்துவதற்காகவே விசேட பயிற்சி முகாமுக்கு அனுப்புவதற்கு யு.சி.பீயின் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி வாரந்தோறும் 6 மணித்தியாலம் இம்முகாமில் கிப்ஸ் கலந்துகொள்வார்.

மனஉளைச்சலைக் கட்டுப்படுத்துதல், சுயமுகாமைத்துவம், ஊடக பயிற்சி, தலைமைத்துவம், மற்றும் வேலை அனுபவம் என்பனவற்றில் கிப்ஸுக்கு பயிற்சி வழங்கப்படும்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ரகர் அணித்தலைவர் மோர்ன் டு பிளெஸிஸ் கிப்ஸை மேற்பார்வை செய்யவுள்ளார்.

கிப்ஸின் முன்னேற்றம் பற்றி அடிக்கடி எழுத்து மூல அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு யு.சி.பி. பிளெஸிஸ்ஸிடம் கேட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்!

- ஆர். சேதுராமன்

## மைக் டைசன் மீண்டும் பாலியல் குற்றச் சாட்டில்!



முன்னாள் அதிபார குத்துச்சண்டை சாம்பியனான மைக் டைசன் மீண்டும் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளார்.

கலிபோர்னியாவிலுள்ள பிக்பியர் எனும் இடத்தில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து ஜிம் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார் டைசன். இங்கு வைத்து கடந்த ஜூலை 16ஆம் திகதி டைசன் தன்னைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகப் பெண்ணொருவர் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

பொலிஸார் இதுதொடர்பாக விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். டைசன் இதுவரை கைது செய்யப்படவில்லை. புகார் தொடர்பான சாட்சியங் களைத் தேடி வருகின்றனர் பொலிஸார்.

இதேவேளை மேற்படி குற்றச்சாட்டை மைக் டைசன் மறுத்துள்ளார். நான் நிரபராதி என்பதை காலம் நிரூபிக்கும். இவ்வாறு டைசன் கூறுகிறார்.

ஏற்கெனவே பாலியல் வல்லுறவு தொடர்பாக 3 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர் டைசன். பின்னர் சாரதி ஒருவரைத் தாக்கியமைக்காகவும் அவருக்கு சிறைத் தண்டனை விதிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செப்டம்பர் 8ம் ஆம் திகதி டென்மார்க்கிலுள்ள கொப்பன்ஹேகன் நகரில் குத்துச்சண்டை போட்டியொன்றில் பங்குபற்றுவதற்கு டைசன் தயாராகி வருகிறார். இப்போட்டியில் டென்மார்க்கைச் சேர்ந்த பிரையன் நெல்சன் டைசனுடன் மோதவுள்ளார்.

# எல்லே விளையாட்டுக்கு நவீன மட்டை அறிமுகம்

இலங்கையின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான 'எல்லே' விளையாட்டுக்கு நவீன மட்டை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான எல்லே போட்டிகள் அண்மையில் இரத்தினபுரி சீவலி மைதானத்தில் நடைபெற்றன. இப்போட்டிகளின் போதே இந்த நவீன மட்டை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இறுதிப்போட்டியில் பிரதம அதிதியாக மீன்பிடி, நீரியல் வள அமைச்சரும் "எல்லே" சம்மேளனத்தின் தலைவருமான அமைச்சர் ராஜபக்ஷ கலந்து கொண்டார். அவரே சம்பிரதாய பூர்வமாக இந்த நவீன மட்டையையும் அறிமுகம் செய்து வைத்தார்.

"எல்லே விளையாட்டை சர்வதேச ரீதியில் பிரபல்யமடையச் செய்யமுயற்சிகளை மேற் கொண்டு வருகிறேன்.

இந்தியா, மாலைதீவு, அபுதாபி போன்ற நாடுகள் இவ்விளையாட்டை தமது நாடுகளில் பிரபல்யமடையச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. எல்லே இன்றும் கிராமங்களிலேயே விளையாடப்படுகின்றன. எல்லோரும் "கிரிக்கெட் பற்றியே இன்று பேசுகின்றனர். எல்லே விளையாட்டுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்காமையினால் இவ்விளையாட்டு வளர்ச்சியடையவில்லை. இதனை சர்வதேச தரத்திற்கு உயர்த்தினால் இவ்விளையாட்டும் பிரபல்யமடைய வாய்ப்புள்ளது.

எல்லே விளையாட்டிற்கு உபயோகிக்கப்படும் உபகரணங்கள் இன்னும் பழைய நிலையிலேயே உள்ளன. எல்லே விளையாட்டுக்கான 'பொல்லை'யும் பந்தையும் கொண்டுசெல்லக்கூட இளைஞர்கள் வெட்கப்படுகின்றனர். இதனாலேயே இன்று புதிய மட்டை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இவ்வாறு அமைச்சர் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இச்சுற்றுப்போட்டியில் 15 பாடசாலைகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற மாரப்பனை மகா வித்தியாலய அணிக்கு அமைச்சர் ராஜபக்ஷ பரிசில்களை வழங்கினார். சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் அசோக ஜயவர்த்தனவும் இந் நிகழ்வில் கலந்துகொண்டார்.

- அருள்



மாரப்பனை மகா வித்தியாலய அணி வீரர்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிமுகம் செய்யப்படுவதை படத்தில் காணலாம்.




அறிமுகம் செய்யப்பட்ட புதிய எல்லே மட்டையுடன் அமைச்சர் ராஜபக்ஷ

# மர்மப் பெண் 6

கதை: மாஸ்டர் சிவலிங்கம் சித்திரம்: தீபன்




றொபின் காளான்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு இபபோது சில காளான்கள் தேவை. தேடியலைந்து ஒரு காளானைக் கண்டுவிட்டான். ஆனால் அது இருக்குமிடத்துக்குச் செல்வதற்குத்தான் வழி தெரியவில்லை. நீங்கள் வழி காட்டி விடுங்களேன்.



## நாணயச்செய்திகள்

1. நைலோன் துணியில் நாணயத்தை அச்சடித்த நாடு ஜேர்மனி.
2. பிளாஸ்டிக்கில் நாணயத்தை அச்சடித்த நாடு அவுஸ்திரேலியா.
3. ஆசியாவின் பொப் தீவுகளில் கற்களை நாணயமாகப் பயன்படுத்துகின்றனர்.
4. நியூக்கிளியா பழங்குடி மக்கள் நாய், திமிங்கிலம் போன்றவற்றின் பற்களைப் பயன்படுத்தினர்.
5. லாவோஸ் மற்றும் பரகுவே நாட்டிலும் உலோக நாணயங்கள் புழக்கத்தில் இல்லை. எல்லாம் தாள் நாணயம் தானாம்.
6. சுவீடன், இஸ்ரேல் ஆகிய நாடுகளில் பார்வை இழந்தவரும் தொட்டுத் தடவி அறிய பிரெய்லி முறையில் தாள் நாணயம் அச்சிடப்பட்டதாம்.

T. பிரநீதன்,
திருகோணமலை.

## நான்

எனது பெயர் ஜீன். எனது தந்தையின் பெயர் யோசேப். தாயின் பெயர் விமலாவதி. அண்ணாமார் டிலான், ஜெறான், நிஷான் ஆகியோராவர். எனது தங்கை டீன். எனது நண்பிகள் றதனா, மதுரா, லேகா, தீப்தி ஆகியோர். நான் வசாவிளான் ம/ம/வி இல் தரம் 11 இல் கல்வி கற்கின்றேன்.

யோ. மேரிஜீன், உரும்பிராய்

## அன்பு

அன்பு ஒரு தெய்வீக சக்தி ஆகும். நாம் எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும். எமது மனதிலே அன்பு இருப்பின் எண்ணம் தூய்மையானதாக இருக்கும். பொறுமை உடையவரே தெய்வீக அன்பு உள்ளவராகக் கருதப்படுவார். பொறுமையாக இருப்பதற்கு மனதிலே அன்பு வேண்டும்.

ம. விதுர்ஷா,தரம் – 3B
யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை




## வியாழன்



சூரிய மண்டலத்திலுள்ள கோள்களிலேயே பெரியது. கோள்களின் வரிசையிலே 5ஆவது இடத்தில் உள்ளது. பூமியிலிருந்து 629 மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் ஜுபிற்றர் என்று அழைக்கப்படுகின்றது. ரோமானியர் ஜுபிற்றரை 'தேவதைகளின் அரசன்' என்று அழைத்தனர். இது தன்னைத்தானே சுற்றுவதற்கு 9 மணித்தியாலங்கள் 55 நிமிடங்களை எடுக்கின்றது. சூரியனைச் சுற்றி வருவதற்கு 12 புவி வருடங்கள் எடுக்கின்றது.



இக்கோளின் மேற்பரப்பு அமோனியா மெதேன் வாயுக்களினாலான திரவப்படை முகில்களினால் சூழப்பட்டுள்ளது. ஐதரசன், ஈலியம் போன்ற வாயுக்களைக் கொண்டது.

## அறிவியல் விந்தைகள்

## விடுகதைகள்

1. அம்மா வாங்கி வந்த பசுவுக்கு வயிற்றிலே கொம்பு அது என்ன?
2. சின்ன மச்சான் தலை குனிய வச்சான் அது என்ன?
3. அம்மா வைத்த தட்டிலே நீர் விட்டால் நிற்காது அது என்ன?
4. அடிக்காமலே அழுவாள் அழகு ராசா பெண்டாட்டி அது என்ன?
5. உச்சிக் கொப்பிலே உலக்கை தூங்குது அது என்ன?

விடைகள்

1. கேத்தல் 2. முள் 3. தாமரை இலை 4. வெங்காயம் 5. முருங்கைக்காய்

இ. விஜயதர்சினி
யா/விக்னேஸ்வராக் கல்லூரி,

## சிந்தனைக்கு

நீ உன் மனதிற்கு உண்மையானவனாக நட. மற்றவர்கள் புறம் பேசுவதைக்கேட்டு வருந்தாதே. அவர்கள் எப்போதும் எதையாவது கூறிக்கொண்டே தான் இருப்பார்கள்.

## சிறுவர் கைவண்ணம்



சோமசேகரன் மதுகரன்
தரம்—7
கொக்குவில் இந்துக்கல்லூரி.

கிரிஷாந்த்
தரம்—4
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை
வெள்ளவத்தை.






இணையத்தில் செய்தி வாசிக்கும் பொம்மைகள் இப்போது பிரபலமாகி வருகின்றன. இவற்றுக்கு அனோவா, லில்லி என்று பெயரிட்டுள்ளனர்.

இதில் லில்லி இணையத்தில் மட்டுமல்லாது தொலைக் காட்சியிலும் தோன்றுகிறாள். ரசிகர்களுடன் உரையாடி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிறாள்.




இயந்திர மனிதன் எனப்படும் ரோபோக்களின் பாவனை அதிகரித்து வருகிறது. ரிக்ஷா ஓட்டும் இயந்திர மனிதன் ஒன்றை டைஹட்சூ என்ற மோட்டார் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த இயந்திர மனிதனின் தலை மற்றும் மார்பில் மோட்டார் இணைக்கப்பட்டுள்ளது. ரிமோட் என்ற கையியக்கியின் மூலம் இந்த ரிக்ஷாக்காரனை இயக்க முடியும். பயணிகளை ஏற்றிச் செல்லத்தக்கவாறு இதனுடன் ரிக்ஷா பொருத்தப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்திய போது சிறுவர்கள் இந்த ரோபோ ரிக்ஷாவில் பயணிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டினார்களாம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

* பூமியின் நிலப்பகுதியில் எங்கெங்கு பயிர்கள் நன்றாக விளையும் என்பதை விண்வெளியில் இருந்தபடியே ஆராயும் செயற்கைக் கோளினை 'புவிவள ஆய்வு செயற்கைக்கோள்' என்று அழைக்கின்றார்கள்.
* சிறுவர்கள் விரும்பிச் சாப்பிடும் சொக்லேட்டினைச் செய்வதற்கு கொக்கோவே மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. உலகில் டென்மார்க் நாட்டு மக்களே அதிகளவு சொக்லேட்டுக்களைச் சாப்பிடுகிறார்களாம். இவற்றை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் சுவிட்சர்லாந்து நாட்டு மக்களே.
* உலகில் 80 மில்லியன் பூச்சி இனங்கள் இருக்கின்றன. ஒரு சதுர மீட்டர் நிலப்பரப்பில் 250 பூச்சி இனங்களும் ஒரு ஹெக்டேயர் நிலத்தில் 340 வகை பூச்சி இனங்களும் இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.
* காபோரவைதரேற்று என்ற வாயுவினால் மனிதருக்கு ஏற்படும் பாதிப்பை அளப்பதற்கு 'மைக்ரோகோ' என்ற கருவி பயன்படுகிறது. இந்தக் கருவியை இங்கிலாந்திலுள்ள மைக்ரோ மெடிகல் என்ற மருத்துவ நிறுவனம் தயாரித்து உள்ளது.



## எனக்குத் தெரிந்த பாரதி

இவர் சிறந்த கவிஞர். இவர் தன் நாட்டின் மீது பற்று உடையவராக விளங்கினார். இவரின் காலத்தில் பிரித்தானியர் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தனர். மக்கள் அரசியலில் மட்டுமல்லாது சிந்தனையாலும் அடிமைப்பட்டிருந்த காலம் அது. இவர் தமிழ் நாட்டிலுள்ள எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் சின்னத்தம்பி ஐயர். இவரின் தாயார் பெயர் இலக்குமி அம்மாள். இளமையில் இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை கசடறக் கற்றார். எப்போதும் தலைப்பாகை அணிந்திருப்பார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன் ஆகும். இவர் எப்போதும் கம்பீரமாகவே நடப்பார். இந்திய மக்களில் ஒரு பகுதியினர் பிரித்தானியருக்கு அடிமைகளாகவும் வேறு சிலர் மனோதைரியம் அற்றவர்களாகவும் வாழ்ந்தனர். இத்தகைய இந்திய மக்களை விழிப்படையச் செய்தார். வாய்ச் சொற்களால் வீரம் பேசுவதில் பயனில்லை. செயல் வீரர்களாய் வாழ்தலே அவசியம் என்பதை அவரது பாடல்கள் வற்புறுத்துகின்றன.

இவர் பாப்பாப்பாட்டு, நடிப்புச் சுதேசிகள், பாரத மக்களின் தற்கால நிலைமை, தமிழ்த்தாய் வாழ்த்து முதலிய பாடல்களைப் பாடினார். இவர் மக்களிடையே சாதி, மத பேதமின்றிப் பழகினார். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்பதற்கிணங்க வாழ்ந்தார். –1921ஆம் ஆண்டு மதங்கொண்ட யானையொன்றின் தாக்குதலினால் மரணமடைந்தாலும் இவரின் நாமமும், புகழும் என்றும் அழியாதவையாகும். 'வாழ்க இவர் நாமம், வளர்க இவர் புகழ்.'

ச. சோசினி,
தரம் –08,கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி.

# மலையகத்தின் விடிவு – அழிவு தலைவர்களின் கைகளிலே!

## சிந்தித்துச் செயற்பட்டால் விமோசனம் நிச்சயம்!

மலையகத் தலைவர்கள் இன்றைய சூழ் நிலையிலாவது மனம் திருந்த வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் மனம் திருந்தாதவர்கள் என்றுமே மனம் திருந்தப் போவதில்லை.

இந்நிலை தொடர்ந்தால் இவர்களை நம்பி இருக்கும் பல லட்சம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கு விடிவே ஏற்படாது. அரசியல் வரலாற்றில் மீண்டும் இவர்கள் பின் தள்ளப்பட்டு விடுவார்கள்.

டி.எஸ்.சேனநாயக்காவின் ஆட்சியில் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் இந்தியர்களின் பிரதிநிதித்துவம் முற்றாக ஒழிக்கப்பட்டது.

அன்றைய தலைவர்களின் உறுதியின்மையும் பிரபுத்துவ ஆசையும், ஒற்றுமை இன்மையுமே மலையக மக்களுடைய போராட்டத்தை வலுவிழக்கச் செய்தன. வெறும் சத்தியாக்கிரகத்துடன் போராட்டம் பிசுபிசுத்து விட்டது. ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதும், ஒருவருக்குத் தெரியாமல் இன்னொருவர் பதவிகளைப் பெற்றுக் கொள்வதுமே மலையகத் தலைவர்களின் நோக்கமாக இருந்து வந்துள்ளது. இவர்களும் மலையத் தமிழர்களின் அடிமை சாசனத்துக்குப் பக்க பலமாக இருந்தனர்.



மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்து இன்றைய அரசியல் நெருக்கடி தொடர்பாகக் கலந்துரையாடுகின்றனர்.

ஏக பிரதிநிதிகளாக இவர்கள் பிரபுக்கள் சபையில் இருக்க விரும்பினார்களே தவிர, தம்மை நம்பி இருப்பவர்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுக்க முனையவில்லை.

ஐம்பது வருடங்களுக்குப் பின் மீண்டும் தற்போதைய அரசு மலையக மக்களின் தலையில் கைவைத்துள்ளது.

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் அரசமைப் பின்படி பத்து மலையகப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு வரமுடியும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி இந்தத் தொகை 16 பேராக அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி விகிதாசாரத் தேர்தல் முறையை ஒழிக்க முயல்கின்றார். விகிதாசாரத் தேர்தல் முறை ஒழிக்கப்பட்டால் ஜே.வி.பி உட்பட பெரும்பான்மைக் கட்சிகளுக்கும் அந்தச் சமூகத்துக்கும் பாதிப்புகள் இல்லை.

இதனால் நேரடியாகப் பாதிக்கப்படக் கூடியவர்கள் மலையகத் தமிழர்கள் தான் என்பதை இன்றைய மலையகத் தலைவர்கள் மறந்து விடக் கூடாது.

ஜனாதிபதி தன்னையும் தனது அரசாங்கத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவே நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்தார். தன்னிச்சையாகவே சர்வஜன வாக்கெடுப்பைப் பிரகடனப்படுத்தினார்.

ஜனாதிபதி தற்பொழுது சர்வஜன வாக்கெடுப்பில் தனக்கு ஆதரவளிக்கும்படி வேண்டுகிறார். சிறுபான்மை இனமக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று உறுதி அளிக்கின்றார். இவரது பேச்சையும் செயலையும் நம்ப முடியுமா? என்பது தான் இன்றுள்ள கேள்வி.

இதற்கு விடை காண்பதற்கு முன் சர்வஜன வாக்கெடுப்பைப் பிரகடனப்படுத்தும் போது ஜனாதிபதி கூறிய காரணங்களை சற்று ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். ''சிறுபான்மைக் கட்சியினரின் பணயக் கைதியாக இருக்க நான் விரும்பவில்லை. இதனால் அரசமைப்பில் மாற்றம் செய்ய வேண்டும்'' என்று மகா சங்கத்தினரிடமும், பெரும்பான்மை இனக்கட்சிகளிடமும் ஜனாதிபதி கூறினார்.

இப்பொழுது ஜனாதிபதி தனது தாளத்தை மாற்றி விட்டு ''சிறுபான்மையினருக்கு பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன்; ஆதரவு தாருங்கள்'' என்கிறார்.

இதை ஏற்க முடியுமா? இவரது உறுதி மொழிகளை நம்ப முடியுமா? என்பதை மலையகத் தலைவர்கள் சிந்தித்து அதற்கேற்ப மக்களை வழிநடத்த வேண்டும். சுய நலமிகளாக நாம் செயல்படக் கூடாது. மலையகத்தின் நாளைய விடிவை நோக்கியும், எதிர்காலச் சந்ததியினரின் முன்னேற்றத்தை மனதில் கொண்டுமே செயல்பட வேண்டும்.

**மலையகக் கண்ணோட்டம்**
இரா. புத்திரசிகாமணி

இப்பொழுது நாட்டின் பல பாகங்களிலும் மூலைமுடுக்குகளில் எல்லாம் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றியே பேச்சு. பல பகுதிகளிலும் பரந்து வாழும் இந்திய வம்சாவளியினர்களான தொழிலாளர்கள், கல்விமான்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், தொழிற் சங்க வாதிகள் எனப் பல மட்டத்தினரிடமிருந்தும் அபிப்பிராயங்கள் பெறப்பட்டன. அவர்கள் எல்லோருமே ஜனாபதியின் திட்டத்தை எதிர்த்தே விமர்சிக்கின்றனர்.

ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்ளும் தொழிற் சங்கத் தலைவர்கள் கூட, ஒரே குரலில் எதிர்க்கின்றனர். ஆனால் அரசாங்கத்தின் ஓர் அங்கமும், பிரபல தொழிற் சங்கமுமான இ.தொ.கா.வின் தலைவர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இதுவரை தனது கருத்தை வெளிப்படையாகக் கூறவில்லை. அபிப்பிராயம் கூற அவர் தயங்குவதாகவே தெரிகிறது.

மலையக அமைப்புகளும், தொழிற் சங்கங்களும் ஒன்று கூடி மலையக சமூகத்தின் நலன் கருதி ஜனாதிபதியின் திட்டங்களை எதிர்க்க வேண்டும் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானை வலியுறுத்தி வருகின்றன. நமது மக்களுக்கு விரோதமான எந்த ஒரு செயலுக்கும் நான் ஆதரவாக இருக்க மாட்டேன் என அவரும் உறுதி அளித்துள்ளார்.

எனவே மலையக சமூகம் எதிர் நோக்கி உள்ள இக்கட்டான சூழ்நிலையை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

அனைத்து வேறுபாடுகளையும் மறந்து ஒரே வர்க்கம், ஒரே சமூகம் என்ற உணர்வுடன் ஒன்றுபடவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பு என்றால் என்ன? எப்படி வாக்களிப்பது? என்பதைக் கூட சரியாகத் தெரியாத ஒரு பகுதியினரும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர். கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஒன்றரை லட்சம் வாக்குகள் மலையகத்தில் நிராகரிக்கப்பட்டன. காரணம் அவர்கள் முறையாக வழி நடத்தப்பட வில்லை. எப்படி வாக்களிப்பது என வாக்காளர்களுக்கு எவருமே தெளிவுபடுத்தவில்லை. வாக்கு வேட்டைக்குச் சென்றவர்கள் வாக்கைக் கேட்டார்களே தவிர, அதை எப்படிப் பயன் படுத்துவது என்பதைச் சொல்லிக் கொடுக்கத் தவறி விட்டனர். முன்பு விட்ட தவறை மீண்டும் விடக் கூடாது.

இக்கட்டான இந்த நிலையில் மலையகத் தலைவர்கள் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். அவர்களை நம்பி இருக் கும் மலையக மக்களை சுயலாபங்களுக்காக ஈடுவைத்து விடக் கூடாது. அவர்களின் வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டிக் கொள்ளக் கூடாது. இவையே அனைவரதும் ஆசை.

# சர்வஜன வாக்கெடுப்பில் இ.தொ.கா நிலைப்பாடு என்ன?

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சர்வஜன வாக்கெடுப்பில் தனது நிலைப்பாட்டைத் தீர்மானிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் வாக்குறுதிகளையும், உத்தரவாதங்களையும் வாரி வழங்குகின்றன. இவற்றில் எதை நம்புவது? எதை நிராகரிப்பது? என்ற தடுமாற்றமும் வழமைபோல் எல்லோரிடமும் ஏற்பட்டிருக்கிறது.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் இரண்டு. ஒன்று விகிதாசார தேர்தல் முறை நீக்கப்படுவதால் ஏற்படும் ஆபத்து. மற்றது இந்திய பாஸ்போர்ட் பெற்றும் தாயகம் திரும்ப முடியாது இருக்கும் இரண்டு லட்சம் பேருக்கும் அவர்களின் வாரிசுகளுக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இவ்விரு கோரிக்கைகளையுமே அரசுக்கும் அதேவேளை எதிர்க் கட்சியினருக்கும் சமர்ப்பித்திருந்தார்.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இ.தொ.காவின் இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளார். மலையகத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்க இடமளிக்கமாட்டோம் என்று ஆறுமுகம் தொண்டமானிடம் நேரடியாகவே உறுதியளித்துள்ளார்.

அரசாங்கத்தின் சார்பில் நேரடியாக இதுவரை எந்தவிதமான பதிலும் அளிக்கப்படவில்லை. இந்தக் கோரிக்கைகள் தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிட்டியை நியமித்து விட்டது அரசு. மலையகப் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படாத வகையில் மாற்று வழிகள் மேற்கொள்ளப்படும் என்று மட்டுமே உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அந்த மாற்றுவழி என்ன? என்பதும் அதனை எப்படி நடைமுறைப்படுத்தப்போகின்றார்கள் என்பதும் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது — இலங்கையில் வாழும் எல்லா இந்தியத் தமிழர்களையும் இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிப்பது என உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அரசின் செயலாற்றுத் திட்டத்திலும் ஓர் அம்சமாக இது சேர்க்கப்பட்டது. ஆனால் இன்றுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சர் ஆறுமுகம் ஏற்கனவே தனது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார். இப்பொழுதும் கூட அரசாங்கம் இவ்விடயத்தில் மௌனம் சாதிக்கின்றது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளுடனும், எதிரணியினரான ஜே.வி.பி மற்றும் ஐ.தே.கட்சி என்பனவற்றுடனும் பேசி அவற்றின் கருத்துகளையும் அறிந்துள்ளதாக இ.தொ.கா வட்டாரங்கள் கூறுகின்றன.

இதேவேளை மலையகத்தில் இயங்கும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் அரசியல் கட்சிப் பிரமுகர்களுடனும் ஆறுமுகம் கலந்துரையாடல்களை நடத்தி உள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா தன்னிச்சையாக நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்துவிட்டு சர்வஜன வாக்கெடுப்பை பிரகடனப்படுத்திவிட்டார்.

இதனை இ.தொ.கா சரி என்று ஏற்றுக் கொள்கிறதா என்ற கேள்விக்கு அமைச்சர் ஆறுமுகத்திடம் இருந்து நேரடியான பதில் கிடைக்கவில்லை.

நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டமையும்— சர்வஜன வாக்கெடுப்பும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. இன்னும் சில தினங்களில் அரசுடன் இ.தொ.கா பிரதிநிதிகள் மீண்டும் பேசவுள்ளனர். அதன் பின்னரே தீர்மானிப்போம் என்கிறார் ஆறுமுகம்.

எதிர்க்கட்சித் தலைவருடனும் ஏனைய கட்சிகளுடனும் நீங்களே பேசியிருக்கிறீர்கள். ஆனால் அரசாங்கத்துடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் நீங்கள் கலந்து கொள்ள வில்லை. இறுதிப் பேச்சுவார்த்தையில் நீங்கள் பங்குபற்று வீர்களா? என்று கேட்டபோது ''இ.தொ.கா பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்'' என்று மட்டும் பதில் அளித்தார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பதில்கள் அனைத்தும் ஒருவிதமான விரக்தியையும், அரசுடன் சுமுகநிலை இல்லை என்பதையும் வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றன.

எது எப்படியாயினும் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறையக்கூடாது என்பதில் ஆறுமுகம் தொண்டமான் உறுதியாக இருக்கின்றார்.

இ.தொ.கா— இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளுக்காகவும், சுபீட்சத்துக்காகவும் பாடுபடுகின்றது என்று கூறும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அந்த இலட்சியப் பணியை முன்னெடுத்தால் மலையக மக்களின் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒருவராகத் திகழ்வார் என்பது உறுதி.

# மலையகக் கல்விமான்களுக்கு தலைநகரில் நினைவு விழா



இர.சிவலிங்கம்



எஸ்.திருச் செந்தூரன்

மலையகத்தில் அறிவுப் பசியையும், அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்திய மலையகக் கல்விமான்களான அமரர் இர.சிவலிங்கத்துக்கும் அமரர் எஸ்.திருச் செந்தூரனுக்கும் அண்மையில் கொழும்பில் விழா எடுக்கப்பட்டது.

அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு கொழும்பு வாழ் மலையகத் தமிழர்களினதும், வர்த்தகப் பிரமுகர்களினதும் பேராதரவுடன் இந்த விழாவை ஏற்பாடு செய்தது.

இர.சிவலிங்கம் அமரத்துவம் அடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. அதேபோன்று என். திருச்செந்தூரன் அமரராகி ஐந்து மாதங்களாகின்றன.

இவ்விரு கல்விமான்களும் ஏக காலத்தில் மலையக விடிவுக்காகக் குரல் எழுப்பியவர்கள்.

இர.சிவலிங்கம், ஆசிரியராக, அதிபராக, எழுத்தாளராக, சட்டத்தரணியாகத் தொழிலாற்றியவர். ஸ்ரீமாவின் அரசில் கல்வி அமைச்சில் முதன் முதலாக மலையகத் தமிழ்ப் பாடசாலைகளின் நலன்களைக் கண்காணிக்கும் மேலதிக பணிப்பாளராகப் பணிபுரிந்தவர்.

அமரர் எஸ்.திருச்செந்தூரன் மலையகத்தின் அறிவுப் பசிக்கு ஆகாரம் படைத்தவர். ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய இவர் மலையகத்தில் ஒரு தலைசிறந்த சமூக சேவையாளராக விளங்கினார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் மேலதிகப் பணிப்பாளர் எம்.வாமதேவன், விளையாட்டு, சுற்றுலாத்துறைகள் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரதாப் இராமானுஜம், பேராசிரியர் சந்திரசேகரம், தேசிய கல்வி நிறுவன தமிழ்த் துறை பணிப்பாளர் தை.தனராஜ், சாரல் நாடன் தெளிவத்தை ஜோசப் உட்பட பல மலையக எழுத்தாளர்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

இறுதியாக சிவலிங்கம் ஞாபகார்த்தக் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு, தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ்துறை பணிப்பாளர் தை.தனராஜ் தலைமையில் நடைபெற்றது.

# சர்வஜன வாக்கெடுப்பு அரசின் கபட நாடகம்

## நீண்ட நாட்களுக்கு அது நீடிக்காது

சர்வஜன வாக்கெடுப்பு என்ற கபட நாடகம் நீண்ட நாட்களுக்கு நீடிக்காது. அரச தரப்பினர் வெகு விரை வில் எதிர்க்கட்சி யினருடன் ஓர் இணக்கத்துக்கு வந்தே ஆக வேண்டும். அதன் பின்பு விடுத லைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.


ரவூப் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

ரவூப் ஹக்கீம் சமீபத்தில் வவுனியா சென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்துக்கு முன்னர் அவர் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளிக் கையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

வவுனியா மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.கே.ஆரிப் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

கடந்த 29ஆம் திகதி வவுனியா, பட்டானிச்சூர் பள்ளிவாசல் முன்றலில் கூட்டம் நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களான எஸ்.கே.நூர்தீன் மசூர், ஏ.எல்.எம் அதாவுல் லாஹ், எம்.பி.மொஹிதீன் அப்துல்காதர், றிஸ்வி சின்னலெப்பை, பஸிர் சேகு தாவூத், எம்.எஸ்.தௌபிக் உட்பட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு முன்னர் ரவூப் ஹக்கீம் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட் டியின் விவரம் வருமாறு:—

கே: கடந்த காலங்களில் நீங்கள் வவுனியா வந்த தில்லை. தற்பொழுது உங் கள் விஜயத்தின் நோக்கம்?

ப: இந்த நாட்டில் இனப் பிரச்சினையை அரசு இரு விதமாக அணுகுகிறது என்ப தற்கு வவுனியா ஒரு முன் உதாரணம். இங்கு உள்ள நிலத் தொடர்பு உள்ள மக் களை ஒருவிதமாகவும் நிலத் தொடர்பு அற்ற மக்களை இன்னொரு விதமாகவும் அரசு ஆட்சி செய்கிறது. வவுனியாவில் முஸ்லிம் மக்கள் மட்டும் அல்ல தமிழ் மக்களும் துயரங்களை அனுபவிக்கிறார்கள். அகதி முகாம்களுக்குச் சென்று பார்த்தால் இவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் தெரியவரும். இனப் பிரச்சினையின் உண்மையான பரிமாணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நிச்சயமாக வவுனியா வரத்தான் வேண்டும்.

கே: அரசு புலிகளுடன் பேச வேண்டும் என்று நீங்களும் கூறி வருகிறீர்கள். அப்படி என்றால் அரசுக்கு எவ்வாறான அழுத்தங்களை நீங்கள் கொடுத்தீர்கள்?

ப: இன்று நாம் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருப்பதும் அரசுக்கு நாம் கொடுக் கும் அழுத்தங்களில் ஒன்றுதான். இந்த நெருக்கடியை நாங்களாகக் கொண்டு வந்து சேர்க்கவில்லை. அரசாங்கம் தானாகவே ஏற்படுத்திக்கொண்டது.

கே: இந்த நாட்டில் சமாதானம் வேண்டும் என்றால் புலிகளுடன் பேச வேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள்?

ப: சிங்களத் தீவிரவாதிகள் போன்று முஸ்லிம் காங்கிரஸ் நடந்து கொள்ள முடியாது. நாங்கள் யதார்த்த நிலையிலேயே நோக்கு பவர்கள். ஏற்கனவே வடக்கில் புலிகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள். எனினும் இவற்றை உணர்வுபூர்வமாக நாங்கள் அணுக வில்லை. யதார்த்த பூர்வமாகவே அணுகு கிறோம். நிராயுத பாணிகளாக உள்ள முஸ்லிம்கள் இந்தப் பிரச்சினை யை ஒரு வன்முறைக் கலாசாரத்தின் நிலையில் இருந்து பார்க்க விரும்பவில்லை.

கே: சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக சிறுபான்மை மக்களின் நிலைப்பாடு எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

ப: எங்களது கட்சி மட்டும் அல்ல ஏனைய சிறுபான்மையினரின் கட்சிகளும் சர்வ ஜன வாக்கெடுப்பில் அரசைப் படு தோல்வி அடையச்செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளன. இந்த வன்முறை அரசுக்கு எதிராக நாம் போர்க்கொடி தூக்கவேண் டும். இதற்காக சர்வஜன வாக்கெடுப்பில் அரசை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்.

கே: கட்டுநாயக்க தாக்குதலை நீங்கள் கண்டித்ததாக செய்திகள் வெளிவந் தனவே இது தொடர்பாக...?

ப: கட்டுநாயக்கா தாக்குதல் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினாலேயே இடம்பெற் றது. அரசாங்கத்தின் அசமந்தப் போக்கை நாம் கண்டிக்கும் போது புலிகளையும் கண்டிக்க வேண்டிய ஒரு கடப்பாடு இருக் கிறது. அதே சமயம் தமிழர் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படும் போது அதனை நாம் கண்டிப்பதற்கும் தயங்குவது இல்லை. தற்பொழுது சிறுபான்மை இனங்களான தமிழர்கள், முஸ்லிம்கள் மீது பேரினவாத அரசு தனது ஆதிக்கத்தைச் செலுத்த முற்படுகிறது. 1983 ஜூலைக் கலவரம், பிந்துனு வெவ படுகொலைகள், மாவனல்லைச் சம்பவம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். ஆகவே இத்தகைய போக்குக்கு எதிராக நாங்கள் தனித்து நின்று போராட முடியாது. சிறுபான்மை இன மக்கள் அனைவரும் இணைந்து பேரினவாதிகளை எதிர்க்க வேண்டும்.

—மகாமுனி

## பேரியலும் மகனும் தியாகங்கள் செய்ததால் வளர்ந்தது மு.கா.

''முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வளர்த்தெடுக்க தொண்டர்களும் ஏனை யவர்களும் செய்த தியாகங்களை விட நானும், எனது மகனும் செய்த தியாகங்கள் ஈடிணையற்றவை.

இவ்வாறு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

''காலஞ்சென்ற தலைவர் அஷ்ரப்பிற்கு அடுத்தபடியாக முஸ்லிம் காங்கிரஸை வளர்த்த பெருமை எனக்கு மாத்திரமே உண்டு'' என்றும் அவர் கூறினார்.

கல்முனையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:—

முஸ்லிம் காங்கிரஸில் எனக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. எனக்கு அதில் இடமுண்டா இல்லையா என்பதைத் தீர்மா னிக்க வேறு யாருக்கும் உரிமை கிடையாது. அதற்கான தகுதியும் யாருக்கும் இல்லை. எனது மூச்சே முஸ்லிம் காங்கிரஸ்தான்.

தலைவர் அஷ்ரப்பின் விருப்பங் களுக்கு எதிராக நான் செயற்படவில்லை. நான் அத்தகைய துரோகி அல்ல. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பற்றிப் பேச எனக்கு மட்டுமே பூரண தகுதி இருக்கிறது. என்னை எவராலும் கட்சியில் இருந்து வெளியேற்ற முடியாது'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கடி வலுக்கிறது


ஹிஸ்புல்லா

கடந்த 4 ஆம் திகதி கொழும்பு தாருஸ்ஸலாம் கட்டடத்தில் 25 முஸ்லிம் காங் கிரஸ் உறுப்பினர் களுடன் கூட்டம் நடத்தப்பட்டது. அவ்வேளையில் முஸ்லிம் காங்கிர ஸின் புதிய தலை வராக எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக் கிறார்.

இதனால் முஸ்லிம் காங்கிரஸில் ஏற்கனவே இருந்து வந்த பூசல் மேலும் ஒரு படி வலுவடைந்துள்ளது.

புதிய தலைவர் நியமனம் தொடர் பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவசரமாக வெளியிட்ட அறிக்கை யில் சட்டத்தை மீறிக் கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்திற்கு அரசாங்கமே பின்னணியில் இருந்து செயற்பட்டுள்ளது என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

தாருஸ்ஸலாமில் நடைபெற்ற கூட்டத்தில் மொத்தம் 25 உறுப்பினர்களே சமூகமளித்திருந்தனர்.

புதிய தலைவராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும், பொதுச் செயலாளராக சட்டத்தரணி நிஸாம் காரியப்பரும் தெரிவு செய்யப்பட்டனர். காலஞ்சென்ற தலைவரின் மகன் அமான் அஷ்ரப் பிரதித் தலைவரானார்.

மேலும் 23 பேர் கொண்ட அரசியல் அதிஉயர் பீட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளராக எம்.ஐ.எம் மொஹிதீனும் மூத்த துணைத் தலைவராக யு.எம்.ஹனிபாவும் (மருதூர்க் கனி) பிரதித் தலைவர்களாக சட்டத்தரணி அபுல்கலாம், யூ.எல்.எம்.மொஹிதீன் எம்.பி. ஆகியோரும் தேசிய அமைப்பாளராக எம்.ஐ.உதுமா லெப்பையும் பொருளாளராக எம்.ஐ.எம்.அன்வரும் தெரிவாகி உள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் யாப்பின் படியே மேற்படி தெரிவுகள் இடம்பெற்ற தாக அவர்கள் தெரிவித்தனர்.

தாருஸ்ஸலாமில் இக்கூட்டம் நடை பெற்ற ஒரு மணி நேரத்தில் ரவூப் ஹக்கீம், ஹிஸ்புல்லாவின் நியமனம் தொடர்பான கண்டனக் கூட்டம் ஒன்றை 28 உறுப்பின ரைக் கொண்டு அவசரமாக நடத்தினார்.

ரவூப் ஹக்கீம் தேர்தல் ஆணையாள ரால் அங்கீகாரம் பெற்ற தலைவர் என்பதால் ஹிஸ்புல்லாவின் கூட்டத் துக்கும், அவரது தலைமைப் பதவிக்கும் ஏனைய உறுப்பினர் தெரிவுக்கும் சட்டரீதியான நிரூபணம் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சிக்கு மாறிய 3 மு.கா. எம்.பிக்கள் மீது 8 குற்றச்சாட்டுக்கள்

அரசாங்கத் தரப்பில் இருந்து எதிர்கட்சிக்கு மாறிய மூன்று முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் எதிராக எட்டுக் குற்றச்சாட் டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இக்குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கம் அளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையத்துக்கு வருமாறு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

முன்னாள் பிரதியமைச்சரும் திகாமடுல்ல எம்.பியுமான ஏ.எல். அதாவுல்லாஹ், திருகோணமலை மாவட்ட எம்.பியான எம்.எஸ்.தௌபிக், தேசியப் பட்டியல் உறுப்பினர் ரிஸ்வி சின்னலெப்பை ஆகியோரே இவ்வாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன இம்மூன்று முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் களுக்கும் எதிரான குற்றப் பத்திரங்களை அனுப்பியுள்ளார்.

அரசாங்கத்தரப்பில் இருந்து எதிர்த் தரப்புக்கு மாறினார்கள், அரசாங்கத்தின் சிக்கலான நிலைமைக்குக் காரணமாக இருந்தார்கள், எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தார்கள், அரசாங்கத்தை விமர்சித்தார்கள், கூட்டுப் பொறுப்பை பேணத் தவறினார்கள், அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக எதிர்க்கட்சிகளுடன் சதி செய்தார்கள், கட்சியின் தீர்மானத்துக்கும் நற்பெயருக்கும் தீங்கிழைக்கும் வகையிலான நடவடிக்கையில் ஈடுபட் டார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவை நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

## எதிராக வாக்களிக்க கூட்டணி தீர்மானம்

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என் றும் அரசு கைவிடாத பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக வாக்க ளிப்பதைத் தவிர வேறு வழி இல்லை என் றும் தமிழர் விடுதலைக்கூட்டணி முடிவு செய்துள்ளது.

இம் மாதம் 21ஆம் திகதி நடைபெற உள்ள சர்வஜன வாக்கெடுப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்ப தற்காக அதன் மத்திய செயற்குழு கடந்த 5ஆம் திகதி கூடி ஆராய்ந்தது. அப்பொழுதே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

சகல மோதல்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் முரண்பாடுகளுக்கு வழி வகுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கைவிடு மாறும் அரசையும் எதிர்க்கட்சிகளையும் கோருவது என்றும் கூட்டணியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

1978ஆம் ஆண்டு அரசமைப்புக்குப் பதிலாக சகல தரப்பினரும் ஏற்றுக்கொள் ளக் கூடிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் அது கோரி உள்ளது.

புதிய அரசியலமைப்பின் உள்ளடக்கம் சம்பந்தமாகவும் புதிய அரசமைப்பை உருவாக்கும் முறையிலும் தெளிவின்மை நிலவுவதாகவும்—

விடுதலைப்புலிகளுடனும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி உரு வாக்கப்படும் அரசமைப்பை மக்கள் தீர்ப்புக் காக நாட்டு மக்கள் முன் சமர்ப்பிக்க வேண் டும் என்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

## தனி நாடு உருவாகுவதற்கு...

4ஆம் பக்க தொடர்ச்சி....

அண்டை நாடான இந்தியா தான் நினைத் ததை இலங்கையில் இலகுவில் செய்து முடித்து விடலாம். தூர இருக்கும் இலங்கை யின் நேச நாடுகளால் அதைத் தடுக்க முடி யாது. அவை வேண்டுமானால் காரியம் முடிந்த பின்னர் நடந்ததற்கு வருத்தம் தெரிவிக்கலாம்; நடத்தியவர்களை வன்மை யாகக் கண்டிக்கலாம். அவ்வளவு தான்.

இலங்கையில் தனிநாடு அமைந்தால் தமிழகத்தில் உள்ள தமிழர்களும் தனிநாட் டுக் கோரிக்கையை எழுப்பலாம் என்ற அச்சம் இந்திய அரசுக்கு உண்டு. அதனால் இலங்கையில் தனிநாடு என்ற விஷயத்தில் இந்தியா எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருக்கும் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

அறிஞர் அண்ணாத்துரை திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டதோடு இந்தியாவின் தனித் தமிழ் நாட்டு அல்லது திராவிட நாட்டு அச்சம் அறவே நீங்கி விட்டது.

அந்த அச்சம் அற்ப சொற்பம் இருந்தாலும் கூட தன்னுடைய தென்கிழக்கு ஆசிய மற்றும் இந்துசமுத்திரப் பிராந்திய மேலாண்மை நிலைக்கு இலங்கை உண்மையாகவே குந்தகமாக இருக்கிறது என்று கண்டால் இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கை யையும் எடுக்க இந்தியா தயங்காது.

இலங்கை முழுவதையும் ஒரு கைபார்ப்பதற்கு இந்தியாவுக்கு ஒரு மணிநேரம் கூடத் தேவைப்படாது.

இந்தியா பெரிய நாடு. வான்வெளித் துறை, விஞ்ஞானத்துறை உட்பட எல்லாத் துறைகளிலும் அதிமுன்னேற்றம் கண்டிருக் கும் நாடு. வல்லரசுகள் எல்லாவற்றிற்கும் ஈடு கொடுக்கக் கூடிய வல்லமை பெற்றுள்ள நாடு.

இலங்கை...?

# மற்றொரு வன்னியாக மாறும் மூதூர் கிழக்கு

திருகோணமலை மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத மூதூர் கிழக்குப் பகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்குப் படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

இந்தக் கட்டுப்பாட்டால் மூதூர் கிழக்குப் பகுதியில் வசிக்கும் சுமார் 18 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மூதூர் நகரில் இருந்து மூதூர் கிழக்குப் பகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் போது, கட்டைபறிச்சான் இராணுவச் சோதனைச் சாவடியில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட அளவுக்கு மேல் எந்த ஓர் உணவுப் பொருளையும் பொதுமக்கள் கொண்டு செல்ல முடியாது.



சேனையூர் கட்டைபறிச்சான் பிரதான வீதியின் அவல நிலை

வடக்கில் போர் அவலங்களினாலும் பொருளாதாரத் தடைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஒரு நிலையே மூதூர் கிழக்குப் பகுதி மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலர் பிரிவில் மூதூர் கிழக்குப் பகுதியும் ஒன்று.

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் மூதூர் நகரமும் அதனை அண்டிய சில பகுதிகளுமே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

கட்டைபறிச்சான் இராணுவ சோதனைச்சாவடிக்கு அப்பால், சேனையூர், கடற்கரைச்சேனை, சம்பூர், கூனித்தீவு சூடைக்குடா, இலக்கந்தை, வீரமாநகர், மலை முந்தல், பாட்டாளிபுரம் நல்லூர், மட்டபுக்கழி மற்றும் மூதூர் கிழக்குப் பகுதியின் எல்லையில் உள்ள பள்ளிக் குடியிருப்பு, கட்டைபறிச்சான் ஆகிய கிராமங்கள் வரை பெரும் எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்றனர்.

இப்பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாதவை.

விவசாயம், கடற்றொழில், விறகு எடுத்தல், தேன் எடுத்தல் மற்றும் கூலி வேலை செய்தல் ஆகியவை இப்பகுதி மக்களின் பிரதான தொழில்கள்.

கடந்தகாலப் போர் அனர்த்தங்களினால் மருத்துவ வசதி, கல்வி வசதி என்பனவற்றுடன் பொருளாதார வளங்களையும் இழந்த நிலையில் இப்பகுதி மக்கள் வாழ்கின்றனர்.

அதே சமயம் இப்பகுதியில் உள்ள பாடசாலைகள் கட்டட வசதிகள் அற்றுக் காணப்படுகின்றன.

மலைமுந்தல் பாடசாலையில் 5 ஆம் ஆண்டுவரையே கல்வி கற்பிக்கப்படுகின்றது. 160 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கின்றனர். ஓர் ஆசிரியருடனேயே இப்பாடசாலை இயங்கி வருகின்றது. இது குறித்து இக்கிராமப் பெற்றோரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கவலை தெரிவித்துள்ளன.

இப்படிப் பல பாடசாலைகள் திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களில் இருக்கின்றன.

சில பாடசாலைகளில் மாணவர்கள் கட்டட வசதியின்றி வெட்ட வெளியில் இருந்தும் கல்வி கற்று வருகின்றனர்.

மூதூர் கிழக்குப் பகுதி மக்களின் வேதனைகள் தீர்ந்து அவர்களுக்கு விடிவு காலம் பிறக்குமா?

— சுதன்

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத மூதூர் கிழக்குப் பகுதியில் பல வீதிகள் நீண்ட காலமாகப் பழுதடைந்து கிடக்கின்றன.

சேனையூர், சம்பூர், கட்டைப்பறிச்சான் போன்ற பகுதிகளில் உள்ள வீதிகளே இவ்வாறு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

குண்டும் குழியுமாக இருக்கும் இந்த வீதிகளில் சிறு மழை பெய்தாலே வெள்ளம் தேங்கி விடும்.

திருமலை மாவட்டத்தில் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கோடிக்கணக்கான பணத்தை அரசு வாரி இறைக்கின்றது.

ஆனால், மூதூர் கிழக்குப் பகுதியில் மிக முக்கியமான வீதிகள் இன்னும் திருத்தப்படவில்லை.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வீதிகளில் தார் என்பதைக் கண்ணால் காண முடியவில்லை.

மூதூர்—சம்பூர் போக்குவரத்துச் சபை பஸ்கள் கூட இந்த வீதி வழியாகவே செல்ல வேண்டியுள்ளது.

இதனால் பஸ்கள் அடிக்கடி பழுதடைகின்றன. இந்த வீதியால் செல்வோரின் திட்டுக்கும், முணுமுணுப்புக்கும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் இலக்காகி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மூதூர் கிழக்குப் பகுதி மக்களுக்கு விமோசனம் எப்போதான் கிடைக்கப் போகிறது?

# பச்சிளம் குழந்தைக்கு ஏற்பட்ட பரிதாபச் சாவு



கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட குழந்தையின் சடலம்

நான்கு நாள் குழந்தை ஒன்று 26 அடி ஆழமான கிணறு ஒன்றில் தூக்கிப்போடப்பட்டு உயிரிழந்த கோரச் சம்பவம் கந்தளாயில் கெமுனுமாவத்தை என்னும் இடத்தில் இடம் பெற்றது.

குழந்தையின் தந்தையார் சவுர்தீன் வயது 36. தாயார் பக்கீர் பாவா ஜென்னதும்மா வயது 34.

கடந்த 23 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இந்தப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது.

வெள்ளைப் புடைவை அணிந்த மூதாட்டி ஒருவர் தம்மைத் தாக்கிவிட்டுக் குழந்தையைத் தூக்கிச் சென்றதாகவும்— குழந்தையைக் கிணற்றில் போட்டுவிட்டதாக அந்த மூதாட்டி மீண்டும் வந்து தெரிவித்து விட்டுச் சென்றதாகவும் குழந்தையின் தாயார் தெரிவித்ததாக பொலிஸில் வாக்கு மூலம் அளிக்கப்பட்டது.



குழந்தையின் சடலத்தை எடுப்பதற்கு கிணற்றுக்குள் ஒருவர் இறங்குகிறார்.

திருகோணமலை மேலதிக நீதிவான் ரி.எல்.ஏ. மனாபினின் உத்தரவுக்கிணங்க குழந்தையின் சடலம் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுக் குருநாகல் சட்ட வைத்திய அதிகாரியிடம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.



திருமலை மாட்ட மேலதிக நீதிவான் ரி.எல்.ஏ.மனாப் சட்ட வைத்தியர் பெரேரா மற்றும் அதிகாரிகள் சடலத்தை மீட்பதற்கு முன்னர் கிணற்றைப் பார்வையிடுகின்றனர்.

மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் தாயார் இதனைச் செய்திருக்கலாம் என்றும் வெள்ளைப் புடைவை அணிந்த பெண் பற்றி அவர் கூறியதெல்லாம் வெறும் பிரமை என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

குழந்தையின் தாயாரை மனநோய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

— அன்வர் அலி




## மந்திரத்தால் மாங்காய் விழுமா?

மக்கள் ஆதரவு தமக்கு இருப்பதால் தம்மை அசைக்க முடியாது என்று மார்தட்டும் அரசியல் வாதிகள் அநேகர். வெளியே மக்கள் சக்தியைப் பற்றிப் புகழ்ந்து தள்ளினாலும், உள்ளூர அவர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை.

நம்பிக்கை இன்மையினால் அதீத சக்திகளைக் கொண்டு தம் பலத்தை அதிகரிக்க முயற்சிக்கிறார்கள். இதில் அதிகார அம்மணியும் விதிவிலக்கல்ல.

அதிகார அம்மணியின் தலைக்குமேல் போய்விட்டன அரசியல் சிக்கல்கள். அதில் இருந்து விடுபடவும், தனது அரசியல் எதிரிகளை விட தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும் அவர் ஒரு பேயோட்டியின் தயவை (கட்டடியா) நாடினாராம்.

மலை நாட்டின் தலைநகரில் உள்ள உத்தியோகபூர்வஹவுஸில் 'தொவில்' நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டனவாம். இரவிரவாக நடத்தப்பட்ட 'தொவில்' நிகழ்ச்சியில் பூசனியும், தேசிக்காயும் பெருமளவு வெட்டப்பட்டனவாம். அதிகாலையில் அவை மகாவலியில் கொட்டப்பட்டனவாம்.

கொலை செய்யப்பட்ட முன்னை நாள் அதிகாரத் தலைவருக்கும் இந்த 'கட்டடியா' தான் பல மந்திர தந்திர வேலைகளைச் செய்து கொடுத்தாராம்.

மந்திரத்தால் மாங்காய் விழும் என்று நம்புபவர்களால் நாட்டுக்கு எப்படி நன்மை கிடைக்கும்? என்று இதனை அறிந்தவர்கள் கேட்கிறார்கள்.

## பயமுறுத்திப் பார்ப்போமோ!

ஏனைய இயக்கக்காரர்களின் பையன்களைக் கடத்தியும், இயக்க அலுவலகங்கள் மீது மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து பயமுறுத்துவதிலும் ஒரு தமிழ் இயக்கம் கூடுதல் அக்கறை காட்டி வருகிறதாம்.

சர்வஜன வாக்கெடுப்புக்கும் அதிகாரத் தரப்பாருக்கும் எதிராக ஏனைய தமிழ் இயக்கக்காரர்கள் இருப்பதுதான் இதற்குக்காரணம் என்று தெரிவிக்கப்படுகிறதாம்.

மன்னாரில் சுட்டுக்கொல்லப்பட்ட பையனை இந்தக் குறிப்பிட்ட இயக்கக் காரர்கள் தான் கடத்திச் சென்றார்கள் என்று அந்தப் பையனின் தாயார் அடித்துச் சொல்கிறாராம். இப்போது அது பற்றிய முறைப்பாட்டைச் சீருடைக்காரர்களிடமும் சொல்ல அத்தாயுள்ளம் நினைக்கிறதாம்.

வவுனியாவில் ஓர் இயக்கத்தின் இரண்டு பையன்களைக் கடத்திய மேற்படி இயக்கம் பின்பு அவர்களை விடுவித்ததாம். ஆனாலும் அந்த இயக்கத்துக்கும் இந்த இயக்கத்துக்கும் உள்ளூரப் புகைச்சல் அதிகரித்து வருகிறதாம்.

வவுனியாவில் அந்தத் தமிழ் இயக்கத்தின் அலுவலகம் மீது மறைந்திருந்து சூடு நடத்தியது பயமுறுத்திப் பார்க்கத்தான் என்று கூறப்படுகிறதாம்.

ஆனால் இப்படிப் பயமுறுத்திப் பார்க்க நினைக்கும் இயக்கத்தின் செயற்பாடுகளின் பின்னணியில் ஏதோ மறைகரம் இருக்கிறது. இப்படித்தான் ஏனைய தமிழ் இயக்கக் காரர்கள் கருதுகிறார்களாம்.

போகிற போக்கைப் பார்த்தால் தேர்தலுக்கு முன் வவுனியாவில் தேவையற்ற சூழல் உருவாக்கிவிடப்படும் என்ற கேள்வியும் எழுந்திருக்கிறதாம்.

## தடுமாறும் சித்தர் சித்தம்

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதென்று முடிவு எடுத்தது பழையவிடயம்.

ஆனால் அதில் அங்கம் வகிக்கும் 'சித்தர்' தரப்பு இப்போது மதில் மேல் பூனைகளாகி விட்டதாம்.

அண்மையில் சித்தர் தரப்பினர் வவுனியாவில் கூடிப் பேசினார்களாம். ஆனால் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றித் திட்ட வட்டமான முடிவு எதனையும் எடுக்கவில்லையாம். சர்வஜன வாக்கெடுப்பு விவகாரத்தை இரண்டாம் தரப் பிரச்சினையாகவே தாம் பார்ப்பதாகத் தெரிவிக்கிறார்களாம்.

பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் சர்வஜன வாக்கெடுப்பை சுயநல நோக்கோடு பார்ப்பதாகவும், தங்கள் கட்சி அப்படிப் பார்க்கக்கூடாது என்றும் முக்கிய புள்ளிகள் கூட்டத்தில் பேசினார்களாம்.

சித்தர் தரப்பினர் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி மக்களுக்கு உறுதியான முடிவைத் தெரிவிக்காமல் நழுவிச் செல்வதன் காரணம் என்ன? இப்படிச் சில தமிழ்க்கட்சித் தலைவர்கள் இப்போது தலையைப் பிய்த்துக் கொள்கிறார்களாம்.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டங்களை நடத்தும் பொறுப்பு அவ்வப் பிரதேச தமிழ்க்கட்சிகளிடையே விடப்பட்டன. அது குறித்துக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

திட்ட வட்டமான முடிவு எடுக்காததால், தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் முடிவுகளுக்கு இணங்கக் கூட்டங்களை நடத்துவதிலும், அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதிலும் சித்தர் தரப்புக்குள் இப்போது சிக்கல் ஏற்பட்டிருக்கிறதாம்.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து இவர்கள் பிரசாரம் செய்வார்களா என்று கொழும்பிலுள்ள தமிழ்த் தலைவர்களும் சந்தேகம் தெரிவிக்கிறார்களாம்.

## மௌனம் தான் பேசியதோ?

அதிகார அம்மணியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிக்க ஒன்று திரண்ட எதிர்க்கட்சிக்காரர்களின் கூட்டமைப்பின் கூட்டம் ஒன்று அண்மையில் நடந்தது.

அந்தக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். ஒரு தமிழ்க் கட்சியின் சிரேஷ்டமான உபதலைவரும் இன்னொரு தமிழ்க் கட்சியின் ஆனைமுகத் தலைவரும் மற்றொரு தமிழ்க் கட்சியின் அன்புச் சந்திரனாரும் கூட்டத்தில் கலந்து கொண்டனராம். வேறொரு தமிழ்க் கட்சியின் தலைவர் கூட்ட முடிவுக்குச் சற்று முன்னதாகவே வந்து சேர்ந்தாராம்.

கூட்டத்தில் பல சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து பல விடயங்களைப் பேசி ஆராய்ந்தார்கள். முடிவில் பொது எதிர்க் கட்சிகளின் சார்பாகத் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிடத் தீர்மானித்தனர். துண்டுப்பிரசுரத்தில் உள்ளடங்கும் சமாச்சாரங்கள் அக்குவேறு ஆணிவேறாகக் கவனிக்கப்பட்டு எழுதப்பட்டன.

சிங்களத்தின் பூமி புத்திரர்களின் தலைவர் என்று கூறிக்கொள்ளும் ஒரு அரிச்சந்திரப்பிரபு துண்டுப்பிரசுரத்தின் கடைசியில் வரும் பந்தியை அவ்வளவு விரும்பவில்லையாம்.

''இனப் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும்'' என்ற வரிகள் துண்டுப்பிரசுரத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினாராம். கடைசியில் அவ்வரிகள் நீக்கப்பட்டன.

பொது இடங்களிலும் கூட்டங்களிலும் இரண்டு எழுத்துக்காரர்களுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று வாய் கிழியப் பேசும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களோ அப்பொழுது மூச்சுவிடக் கூட மறந்து நின்றார்களாம்.

பிந்தி வந்த தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவர் மனோ வேகத்தில் கேள்வி எழுப்பினாராம். சிங்களத் தலைவர்களோ ''அங்கீகாரத்துடன் தான் அந்தப் பந்திகள் நீக்கப்பட்டன'' என்று தெரிவித்தார்களாம்.

இப்போது இந்த விவகாரம் தமிழ்க்கட்சிகளின் உள்ளும் பேசப்படுகிறதாம்.

## அந்த இருவருக்கும் உள்ள நெருக்கம்

பத்துத் தமிழ்க்கட்சிகள் ஒன்று திரண்டு நிற்பது தமிழ் மக்களால் வரவேற்கப்படுகிறது. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று சொல்வார்களே! அதுபோல.

பத்துக் கட்சிகளுடன் இன்னொரு முஸ்லிம் கட்சி திரண்டு நின்றதால் அது பதினொன்றாகியது. இப்போது மீண்டும் பத்தாகி விடுமோ என்ற கேள்வி எழும்பியிருக்கிறதாம். இன்னுமொரு தமிழ்க்கட்சியால் தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதாம்.

அதற்குக் காரணம் ஒரு முஸ்லிம் மந்திரிதானாம். முஸ்லிம் மந்திரியார் வீசிய வலையில் சிக்குண்டு இப்போது அவர் பின்னாலேயே ஒரு கட்சியின் தலைவர் திரிகிறாராம். அந்தத் தலைவரும் ஒரு முஸ்லிம்.

கட்சியின் பெயருக்கு முன்னால் தந்தையாரின் பெயரைச் சூடிய அந்தத் தமிழ்க் கட்சியின் தலைவரானவர் முன்பெல்லாம் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக் கூட்டங்களுக்குத் தவறாமல் வருவாராம். இப்போதெல்லாம் அழைப்புகளையும் அலட்சியம் செய்கிறாராம்.

முஸ்லிம் மந்திரியாருடன் ஏற்பட்டு விட்ட நெருக்கம் அந்தளவுக்கு அவரை மாற்றியமைத்து விட்டதாம்.

விலை போகாமல் இருந்தால் போதும் என்று மற்றைய தமிழ்க்கட்சித் தலைவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

# புத்திஜீவிகள் எனக் கூறுவோர் உரிமைகளைப் பெற்றுத்தருவார்களா?

தேரடிக்கு கையில் பழைய இந்திய சஞ்சிகை ஒன்றை சுருட்டிப்பிடித்தபடி வந்தார் விநாசியர்.

அவரும் மாஸ்டரும் அமரும் முன்னரே,ஆவல் தாங்காது, ''என்னண்ணை புத்தகம்'' என்று கேட்டான் டானியல்.

''மகள் இன்று வீடு துப்பரவாக்கினவ, அப்ப மூலைக்குள்ளை கிடந்த இந்தப் புத்தகம் அகப்பட்டது. இதிலை இருக்கிற விஷயம் ஒன்று, இப்ப எங்களுக்குத் தேவையாக இருந்தது. அதுதான் கையோட கொண்டு வந்தனான்''என்று விநாசியர் முடிக்க,

''அதென்ன,சினிமா விஷயமோ'' என்று கேட்டான் லோகன்.

''தூ... நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணீர்தான்'' என்றாள் சின்னாச்சி.

''இரு மச்சான், அண்ணை சொல்லுவார் தானே, அதுக்குள்ளை கிழவியிட்ட தடியைக் குடுத்து ஏன் அடி வாங்கவேணும்? வடக்கிலை சுரண்டி தெற்கிலை கிழிபட்டவை போல'' என்று நண்பனைக் கண்டித்த டானியல், நீங்களும் அப்படித் தான் அண்ணை, அரசமைப்பிலை என்ன மாற்றம் என்று சொல்லாமலேயே சர்வஜன வாக்கெடுப்பு என்கிறவை மாதிரி, புத்தகத்திலை என்ன இருக்கு என்று சொல்லாமல், சுத்திச் சுண்ணாம்பு எடுக்கிறியள்'' என்றான்.

அவர்களின் பொறுமையை மேலும் சோதிக்காமல் விநாசியர் அரட்டையை ஆரம்பித்தார்.

''இது ஐ.பி.கே.எவ் இருந்த காலத்திலை தமிழ் நாட்டிலை வெளிவந்த 'இந்தியா டுடே' தமிழ் சஞ்சிகை

''அப்ப பிளேனிலை இந்தியா கொண்டு வந்து அரிசி பருப்பு போட்டதற்குப் பிறகு, இங்கு நேரடியாக வந்து சென்ற பெண் நிருபர் ஒருவர் அது பற்றி இதிலை ஒரு கட்டுரை எழுதியிருக்கிறா.''

''அதிலை ஒரு இடத்திலை, அங்குள்ள சாதாரண விவசாயிகள் கூட மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். அரசியல் விடயங்கள் குறித்துத் தெளிவாகச் சிந்திக்கிறார்கள். வெறும் அரிசி, பருப்பையோ, உதவிகளைக் காட்டியோ அவர்களை இந்திய அரசு கவர்ந்துவிட முடியும் என்று தோன்றவில்லை என்று அந்தப் பெண் நிருபர் எழுதியிருக்கிறார்.'' முடித்தார் விநாசியர்.

''அதுக்கென்ன இப்போது, ஏமாற்ற மட்டுமில்லை எதிர்க்கவும் முடியாது என்று தெரிஞ்சு கொண்டு தானே மூட்டை கட்டினவை'' வழக்கம் போல் சின்னாச்சி நக்கல் சிரிப்புடன் சொன்னாள்.

''ஆனால் சின்னாச்சி, இப்ப நடக்கிறதுகளை வைச்சுப் பார்த்தால், அந்தப் பெண் நிருபர் எழுதின பெருமைகள் கன நாளைக்கு இருக்காது போல இருக்கே'' கவலையுடன் சொன்னார் விநாசியர்.

அதுவரை அமைதியாக இருந்த மாஸ்டர் தொண்டையைச் செருமி விட்டுப் பேச ஆரம்பித்தார்.

''விநாசியர் கவலைப்பட்ட காரணம் விளங்குது. எங்கடை சமுதாயத்திலை முக்கியமானவர்கள்,' பிரபலமானவர்கள் என்று கருதப்படுபவர்களின் நடத்தைகள் தான் விநாசியரின் கவலைக்குக் காரணம் என்று நினைக்கிறன்.''

''ஓம் மாஸ்டர், தங்கடை நலத்துக்காக, எங்களுக்குக் குழிபறிக்கிற செயல்களிலை ஈடுபடுகினம். பல்வேறு சந்தர்ப்பங்களிலை வெளிவந்த செய்திகள் இதை உறுதிப்படுத்துது, பிறகு எப்படி மாஸ்டர் கவலைப்படாமல் இருப்பது?'' இதைக் கேட்டு மெதுவாக உடம்பு குலுங்கச் சிரித்தார் மாஸ்டர்,

''ஒரு இனம் தம் மீதான அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் போது, அந்த இனத்தைச் சேர்ந்த சிலர், கிளர்ச்சிக்கு எதிராகச் செயற்படுவது, மனித சமுதாயத்தில் ஆச்சரியத்துக்குரியதல்ல. அவர்கள் சமுதாயத்தின் மேல் தட்டில் இருப்பதால் அவர்களின் குரல்கள் முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன.''

''மாஸ்டர் சொல்வது விளங்கிற மாதிரியும் இருக்குது. விளங்காத மாதிரியும் தெரியுது'' குழம்பினான் டானியல்.

''இதிலை குழப்பம் ஒன்றும் இல்லை தம்பி, எங்கடை இனத்திலையும் அந்த மாதிரி ஆட்கள் இருக்கினம்தானே. அவையில தங்களை புத்தி ஜீவிகளாகக் காட்டும் கும்பல்கள் இவை நேரடியாக உரிமைப் போராட்டத்தில் இறங்கமாட்டினம். தங்களது சுகங்களை வளங்களை எந்தக் காலத்திலும் விட்டுக்கொடுக்கமாட்டினம்.

''தாங்கள் புத்திஜீவிகள், ஆகவே உரிமைப் போராட்டத்தில் குதித்திருப்பவர்கள், தங்களை மதித்து, தங்களை நாடிவர வேண்டும் என்று எதிர்பார்ப்பினம்''

''படிச்ச ஆட்களைப் போராட்டத்தில் இணைக்கிறது நல்லது தானே'' குறுக்கிட்டான் லோகன்.

''சேகுவேரா கூட ஒரு டொக்டர்தான். ஆனால் அவர் நேரடியாக கியூபா விடுதலைப் போரில் பங்குபற்றினார். ஏன் எங்களில் கூட தமது கல்வியறிவை பிரதிபலன் பாராது, இனத்துக்காக அர்ப்பணிக்கும் மாமனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லும் கும்பல், வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள். வெளிநாடுகளில் தொடர்புகளும் அவைக்கிருக்கும்.''

''உரிமைப் போராட்டத்தில் யதார்த்த நிலைக்கு ஒத்துவராத, வரட்டு சித்தாந்தங்களைப் பிடித்துத் தொங்குவினம். அதை யாராவது சுட்டிக்காட்டி னால் கோபம் கொண்டு, அடக்கு முறையாளர்களின் கைக்கூலிகள் ஆகி, போராட்டத்தைக் கொச்சைப்படுத்த ஆரம்பிப்பினம். உலகின் பல்வேறுபட்ட எழுச்சிப் போராட்டங்களிலும், இத்தகைய புல்லுருவி அறிவு ஜீவிகள் தவிர்க்க முடியாத நிலையில் அகற்றப்பட்ட சம்பவங்கள் இருக்கு'' விறைத்துப் போனகால்களுக்கு ரத்தம் பாய்ச்ச மாற்றிப் போட்டுக் கொண்டார் மாஸ்டர்.

''தங்களை மனித உரிமைக் காவலர்கள் போல் சர்வதேச சமூகத்துக்குக் காட்டும் புல்லுருவி அறிவு ஜீவிகள், அடக்குமுறையாளரின் உரிமை மீறல்களைத் தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டமாக வெளி உலகுக்குக் காட்டிக் கொண்டு, இன எழுச்சியை கொச்சைப் படுத்துவதை நாங்கள் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம்''

என்றான் டானியல்.

'இதற்கு அடுத்த கோஷ்டி ஒன்று இருக்கு, இன எழுச்சிகளின் ஆரம்ப காலத்தில் மிதவாத அரசியல்வாதிகள். இவர்கள் வெறும் கற்பனையில் , மந்திரத்தால் மாங்காய் விழும் என்று மக்களிடம் 'படம்' காட்டிவரும் காலங்களில், 'கிங் மேக்கர்கள்' என்று தங்களை நினைத்துக் கொண்டு உலா வந்த கும்பல் இது.

'இன எழுச்சி போராட்டமாக உருமாறும் காலத்தில், இவர்களின் முகமூடிகள் கிழிக்கப்பட்டு புறந்தள்ளப்படுவார்கள், ஆனால், போராட்டத்தில் பங்களிப்புச் செய்யத் தயாராக இல்லாத இவர்கள், தங்களது சிம்மாசனத்தைக் கவிழ்த்து விட்ட எழுச் சிப் போராட்டங்களை, ஆற்றாமையால் குறை சொல்ல ஆரம்பிப்பார்கள்.

'ஆனால் இவர்களால் வெளிப்படையாக அடக்குமுறையாளர்களுடன் உறவாட முடியாது.

ஏனென்றால் தொடக்கத்தில் மக்களின் உரிமைகளுக்காகக் போராடியவர்கள் தாங்களே என்ற முகமூடிதான் இப்போது இவர்களுக்குப் பாதுகாப்பு, ஆகவே போராட்டத்தை முன்னெடுப்பவர்களை அழித்து அந்த இடத்தைப் பிடிக்க முயல்பவர்களுடன் சேரும் கூட்டம் இது' என்றார் மாஸ்டர்.

'எப்படியோ போராட்டத்தை முன்னெடுக்க முயற்சிக்கிறார்களே' என்றான் லோகன்.

''அங்கேதான் தம்பி கன பேர் பிழைவிடுகினம். போராட்டத்தை வென்றெடுத்துச் செல்பவர்களின் இடத்தைப் பிடிக்க இந்தக்கூட்டம் நினைப்பது, மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க அல்ல. இந்தக் கூட்டத்திற்கு பிரச்சினையை தீர்ப்பதை விட, பிரச்சினையைத் தீர்த்தது தாங்கள்தான் என்ற பெருமையை பெறவே ஆசை''

''விளங்கேல்லை மாஸ்டர்''

''இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தின்



## தேரடி அரட்டை

தொடக்கத்தில், பிரிட்டிஷ் இராணுவத்தில் இருந்த இந்தியர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இதற்கு சிப்பாய்க் கலகம் என்று பெயர். அப்போது, இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடுவதாகக் கூறிய காங்கிரஸார் சிப்பாய்க் கலகத்துக்கு ஆதரவு தெரிவிக்க மறுத்து விட்டார்கள். உண்மையில் பிரிட்டிஷாரை எதிர்ப்பதுதான் காங்கிரஸின் நோக்கமாக இருந்திருந்தால், பிரிட்டிஷ் அரசை எதிர்த்து நடந்த சிப்பாய்க் கலகத்துக்கு அது ஆதரவு தெரிவித்திருக்கும். ஆனால் இந்தியா சுதந்திரம் அடைவதை விட தாங்கள் அரசியல் தலைமைக்கு வருவதே காங்கிரஸ் தலைவர்களின் நோக்கமாக இருந்ததால்தான் மற்றைய போராட்டங்களுக்கு ஆதரவளிக்காமல் தவிர்த்ததாக இப்போது இந்தியாவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன'' சொல்லி முடித்தார் மாஸ்டர்.

''தனது பரம்பரையினரை இந்தியாவை ஆளவைத்த காங்கிரஸ் தலைவருக்கும் பிரிட்டிஷ் அரசின் வைஸ்ராயாக இந்தி யாவில் இருந்த மவுண்ட் பேட்டன் பிரபுவின் மனைவிக்கும் தொடர்பு இருந்ததாம். இதைப்பயன்படுத்தி, பிரிட்டிஷ் அரசுக்குச் சாதகமான முறையில் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப் பட்டதே தவிர, இந்தியாவின் எதிர்கால நலனுக்கு ஏற்ற வகையில் சுதந்திர இந்தியா மலரவில்லை என்று இப் போதும் குற்றச்சாட்டுக்கள் இந்தியாவில் இருக்கு'' தனக்குத் தெரிந்ததைச் சொன்னார் விநாசியர்.

''என்ன சின்னாச்சி, பேச்சைக் காணேல்லை'' வாயைக் கிண்டினான் லோகன்.

'' நடுச்சாமம் என்றாலும் , தன்னந் தனியாக ரோட்டிலை பயமில்லாமல் போக விரும்புற பொம்புளைப் பிள்ளை— பின்னேரம் 5 மணியானாலே பிள்ளை வீட்டை வரேல்லையே, என்ன நடந்துதோ என்று தவிக்கிறதுக்கு முடிவு காண விரும்புற பெற்றோரும், நேர்மையா உழைச்சுச் சாப்பிட விரும்பும் உழைப்பாளியும்— இதெல்லாத்தையும் விட, பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை, மானம், மரியாதையுடன், சுதந்திரமாகச் சாக வேணும் என்று நினைக்கிற மனிதர்களும் இருக்கிற வரைக்கும் நீங்கள் சொன்ன மாதிரி எத்தனை புல்லுருவிகள், பச்சோந்திகள் உருவானாலும் தமிழருக்கு நல்ல வாழ்க்கை வருவதைத் தடுக்கமுடியாது!''

கோவிலில் கொழுந்து விட்டு எரிந்த கற்பூரத்தீயைப் போல பிரகாசமான முகத்து டன் சொன்னபடியே கடலைக் கடையைக் கட்டினாள் சின்னாச்சி.

—ஏகலைவன்


## அதிசய நோய்தீர்க்கும் வர்மக்கலை + இந்திய சித்தவைத்தியம்

சித்தவைத்தியம் என்றால் என்ன? நாம் பிறந்த இந்த மண்ணில், பூமியில் விளைந்த தாவரங்களைக் கொண்டு செய்யும் வைத்தியம். அவை மனிதனுக்கு உணவாகப் பயன்படும் தாவரங்கள். வல்லாரை, கீரையை உண்டு இறந்தவனும் இல்லை, பொன்னாங்கண்ணியை உண்டு வீண்போனவனும் இல்லை.

அதுபோல் சித்தவைத்தியத்தில் ராஜ மூலிகைகள் பயன்படுகின்றன. எனவே ''பாவனை பரிமாணம்'' சிறிதளவாக இருக்கிறது. இச் சித்தவைத்தியத்தில் பத்தியமும் இல்லை கசாயமும் இல்லை.

வர்மக்கலை என்றால் என்ன? மனித சரீரத்தில் எத்தனையோ சக்தி நாளப்புள்ளிகள் உள்ளன. அவை எங்குள்ளன என்பதை அறிந்து குறிப்பிட்ட புள்ளியைத் திறந்துவிடும்போது நோய் நிலை முற்றாக மறைந்துவிடும். அந்த சக்தி நாளப்புள்ளிகளைக் கடுமையாகத் தாக்கும் கலையே குங்பு எனப்படுவது. அதே புள்ளிகளை தெய்வ சிந்தனையுடன் தொடுகை செய்யும்போது அந்த சக்தி நாளப்புள்ளிகளை திறந்து நோய் தீர்க்கலாம்.

எனவே இதன் மூலம் தீர்க்கமுடியாத நோயே இல்லை என்றே கூறலாம். அதிலும் மிக முக்கியமான தீர்க்கவே முடியாத நோயாகக் கருதப்படும் இரத்தப்புற்று நோயான லூகேமியா, தெலோசிமா, ஆஸ்த்துமா, ஸ்பொன்டிலோசிஸ் இவைகளை முற்றாகக் குணமாக்க முடியும்.

தொலைபேசி மூலம் உள்நாட்டில் உள்ளவர்களும் வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். அழைத்தால் நேரிலும் வரத் தயாராக இருக்கிறோம். மூன்று மாதங்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது என கைவிடப்பட்டவர்கள்கூட தொடர்புகொள்ளலாம். இறை அருளால் குணம் பெறமுடியும். இறை ஆசி உள்ளவர்கள் தொடர்புகொள்வீர்களாக

உங்கள் நலனின் பங்காளர்

வாழ்க வளமுடன்




டாக்டர் ப.சுரேஸ் (S.M.P) (India)

41A, Bus Stand (Orchid Saloon அருகில்)

Hatton.

Fax: 051-23650 Tel: 051-24203

# தமிழனுக்கு இறந்தும் கஷ்டம்! மயானம் செல்ல வழி இல்லை!!

**த**மிழனுக்கு இந்த நாட்டில் உயிரோடு இருந்தாலும் கஷ்டம்; இறந்தாலும் கஷ்டம். இறந்தபின் சடலம் மயானம் சென்றடைய வழி இல்லை. கடல் மார்க்கமாகவே இறுதி யாத்திரை நடைபெறுகிறது. புத்தளம் பகுதியில் இந்தப் பரிதாபம்!

இறால் பண்ணைகளுக்காக தரிசாக உள்ள இடங்கள் எல்லாம் ஆக்கிரமிக்கப் பட்டதால் வந்த மோசம் இது! மயானம் ஒன்றை மூன்று பக்கங்களில் இறால் பண்ணைகள் அடைத்துக் கொண்டு இருக்கின்றன. நாலாவது பக்கத்தில் கடல் இருக்கிறது. ஆயின் எப்படி மயானத்துக்குச் செல்வது?

எங்கே இந்த அவலம் என்று அறிய ஆவலா? வாருங்கள் புத்தளத்துக்கு. பாருங்கள் புளிச்சாக்குளக் கிராமத்து மயானத்தை!



மயானத்தின் மூன்று பக்க நிலங்கள் இறால் பண்ணைகளுக்காக ஆக்கிரமிப்பு . நான்காவது பக்கத்தில் கடல்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதி தமிழ் மக்கள் பயன்படுத்தி வரும் மயானம் இது.

கிராமத்திலிருந்து சுமார் அரைகிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. சுமார் ஒரு ஏக்கர் விஸ்தீரணம்.

மயானத்தைச் சுற்றியுள்ள தரிசு நிலம் முழுவதையும் இறால் பண்ணை நடத்துபவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். மயானத்தின் மூன்று பக்க எல்லைகளில் இறால் பண்ணைகள். நாலாவது பக்க எல்லை கடல். கிராம மக்கள் இறந்தவர்களின் சடலத்தை எப்படி அங்கே கொண்டு சென்று அடக்கம் செய்வார்கள்?



மயானத்தில் அமைச்சர் குழுவினர்

புத்தளம் பகுதி இறால் உற்பத்திக்கு ஏற்ற பகுதியென்று பிரசித்தமாகிவிட்டது. அதனால் இங்குள்ள அரச மற்றும் தனியார் நிலங்களில் எல்லாம் அசுர வேகத்தில் பண்ணைகள் அமைக்கப்பட்டுவிட்டன.

இறால் பண்ணைகளுக்காகத் தரிசு நிலங்கள், பாடசாலைகளுக்குச் சொந்தமான காணிகள், பள்ளிவாசல்கள் மற்றும் கோயில்களுக்கு உரிமையான காணிகள் எல்லாம் கபளீகரம் செய்யப்பட்டுவிட்டன.

இந்து மயானத்தைச் சுற்றியுள்ள காணிகளை விட்டுவைப்பார்களா? அவையும் போய்விட்டன. மயானத்துக்கான வழி அடைபட்டுவிட்டது.

இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு கிராம மக்கள் பலமுறைப்பாடுகளைச் செய்தார்கள். எதுவித பலனும் ஏற்பட வில்லை!

இறால் பண்ணை உரிமையாளர்களுடன் அன்பாக பேசி வழியை விட்டுத் தரக் கோரினார்கள். அவர்களின் மனம் இளகவில்லை.

கிராம மக்களுக்கு ஒரே கவலை. இந்தச் சமயத்தில் எவராவது ஒருவர் காலமாகி விட்டால் அவரின் சடலத்தை எப்படி மயானத்துக்குக் கொண்டு சென்று அடக்கம் செய்வது?

கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில் பேரிடி விழுந்தது. கிராமத்திலுள்ள முதியவரொருவர் மரணமானார். கிராம மக்களுக்குச் சோகத்தோடு ஏக்கமும் சேர்ந்துகொண்டது. பிரேதத்தை மயானத்தில் அடக்கம் செய்ய வேண்டுமே? எப்படி?

இரண்டு தினங்கள் கடுமையாக யோசனை செய்தார்கள். ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

படகு ஒன்றில் பிரேதத்தை ஏற்றி கடல் வழியாக இறுதியாத்திரையை நடத்தினார்கள். நீண்ட தூரம் படகில் சென்று மயானத்தை அடைந்தார்கள். அங்கே பிரேதத்தை அடக்கம் செய்தார்கள்.

இந்தச்சம்பவத்துக்குப் பின்னர் கிராம மக்களிடம் ஆவேசம் பிறந்தது. மயானத்துக்குச் செல்லும் தரை வழியை எப்படியும் பெற்றே ஆக வேண்டும் என்ற எழுச்சி அவர்களிடம் ஏற்பட்டு அது வலுவடைந்தது.

கோரிக்கை விடுத்தார்கள். மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவி, ஆராய்ச்சிக் கட்டுப் பிரதேச சபைத் தலைவர் கே.தட்சணாமூர்த்தி, முந்தல் பகுதி மேலதிக பிரதேசச் செயலாளர் எஸ்.எம்.மலிக் ஆகியோருக்குக் கிராம மக்களின் கோரிக்கைக்குக் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இவர்கள் நேரடியாக மயானப் பகுதிக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர். மயானத்தைச் சுற்றி இருந்த இறால்பண்ணை உரிமையாளர்களை அழைத்து சுமுக முடிவுக்கு வருமாறு கோரினார்கள். பண்ணை உரிமையாளர்கள் இணங்கவில்லை. பாதையொன்றை விட்டுக்கொடுக்க அவர்கள் முன்வரவில்லை.

அதனை அடுத்து அமைச்சர் நவவி தலைமையிலான குழுவினர் மறுபடியும் மயானப் பகுதிக்குச் சென்றனர். கிராம மக்களும் உடன் சென்றனர். "எமக்கு விமோசனம் தாருங்கள்....! எமது உறவினர்களின் பிரேதங்களை மயானத்துக்குக் கொண்டு சென்று அடக்கம் செய்ய உதவுங்கள்" என கிராம மக்கள் அமைச்சரிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் வற்புறுத்தினார்கள்.



மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவி, ஆராய்ச்சிக் கட்டுப் பிரதேச சபைத் தலைவர் கே.தட்சணாமூர்த்தி, முந்தல் பிரதேச மேலதிக செயலாளர் எஸ்.எம்.மலிக் ஆகியோர் கிராம மக்களுடன் சென்று மயானத்தைப் பார்வையிடுகின்றனர்.

பிரேத அடக்கத்துக்குக் கூடப் பிரச்சினையா? அமைச்சர் நவவிக்குப் பொறுக்க முடியவில்லை. முந்தல் பிரதேச மேலதிக செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

"பிரதான பாதையிலிருந்து மயானம் வரைக்குமான பாதை உடனடியாக அமைத்துக் கொடுக்கப் பட வேண்டும். அப்பாதையின் அகலம் ஆகக் குறைந்தது 10 அடியாவது இருக்க வேண்டும். நீதியான முறையில் பாதையைப் பெற முயற்சி செய்யுங்கள். முடியாவிட்டால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வேண்டிய காணியைச் சுவீகரித்துக் கிராம மக்களுக்கு மயானப் பாதையை அமைத்துக் கொடுங்கள்" இப்படி அமைச்சர் நவவி பணிப்புரை விடுத்தார்.

புத்தளத்தில் மயானப் பாதை கிடைப்பதற்கு ஒரு மனித உயிர்க் காணிக்கை தேவைப்பட்டிருக்கிறது. இதுதான் உலகம் என்பதா, தமிழனின் தலைவிதி என்பதா?

ஏ.எஸ்.புல்கி

## இறால் உற்பத்தி வீழ்ச்சி

புத்தளம் பகுதியிலுள்ள இறால் பண்ணைகளில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நோய் காரணமாக இறால் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதிகரித்த வெப்பம் காரணமாகவே நோய் ஏற்படுகிறது.

நோய் காரணமாக அறுவடை காலத்துக்கு முன்னரே இறால் அறுவடை செய்யப்பட்டுவிடுகிறது. இப்படி முன் கூட்டி அறுவடை செய்யப்படும் இறால் ஏற்றுமதிக்கு அருகதையற்றதாகி விடுவதால் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. அதனால் ஏற்றுமதி மூலம் கிடைக்கக்கூடிய அதிக வருமானம் கிடைப்பதில்லை. பெரும் பாலும் நட்டமே ஏற்படுவதாகப் பண்ணைச் சொந்தக்காரர்கள் கூறுகிறார்கள்.

முன்னர் ஒரு கிலோ இறால் 650 ரூபா முதல் 750 ரூபா வரை ஏற்றுமதியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்டது.

இப்போது அந்தக் கொள்விலை 350 ரூபா முதல் 500 ரூபா வரையாகக் குறைந்துவிட்டது.









